வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்

Email : news@eelanadu.lk
மலர் : 03
28.08.2022 ஞாயிற்றுக்கிழமை
இதழ் : 264
பக்கங்கள் : 20




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria - றியா பணப்பரிமாற்றம்
Western Union - வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.




**08** மக்களின் பணத்தில் அரசியல்வாதிகளின் சொகுசு வாழ்க்கை



**09** கோட்டாபய ராஜபக்ஷவை பிரதமராக்க முயற்சியா?




**10** ஜெயலலிதா மரணம்: இப்போதும் சூழ்ந்திருக்கும் ஆறு சர்ச்சை கேள்விகள்



**11** ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை

# சீன உளவுக் கப்பலின் வருகையால் இலங்கை-இந்திய உறவில் விரிசல்!

## ஒப்புக்கொள்கிறார் இலங்கைத் தூதுவர்



கொழும்பு, ஓக. 28

சீனாவின் யுவான் வாங் 5 உளவுக் கப்பல் இலங்கை விஜயம் இலங்கை - இந்திய உறவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான இவ்வாறான நம்பிக்கையீனங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் சீன கண்காணிப்புக் கப்பலை அனுமதித்த கொழும்பின் முடிவு குறித்து டில்லி ஏமாற்றமடைந்துள்ள

19

# கோட்டாவை பாதுகாக்கவே போராட்டக்காரர்கள் கைது!

## ரணிலைச் சாடுகின்றார் பொன்சேகா



கொழும்பு, ஓக. 28

"நாட்டைவிட்டு விரட்டியடிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இலங்கையில் அடைக்கலம் கொடுத்து அவரைப் பாதுகாக்

19

# வெளிநாடு செல்லும் ரஞ்சன்

கொழும்பு, ஓக. 28

ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள்பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க வெளிநாடு செல்ல உள்ளார் என தெரியவருகிறது.

இரண்டு வாரங்கள் தங்கியிருப்பதற்காக அவர்

19

# ஜேர்மன் வெளியுறவு அமைச்சுடன் 6 தமிழ்க் கட்சித் தலைவர்கள் பேச்சு

## தமிழ் மக்களின் பிரச்னைகள், அரசியல் தீர்வு குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஓக. 28

ஜேர்மன் வெளிவிவகார அமைச்சின் பிரதானிகளுடன் ஆறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இணையவழி மூலம் சந்திப்பு நடத்தியுள்ளனர்.

தமிழ் மக்களின் பிரச்னைகள் குறித்தும் நிரந்தர அரசியல் தீர்வு குறித்தும், ஐ. நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்தும் இதன் போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஜேர்மன் வெளிவிவகார அமைச்சின் ஆசிய பிராந்தியத்திற்கான தலைவர் திருமதி சபின் சிட்லர் மற்றும் இலங்கைக்கான விசேட அதிகாரி மரியோ கியோரி ஆகியோருடன் ஆறு தமிழ் கட்சி தலைவர்கள் இணையவழி மூலம் கலந்துரையாடினர்.

இதில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர்.சி. வி. விக்னேஸ்வரன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன்,

19

# ரஞ்சனுக்கு ஏழு ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது!

கொழும்பு, ஓக. 28

ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க 7 வருடங்களுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது என நீதி அமைச்சர் கலா

19

# செல்வச்சந்நிதி மஹோற்சவம் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஓக. 28

வரலாற்றுப் புகழ்பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன்

19

# மீண்டும் எரிபொருள் வரிசை 2 நாட்களில் முடிவுக்கு வரும்!

கொழும்பு, ஓக. 28

எரிபொருள் விநியோகத்தில் சிக்கல் ஏற்பட்டதை அடுத்து மீண்டும் ஏற்பட்டுள்ள வரிசை முறைமை இரு நாட்களில் முடிவுக்கு வரும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

விநியோகத்தில் ஏற்பட்ட தொய்வு, இறக்குவதில் தாமதம் மற்றும் பணம் செலுத்துவதில்

19

# அரசாங்க நிறுவனங்களில் திறமையற்ற ஊழியர்கள்!

## எரிசக்தி அமைச்சர் விசனம்

கொழும்பு, ஓக. 28

அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்களை மறுசீரமைப்பது அவசியம் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்துக்கு சொந்தமான நிறுவனங்களின் வீழ்ச்சிக்கு அரசியல் தீர்மானங்கள்,

19

# இலங்கையில் குழந்தைகள் பசியுடன்தான் நித்திரைக்கு!

## ஐ.நா சிறுவர் அமைப்பு கவலை



கொழும்பு, ஓக. 28

இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் உள்ள குழந்தைகள் 'பசியுடன் படுக்கைக்குச் செல்கிறார்கள்', ஏனைய

19

# ரோக்கியோவில் இந்தியப் பிரதமரை ரணில் சந்திப்பதற்கு வாய்ப்பில்லை

கொழும்பு, ஓக. 28

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேவின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக ரோக்கியோ செல்லும் இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் உத்தியோகபூர்வ சந்திப்பில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் குறித்து இதுவரை தகவல்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தரப்புக்கள்

19

# கடன் மறுசீரமைப்பு விவகாரம் இலங்கை அரசின் பக்கமே பந்து

கொழும்பு, ஓக. 28

சீனாவிடம் பெற்ற கடன்களை மறுசீரமைக்கக் கோரும் இலங்கைக்கு, சீனா வழங்கியுள்ள புதிய பதில் தொடர்பில், இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச நாணய நிதியத்துடன் முக்கிய பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வரும் நிலையில், இலங்கையின்

19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது!

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் அவர் வெளிநாடுகளில் தங்கியிருக்கும்போது ஏற்படும் செலவுகள் பற்றி பலரும் தத்தமக்கு தெரிந்தவாறு சொல்லியும் எழுதியும் வருகின்றனர்.

அவர் சிங்கப்பூரில் இருந்து தாய்லாந்து சென்றபோது அதற்கான விமானப் பயணத்திற்கான பணத்தை யார் செலுத்தினார்கள் என்று ஒரு ஊடக சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் பந்துல குணவர்த்தனவை ஊடகவியலாளர்கள் கேட்டபோது, அவர் அதுபற்றி தெரியவில்லை என்றும் அறிந்து சொல்கின்றேன் என்றும் கூறியிருக்கலாம். ஆனால் அவரும் 'அதில் என்ன, அவர் முன்னாள் ஜனாதிபதி என்பதால் அவருக்கு இருக்கும் அனுகூலங்களைப் பயன்படுத்தி அரசாங்கமே செலவிட்டிருக்கலாம்' என்று நினைத்தாரோ தெரியவில்லை. முன்னாள் ஜனாதிபதி என்ற நிலையில் அவர் பெறக்கூடிய அனுகூலங்களைப் பற்றியும் சொல்லிவிட்டு அரசாங்கமே செலுத்தியதாக அமைச்சர் சொல்லியிருந்தார்.

ஆனால், அப்படியல்ல, அந்தப் பயணங்களுக்கான செலவை அவரது புதல்வரே ஏற்றார் என்ற செய்தியை பின்னர் தகவல் திணைக்களம் தெரிவிக்கவேண்டியதாயிற்று.

அரசாங்கம் செலவிட்டிருந்தாலும் அதில் தவறு காண முடியாது. ஆனால், அவரது குடும்பமே இந்தச் செலவை செய்கின்றபோது அதனை தெளிவுபடுத்தவேண்டியது தகவல் திணைக்களத்தின் பொறுப்பானது.

அமெரிக்காவில், அதுவும் நாஸாவில் பணியாற்றும் அவரது ஒரே புதல்வருக்கு தனது தந்தையின் பயணச் செலவை செலுத்துவது என்பது பெரிய விடயமே அல்ல. அதுமாத்திரமன்றி, சிங்கப்பூரில் அவர் 24 நாட்கள் தங்கியிருந்தபோது அதற்காக ஆறு கோடி ரூபாவுக்கும் மேல் செலவிடப்பட்டதாகவும் முன்னர் ஒரு செய்தி வெளிவந்திருந்தது. அவர் சிங்கப்பூரில் தங்கியிருந்த ஹோட்டலில் ஆகக் கூடியது 400 டொலர் அளவிலேயே ஆகக்கூடிய அறை வாடகை அறவிடப்படுவதாகவே அந்த ஹோட்டலின் இணையத் தளத்தில் இருக்கின்றது. எங்கிருந்து இந்த ஆறு கோடி வந்தது என்பதும் தெரியவில்லை.

இவையல்ல இப்போது நாம் சொல்ல வருவது. அவர் விரைவில் தாயகம் திரும்பவிருப்பது பற்றி ஏற்கனவே இந்தப் பத்தியில் பார்த்திருந்தோம்.

அவர் அவ்வாறு தாயகம் திரும்பியதும் அவரை தமது கட்சியில் இணைத்துக்கொண்டு அவருக்கு முக்கிய பதவியையும் வழங்குவதற்கு விமல் வீரவன்ஸ தரப்பு முயன்று வருவதாகவும், அதற்கான பேச்சுக்களை அவர்கள் தங்களுக்கிடையில் நடத்தி முடித்துவிட்டதாகவும் கொழும்பு செய்தி ஒன்று தெரிவித்தது.

அதனால்தான் அவர் தாயகம் திரும்பியதும் அவரை தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்கு கொண்டு வந்து, பின்னர் அவரையே பிரதமராக நியமிக்கவும் பொதுஜன பெரமுன திட்டமிட்டுவருவதாக ஒரு செய்தி திட்டமிட்டு பரப்பப்படுவதாக மற்றுமொரு செய்தி தெரிவித்தது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி அவரால் மாத்திரம் ஏற்பட்டதல்ல என்றும், அது அவர் ஜனாதிபதியாக பதவியேற்றபோதே ஏற்படத் தொடங்கியிருந்தது என்றும், அவர் பதவியேற்றபோது நாட்டின் டொலர் கையிருப்பு ஒரு சில வாரங்களுக்கான எரிபொருள் இறக்குமதிக்கு மாத்திரமே போதுமானதாக இருந்தது என்றும் வாதிட்டுவரும் சிலர், அவரை இப்போதும் சிங்கள-பௌத்த காவலராகவே பார்க்கின்றனர் என்றும் அந்த கொழும்பு செய்தியைச் சொன்ன ஊடகர் தெரிவித்தார்.

இதேவேளை, ராஜபக்ஷ குடும்பத்தில் ஒருவருக்கு அமைச்சரவையில் இடம்கொடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அவருக்கு நெருக்கமான ஒருவர் மூலம் தூது விடப்பட்டதாகவும், ஆனால் அவர் அதனை முற்றாக நிராகரித்துவிட்டதாகவும் மற்றுமொரு தகவல் தெரிவித்தது. அப்படி ராஜபக்ஷ குடும்பத்தில் ஒருவருக்கு அமைச்சர் பதவி வழங்கினால் 'அரகலய' விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடங்கலாம் என்று எச்சரித்த ரணில், நாட்டில் மக்கள் என்ன மனநிலையில் இருக்கின்றார்கள் என்பதை நாடிபிடித்துப் பார்ப்பதில் வல்லவரான மகிந்த ராஜபக்ச, அதனை நாடிபிடித்துப் பார்த்துவிட்டு அப்படியொரு நேரம் வரும்போது தாராளமாக தனக்கான இடத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று ரணில் சொல்லியனுப்பியிருக்கிறாராம்.!

**- ஊர்க்குருவி**

# சைவ ஆலயங்களில் தமிழ்த் தோத்திரங்களும் அதிகளவில் இசைக்கப்படுதல் அவசியமானது

## செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக. 28

நல்லூரில் இவ்வாண்டு தொடக்கம் தமிழ் தோத்திரப் பாடல்களுக்கு அதிக முதன்மை வழங்கப்படும் நடைமுறையை கோவிலில் நிர்வாக அதிகாரி ஏற்படுத்தியுள்ளமை மகிழ்ச்சிக் குரியது எனக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதி அதிபரும், சைவச் சொற்பொழிவாளருமாகிய செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன் தெரிவித்துள்ளார்.

இந்த மாற்றம் ஏனைய ஆலயங்களிலும் ஏற்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஆகமம் சார்ந்த வழிபாடுகளில் பக்த ஸ்தோத்திரம் என்ற நிலையில் தமிழுக்கும் முதன்மை வழங்கப்பட வேண்டும். எமது மண்ணில் பக்தர்களின் மொழி தமிழாக இருக்கின்றமையால் இது அவசியமானது.



திருக்கேதீஸ்வரத்தில் சேர். கந்தையா வைத்தியநாதன் திருமுறைகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கினார். போர்த்துக்கேயரால் கோவில் அழிக்கப்பட்ட போது பெருமான் சொற்கோவிலாகவே திகழ்ந்தார் என்பதன் அடையாளம் அது.

ஒவ்வொரு சந்நிதானத்தில் பூசை இடம்பெறும் போதும் தேவாரம் புராணம் பாடும் மரபு திருக்கேதீஸ்வரத்தில் காணப்படுகிறது.

நல்லூரில் தற்போது திருமுறைப் பாடல்கள், அருணகிரியாரின் கந்தரனுபூதி மற்றும் திருப்புகழ் சேனாதிராஜ முதலியார் ஊஞ்சல் வித்துவான் வேந்தனாரின் பள்ளியெழுச்சி, நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் நல்லூர் திருப்புகழ், யோகி தவ.கஜேந்திரனின் நல்லூர்த் திருப்புகழ் மற்றும் நல்லைக் கந்தன் கீர்த்தனைகள் எனத் தமிழ்க் கடவுளுக்கு வேத மந்திரங்களுக்கு இணையாக தமிழ்ப் பாக்களும் இசைக்கப்படுகின்றன.

நமது தலைமை ஆலயங்கள் இரண்டிலும் ஏற்பட்ட இந்த மாற்றம் ஏனைய ஆலயங்களிலும் தொற்றுகை அடைய வேண்டும்.

வேத பாராயணத்தின் பின் திருமுறை பாராயணம் செய்து ஆசீர்வாதம் மேற்கொள்ளும் நடைமுறையும் ஏற்படுத்தப்பட வேண்டும். குருமாரும் ஆலய பரிபாலகர்களும் கூடிய கவனம் செலுத்த வேண்டிய விடயம் இது-என்றார். (அ)

# அமைச்சரவை தீர்மானத்துக்கு எதிராக அடிப்படை உரிமை மனு

கொழும்பு, ஒக. 28

பெற்றோலியத்தை நேரடியாக இறக்குமதி செய்வதற்கு, விற்பனை செய்வதற்கு, வழங்குவதற்கு அல்லது விநியோகிப்பதற்கு நிறுவனங்களுடன் நீண்ட கால ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை ரத்து செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொதுஜன பிரகதிசீலி சேவக சங்கமய, அதன் தலைவர் பந்துல சமன் குமார மற்றும் இணை செயலாளர்களான சஞ்சீவ கமகே மற்றும் ஜயந்த பரேகம ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

பிரதிவாதிகளாக பிரதமர் தினேஷ் குணவர்தன, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனக் களஞ்சியசாலை நிறுவனம் மற்றும் சட்டமா அதிபர் உட்பட 18 அமைச்சரவை அமைச்சர்கள் உட்பட 28 பிரதிவாதிகள் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

எரிபொருள் உற்பத்தி செய்யும் நாடுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு நேரடியாக எரிபொருளை கொள்வனவு செய்வதற்கும் இறக்குமதி செய்வதற்கும் விநியோகிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் அமைச்சரவை அமைச்சர்கள் தீர்மானம் எடுத்துள்ளதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிகவும் இலாபகரமான பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உட்பட பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் தனியார் மயமாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் பொதுமக்களும் பாரிய பாதகத்தையும் நட்டத்தையும் சந்திப்பதாக சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர்கள், தமது அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

எனவே அந்தந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களை தனியார் மயமாக்கும் அமைச்சரவை தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதை தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்குமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளது. (அ)

# 9 வயது மகளுக்கு சூடு வைத்து சித்திரவதை செய்த தாய் கைது!

கொழும்பு, ஒக. 28

தனது 9 வயது மகளுக்கு சூடு வைத்து கொடூரமாக சித்திரவதை செய்த தாயை பல்லேவெல பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர் அத்தனகல்ல நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டபோது, எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

வபாதமுல்ல, கலேலியா பகுதியைச் சேர்ந்த மொஹமட் ரிஷாய் பாத்திமா என்ற மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தாயினால் சித்திரவதைக்கு உள்ளான மகள், கைகால்களில் பலத்த தீக்காயங்களுடன் வத்துப்பிட்டிவல ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சிறுமியின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

பக்கத்து வீட்டில் உள்ள பெண்ணிடம் சிறுமி கூறிய தகவலொன்றிற்காக, தனது மகளைக் கொடூரமாக தாக்கியதுடன், கரண்டியை சூடாக்கி கை, கால்களில் சூடு வைத்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சித்திரவதை செய்யப்பட்ட சிறுமி குடும்பத்தின் மூத்த மகள். அவருக்கு ஒரு இளைய சகோதரனும் சகோதரியும் உள்ளனர். சிறுமி சித்திரவதை செய்யப்பட்டபோது இளைய சகோதரனும் சகோதரியும் வீட்டில் இருந்ததாகவும் தந்தை வேலைக்குச் சென்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கம்பஹாவில் துப்பாக்கி சூடு; ஐவர் கைது

கொழும்பு, ஒக. 28

கம்பஹா பிரதேசத்தில் அழகு நிலைய மொன்றில் நபரொருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பெண் ஒருவர் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் கொனஹேன முகாம் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 23 மற்றும் 39 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும், பெத்தியாகொட, மாகேவிட்ட மற்றும் கொட்டுகொட பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது மேலதிக விசாரணைகளை கம்பஹா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# திருக்கோணேஸ்வரர் நிர்மாண பணிகளுக்கான தடை குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்!

## தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 28

**திருக்கோணேசுவரர் ஆலய நிர்மாணப் பணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கும் விடயம் தொடர்பில் உடனடியாக தொல்பொருள் அமைச்சின் கவனத்துக்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுப்பதாக தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் பேராசிரியர் மனவிதானய தெரிவித்தார் என தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் கூறினார்.**

தொல்லியல்துறை பேராசிரியர் புஷ்பரட்ணத்தின் ஏற்பாட்டில் தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் பேராசிரியர் மனவிதானவுக்கும் நல்லை ஆதீன முதல்வர் மற்றும் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆகியோருக்கும் இடையில் நேற்று விசேட சந்திப்போன்று நல்லை ஆதீனத்தில் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பின்போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவித்த கலாநிதி ஆறு திருமுருகன், முக்கியமாக கீரிமலையில் ஜனாதிபதி மாளிகைக்கு அண்மையில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் மூன்று கோவில்கள் நீண்டகாலமாக பூசை வழிபாடுகள் இடம்பெறாது உள்ளன. எனவே அந்த மூன்று கோயில்களிலும் உடனடியாக பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு கடற்படையினர் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருடனும் கலந்துரையாடி அதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருக்கின்றோம்.

அதேபோல் கீரிமலையில் சமாதிகள் சிலவும் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. அவற்றையும் பெற்றுத் தருவதற்கு உதவவேண்டும் எனக் கோரிக்கை விடுத்ததோடு திருகோணமலை மாவட்டத் தில் வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோணேஸ்வரர் ஆலய கட்டுமானப் பணிகளுக்கு தொல்பொருள் திணைக்களத்தினரால் தடை விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கூறினோம். தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் இந்த விடயத்தை உடனடியாக அமைச்சு மட்டத்துக்கு தெரியப்படுத்தி தீர்வை தான் பெற்றுத் தர முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் முல்லைதீவு மாவட்டத்தில் குருந்தூர் மலை நீண்ட காலமாக சைவ மக்களால் வணங்கப்பட்டு வந்த நிலையில் வேறு சில கட்டுமானப் பணிகள் இடம்பெறுகின்றன. எனவே அந்த விடயங்களை நிறுத்தி உரிய தீர்வை பெற்று தரவேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தோம். எனினும் திருகோணமலை விடயம் தொடர்பில் உடனடியாகத் தான் அமைச்சு மட்டத்திற்கு தெரியப்படுத்தி தீர்வைப் பெற்று தர முயற்சிப்பதாக அவர் தெரிவித்தார் - என்றார். (அ-03)

# செப்ரெம்பர் 18க்கு பின்னர் அரிசி ஒரு கிலோ 290 ரூபா!

## அரிசி ஆலை உரிமையாளர்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 28

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் ஒரு கிலோ அரிசியை 290 ரூபாவுக்கு விற்பனை செய்ய வேண்டும் என அரிசி ஆலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இளவேனிற் காலத்தில் ஒரு கிலோ நெல் 140 ரூபா தொடக்கம் 150 ரூபா வரையிலான விலைக்கு கொள்வனவு செய்ய வேண்டியிருப்பதனால் ஒரு கிலோ நெல்லின் விலையை விட இரு மடங்காக அரிசியை விற்பனை செய்ய வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

மின்சாரக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் அதிகரிப்பதால் அரிசியின் விலையை உயர்த்தவேண்டிய நிலை ஏற்படும்.

நெல் சந்தைப்படுத்தல் சபை நெற்பயிர்களை அதிக விலைக்கு கொள்வனவு செய்வதால் தாங்களும் நெல் விலையை அதிகரிக்கவேண்டியுள்ளது.

தற்போது அரசின் கட்டுப்பாட்டு விலைக்கே அரிசி விற்பனை செய்யப்பட்டாலும், செப்ரெம்பர் 18ஆம் திகதிக்குப் பிறகு அரிசியின் விலையை முடிவு செய்யவேண்டும் - என்றனர்.

நெல் சந்தைப்படுத்தல் சபை இந்த வருடத்தின் நெல் அறுவடையில் 30,000 மெற்றிக் தொன்களை கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளதுடன் கடந்த சனிக்கிழமையன்று கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு 5000 மெற்றிக் தொனைத் தாண்டியுள்ளது.

சபையினால் கொள்வனவு செய்யப்படும் நெல் மொத்த அரிசியாக மாற்றப்பட்டு பி.எம்.பி. அரிசி என்ற பெயரில் குறைந்த விலையில் சந்தைக்கு விடப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். (அ)

# ஐந்தரை கோடி ரூபாய் பெறுமதியான தங்க ஆபரணங்களுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஓக. 28

ஐந்து கோடியே 50 லட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களைக் கடத்தி வந்த இலங்கைப் பிரஜை ஒருவர் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் சுங்க அதிகாரிகளால், இந்தச் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

கொழும்பு, மாலபே பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதான இந்த நபர், சுமார் 10 ஆண்டுகளாக பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் தொழில் புரிந்து வந்த நிலையில் நாடு திரும்பியுள்ளார்.

பாரிஸ் நகரில் இருந்து நேற்றுக் காலை 5.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த யு.எல்.564 என்ற ஸ்ரீலங்கன் விமானத்தில் இந்த நபர் தங்கத்தைக் கடத்தி வந்துள்ளார்.

விமான நிலையத்தில் பரிசோதனைகள் எதுவுமின்றி வெளியேறும் கிறீன் சனல் வழியாக வெளியேற முயற்சித்த போதே சந்தேகநபரைச் சுங்க அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.



சந்தேக நபரிடம் இருந்து 2.414 கிலோ கிராம் தங்க ஆபரணங்களைச் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

அவற்றில் 586.8 கிராம் எடை கொண்ட தங்கச்சங்கிலியை சந்தேகநபர் கழுத்தில் அணிந்திருந்தார் எனவும், ஏனைய தங்க ஆபரணங்கள் அவரது பயணப் பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டன எனவும் சுங்க அதிகாரிகள் கூறினர். (அ)

# போதைப்பொருளுடன் கைதானவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 28

கிரிந்திவெல பொலிஸாரால் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சந்தேக நபரை பொலிஸார் விசாரணைக்காக மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்றுகொண்டிருந்தபோது, குறித்த பகுதியில் உள்ள கல்வெட்டுக்கு அருகில் மோட்டார் சைக்கிள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் சந்தேக நபர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

உயிரிழந்தவர் 27 வயதுடையவர் எனவும் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் ஆலோசனையின் பேரில் கம்பஹா பிரதேசத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான இரண்டு பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

உயிரிழந்தவரின் சடலத்தின் பிரேதப் பரிசோதனையின் பின்னர் சம்பந்தப்பட்ட இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# போராட்டக்காரர்கள் கைதுக்கு சு.கவும் வன்மையான கண்டனம்

கொழும்பு, ஓக. 28

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டனர் என்று சந்தேகிக்கப்படும் நபர்களைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்வது நல்ல விடயமல்ல என்று முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் அவசியமற்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, பயங்கரவாதத் தடைச் சட்டம் உடனடியாக இல்லாதொழிக்கப் படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை கொள்கை ரீதியாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதில் தாம் உடன்படுகின்றார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# கோட்டாவின் பாதையில் பயணிக்கின்றார் ரணில்

## விஜித ஹேரத் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 28

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இடைக்கால வரவு-செலவுத் திட் டத்தில் பாதுகாப்புச் செலவுகளுக்காக 11.4 வீதமான நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், கமத்தொழில், மீன்பிடி, சுற்றுலா ஆகிய துறைகளுக்கு 4.89 வீதமான நிதியே ஒதுக்கப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய மாத்திரமல்லாது, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஒரே வழியில் பயணிக்கின்றார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடியால் கழுத்து நெரிக்கப்பட்டிருக்கும் நாட்டில் அறிவுள்ள உணர்வுபூர்வமான ஜனாதிபதி ஒருவர் இப்படியான வேலையை எந்த வகையிலும் செய்யமாட்டார்.

குறிப்பாக நாட்டில் காணப்படும் பொருளாதார நிலைமைக்கு அமைய கமத்தொழில், மீன்பிடி,சுற்றுலா ஆகிய துறைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

இந்த நிலையில் பொருளாதாரத்தை மீள் உருவாக்கம் செய்வதற்காக பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டவில்லை. அரசியல் பிரதானிகளை பாதுகாத்து, அடக்குமுறையை தொடர்ந்தும் முன்னெடுப்ப தற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளவே பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பயங்கரவாதம் இல்லாத சந்தர்ப்பத்தில் கண்ணீர் புகைக்குண்டுகள், தோட்டாக்கள்,தண்ணீர் தாரைத் தாக்குதல் வாகனங்களுக்காக அதிகளவில் செலவிடுவது ஜனாதிபதி



ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்பார்ப்பதாக இருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய மாத்திரமல்லாது, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஒரே வழியில் பயணிக்கின்றார். இது எந்த வகையிலும் நாட்டுக்கு உகந்ததல்ல.

குறிப்பாக பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் கூடுதல் கவனத்தை செலுத்தினால் மட்டுமே நாடு ஒன்றின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும். பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் எந்த அவசியத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உணரவில்லை-என்றார். (அ)

# அரசியலுக்கு வருகிறார் சந்திரிக்காவின் மகன்!

## புதிய கட்சியில் இணையத் தீர்மானம்

கொழும்பு, ஒக. 28

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் புதல்வர் விமுக்தி குமாரதுங்கவை அரசியலுக்குக் கொண்டு வருவதற்கான திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தலைமையிலான புதிய ஸ்ரீலங்கா கட்சியின் கீழ் இது இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகிறது.

புதிய கட்சி தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் அமைச்சர்களுடனும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கலந்துரையாடியுள்ளார்.

மேலும், ஸ்ரீ லங்கா பொது ஜன முன்னணியின் சில பழைய உறுப்பினர்களுக்கு தொலைபேசி செய்திகளை வழங்கி, இது குறித்து தம்முடன் கலந்துரையாட வருமாறு அவர் கோரியுள்ளார்.

புதிய கட்சியில் இணையுமாறு விமுக்தி குமாரதுங்க



வுக்கு ஏற்கனவே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் குமார வெல்கம எம்.பி. குறிப்பிட்டார்.

புதிய கட்சியின் தலைமையகம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி பத்தரமுல்லையில் ஸ்தாபிக்கப்படும் எனவும் அதன் பின்னர் அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு நாடு முழுவதும் கட்சி அமைப்புகள் ஸ்தாபிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

கட்சியை ஸ்தாபிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதியும் ஆசி வழங்குவதாக உறுதியளித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# கோழி இறைச்சி, மீன் விலை; அடுத்த வாரத்தில் தீர்மானம்

கொழும்பு, ஒக. 28

கோழி இறைச்சி மற்றும் மீனின் விலை குறைப்பு தொடர்பில் அடுத்த வாரம் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

சந்தையில் கோழி இறைச்சியின் விலை மற்றும் அதற்கான விலை தொடர்பான தரவுகள் நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சிமெந்து, கம்பி மற்றும் இரும்பு ஆகிய வற்றின் விலைகளை குறைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் நளின் பெர்னாண்டோ கூறினார். (அ)

# மது விற்பனையில் ஏற்பட்டுள்ள சிக்கல்

கொழும்பு, ஒக. 28

மதுபானங்களின் தரத்தை உறுதிப்படுத்தும் ஸ்ரிக்கர்களை கலால் திணைக்களம் வெளியிடாததால் மதுபான விற்பனை தொடர்பில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த ஸ்ரிக்கர்கள் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதால், தற்போது நிலவும் பரிமாற்ற நெருக்கடி காரணமாக தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த ஸ்ரிக்கரில் தயாரிப்பின் கலவை, சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் வரி செலுத்துதல் மற்றும் பொருளின் அளவு ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், இந்தியாவில் இருந்து இந்த ஸ்ரிக்கர்களை மீண்டும் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கலால் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரான கலால் ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார். (அ)

# ஐந்து சிறுவர்கள் உட்பட எட்டு பேர் தனுஷ்கோடி மணல் திட்டில் மீட்பு!

சென்னை, ஒக. 28

படகு மூலம் அகதிகளாக தனுஷ்கோடிக்கு அடுத்த முதலாம் மணல் திட்டில் உணவின்றி குழந்தைகளுடன் தஞ்சமடைந்த இலங்கைத் தமிழர்கள் 8 பேரை பத்திரமாக மீட்ட மரைன் பொலிஸார் அவர்களை அரிச்சல்முனை கடற்கரைக்கு அழைத்து சென்று விசாரணைக்கு பின் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைத்தனர்.



இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கைத் தமிழர்கள் தனுஷ்கோடி கடல் வழியாக தமிழகத்துக்குள் அகதிகளாகசென்ற வண்ணம் உள்ளனர்.

தனுஷ்கோடியை அடுத்துள்ள முதலாம் மணல் திட்டில் குழந்தைகளுடன் இலங்கைத் தமிழர்கள் உணவின்றி தவித்து வருவதாக மீனவர்கள் அளித்த தகவலின் அடிப்படையில் நேற்று சனிக்கிழமை காலை மரைன் பொலிஸார் விரைந்து சென்று அங்கு தஞ்சமடைந்திருந்த இலங்கைத் தமிழர்களை பத்திரமாக மீட்டு மண்டபம் மரைன் காவல் நிலையம் அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர்.

மரைன் பொலிஸார் நடத்திய விசாரணையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தை சேர்ந்த ஜெயந்தி மற்றும் அவரது மூன்று குழந்தைகள், தலைமன்னாரைச் சேர்ந்த சசிகுமார் மற்றும் அவரது இரண்டு குழந்தைகள் மற்றும் மன்னாரை சேர்ந்த 65 வயது மூதாட்டி இந்துமதி என மொத்தமாக 8 பேர் நேற்று முன் தினம் இரவு ஒரு பைபர் படகில் புறப்பட்டு நேற்று அதிகாலை சுமார் 2 மணி அளவில் தனுஷ்கோடி முதலாம் மணல் திட்டில் வந்திறங்கியமை தெரியவந்தது.

தமிழகத்திற்கு அகதிகளாக வந்து தமிழக முகாம்களில் தங்கியுள்ள தங்களது உறவினர்களுடன் சேர்ந்து வாழலாம் எனத் தனுஷ்கோடி வந்ததாகவும், தங்களை அழைத்து வந்த படகு தனுஷ்கோடி முதல் திட்டில் இறக்கிவிட்டு சென்றதாகவும், அதிகாலை முதல் உணவின்றி கடும் சூறைக்காற்றுக்கு மத்தியில் உயிரை பாதுகாத்துக் கொண்டு தாங்கள் அணிந்திருந்த ஆடைகளைக் காட்டி அருகில் மீன்பிடித்து கொண்டிருந்த மீனவர்களிடம் உதவி கோரிய நிலையில் மரைன் பொலிஸார் இவர்களை மீட்டுள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி முதல் நேற்று வரை இலங்கையில் இருந்து 157 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சஜித்தின் சகோதரி துலாஞ்சலி நாட்டைவிட்டு வெளியேறினார்!

கொழும்பு, ஒக. 28

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் சகோதரியான துலாஞ்சலி பிரேமதாஸ தனது குடும்பத்துடன் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் தனது இரண்டு பிள்ளைகளுடன் நாட்டில் இருந்து அவர் புறப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட வீட்டை எரித்த சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அண்மையில் அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது.



சம்பவத்தின்போது அவர் அங்கு இருந்தார் என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணை நடத்தப்பட்டது.

இந்தநிலையிலேயே சஜித் பிரேமதாஸவின் சகோதரி நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# மின்சார ஓட்டோக்கள் மாற்றுவதற்கு ஒகஸ்ட் 30 வரை விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, ஒக. 28

எரிபொருளில் இயங்கும் ஓட்டோக்களை மின்சார ஓட்டோக்களாக மாற்ற ஆர்வமுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம் என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஒகஸ்ட் 30ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் பாவனை தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்னைக்குத் தீர்வாக மின்சார ஓட்டோக்களைப் பயன்படுத்துவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

Eelanadu
28.08.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# சர்வதேச சமூகம்?

சர்வதேச சமூகம் என்பது ஒரு பொதுவான அவதானம். உண்மையில் சர்வதேச சமூகம் என்பது ஒன்றல்ல – அது பல வகையானது. பல நிலைப்பாடுகளுடையது. தமிழர்களுடைய நிலையில், மேற்குலக நாடுகளும், அந்த நாடுகளை மையம்படுத்தி இயங்கிவரும் அமைப்புக்களும்தான் சர்வதேச சமூகம் என்னும் வகைக்குள் அடங்குகின்றது. அதிலும் குறிப்பாக சொல்வதானால், அமெரிக்காதான் இதில் பிரதானமானது. கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, மற்றும் ஸ்கண்டினேவிய நாடுகள் பலவும் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்காக குரல் கொடுத்தாலும் கூட, அமெரிக்காவின் அசைவின்றி, இவற்றின் அசைவுகளுக்கு முக்கியத்துவம் இருக்கப் போவதில்லை.

அடுத்தது மேற்படி நாடுகளில், அரசாங்க ஆதரவுடனும். பொதுமக்களின் நன்கொடைகளாலும் இயங்கிவரும் தன்னார்வ கொடை நிறுவனங்கள். அமெரிக்க அரசாங்கத்தின் உதவி நிறுவனமான, அமெரிக்க உதவி நிறுவனம் (USAID) இதில் முதன்மையானது. அதே போன்று மேற்குலக நாடுகளில் இயங்கிவரும் சர்வதேச அரசுசாரா நிறுவனங்களும் நாம் குறிப்பிடும் சர்வதேச சமூகம் என்பவற்றில்தான் அடங்கும். இவை அனைத்தினதும் ஆதரவையும், இணைந்துத்தான், நாம் சர்வதேச சமூகத்தின் ஆதரவு என்பதை, விளங்கிக் கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின்போது, அமெரிக்கா உட்பட்ட பலவேறு மேற்குலக நாடுகளும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டையே கொண்டிருந்தன. அமெரிக்கா இராணுவ தளபாட உதவிகளை நிறுத்தியிருந்தபோதிலும், அமெரிக்காவின் பயங்கரவாதம் தொடர்பான நிலைப்பாடு, நோர்வேயின் சமாதான முன் னெடுப்புக்களை பலவீனப்படுத்துவதற்கு பயன்பட்டதுடன், ராஜபக்ஷக்களுக்கு யுத்தத்தை வெற்றிகொள்ள முடியுமென்னும் நம்பிக்கையையும், கூடவே, யுத்தத்தின் மீதான உற்சாகத்தையும் ஏற்படுத்துவதற்கு பயன்பட்டது.

1997இல், அமெரிக்கா விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு சர்வதேச பயங்கரவாத இயக்கமாக பட்டியலிட்டு, தடைசெய்தது. அதனை இப்போதும் கடைப்பிடித்து வருகின்றது. 2006இல், ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சர்வதேச பயங்கரவாத இயக்கமாக பட்டியிலிட்டது. கனடாவும் இதே ஆண்டு விடுதலைப் புலிகளை தடைசெய்தது. இவைகள் சமாதான முன்னெடுப்பை பலவீனப்படுத்தியதுடன், ராஜபக்ஷக்களை பலப்படுத்தியது. இந்த பின்புலத்தில்தான் ராஜபக்ஷக்கள் நம்பிக்கையுடன் யுத்தத்தை முன்னெடுத்தனர். பாரிய அழிவுகளுடன் யுத்தம் முடிவுற்றது. இப்போது அந்த இறுதி யுத்தத்தின் போதான போர் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில்தான் பேசப்படுகின்றது.

கடந்த பன்னிரெண்டு வருடங்களாக பல்வேறு விடயங்கள் பேசப்பட்டாலும் கூட, இதுவரையில் ஆக்கபூர்வமாக எதுவும் நடக்கவில்லை. சர்வதேச சமூகத்தின் அழுத்தங்கள் பெரியளவில், கொழும்மை கட்டுப்படுத்துவதற்கு பயன்பட்டதாகவும் கூறிவிட முடியாது. அதே வேளை கடந்த பன்னிரெண்டு வருடங்களில் போரால் உருக் குலைந்து போன வடக்கு கிழக்கு தமிழ் மக்களை சமூக மற்றும் பொரு ளாதார ரீதியில் பலப்படுத்துவதற்கு அமெரிக்க உதவி நிறுவனம் மற்றும் மேற்குலக அரசுசாரா நிறுவனங்கள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய பணி களை ஆற்றவில்லை. தென்னிலங்கைக்கே, அதிக கொடைகள் வழங்கப்படுகின்றன. அமெரிக்க உதவி நிறுவனம் ஒரு சில திட்டங்களை வழங்கியிருந்தாலும் கூட, கொழும்பு மைய, நிறுவனங்களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தில் (நிதியளவில்) ஒரு பங்கு கூட வடக்கு கிழக்கிற்கு வழங்கப்படுவதாக தெரியவில்லை.

இது அமெரிக்க உதவி நிறுவனத்தின் தவறா அல்லது திட்டங்களை கையாளும் உள்ளூர் அதிகாரிகளின் தவறா? உண்மையில் வடக்கு கிழக்கிற்கு பிரத்தியேக முக்கியத்துவத்தை அமெரிக்க உதவி நிறுவனம் வழங்கியிருக்க வேண்டும். ஆனால் அப்படி நடக்கவில்லை. தமிழ் அரசியல்வாதிகளும் இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதில்லை. சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு என்பது, வெறுமனே ஜெனிவாவில் பிரேரணைக்கு வாக்களிப்பதுடன் முடிந்துவிடும் ஒன்றல்ல, அதற்கு மப்பால், போரினால் உருக்குலைந்து போன, வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் அபிவிருத்திக்கு, சமூதாய முன்னேற்றத்திற்கான பங்களிப்பையும் வழங்குவதாகும்.

# “தோலின் நிறத்தால் உலகம் எங்களை மறந்துவிட்டதா…?”

## ஐ. நா. அதிகாரியின் ஆதங்கம்



கிழக்கு ஆபிரிக்க நாடான எதியோப்பியாவின் திக்ரேய் பிராந்தியத்தில்(Tigray region) கடும் போர் நடைபெற்று வருகிறது. உலக சுகாதார நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் டெட்ரோஸ் கெப்ரேயஸ் (Tedros Ghebreyesus) திக்ரேய் பிராந்தியத்தைச் சேர்ந்தவர். எதியோப்பியாவின் முன்னாள் அமைச்சரும் ஒரு மருத்துவ ஆராய்ச்சியாளருமாகிய அவர் இரண்டாவது ஐந்து ஆண்டு காலத்துக்கு மீண்டும் உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் பதவியில் நீடிக்கிறார். உலகம் எதிர்கொண்ட பெருந் தொற்று நோய்க் காலத்தில் உலகளாவிய சுகாதார நலன்களைத் திறம்பட நிர்வகித்து வழிநடத்திய நெருக்கடிகாலச் சேவையாளராக அவர் மதிக்கப்படுகிறார்.



போர் நடைபெற்று வரும் திக்ரேய் பிராந்தியம் குறித்த தனது கவலைகளை அவர் அடிக் கடி செய்தியாளர்களோடு பகிர்ந்து வருகிறார். அங்கு வசிக்கின்ற தனது குடும்பத்தவர்கள் நெருங்கிய உறவினர்கள், எங்குள்ளனர், என்னவாகினர் என்பது தனக்குத் தெரியாது என்று அவர் கூறியிருக்கிறார். ”அவர்கள் உயிருடன் உள்ளனரா என்பது எனக்குத் தெரியாது. பட்டினியில் வாடுகின்ற அவர்களுக்குப் பணம் அனுப்பவும் வழி கிடையாது” என்று அவர் செய்தியாளர் சந்திப்பில் கூறியிருக்கிறார்.

”பூமியில் மிக மோசமான பேரழிவு திக்ரேயில் (Tigray) நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆனாலும் உலகத் தலைவர்கள் அங்கே தங்கள் கவனத்தைச் செலுத்தாமல் இருப்பதற்கு திக்ரேய் மக்களின் தோலின் நிறம் தான் காரணமா? ”-என்று கேள்வி எழுப்பியிருக்கிறார் டெட்ரோஸ் கெப்ரேயஸ்.


சுமார் ஆறு லட்சம் திக்ரேய் இன மக்கள் கடந்த 21 மாதங்களாக வெளி உலகத் தொடர்புகள் துண்டித்த நிலையில் பேரழிவுக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். உலகின் எந்தத் தலைவர்களும் அந்த மக்களைப் பற்றி அண்மைய மாதங்களில் எதுவும் பேசியதாக நான் அறியேன். ஏன்? - என்று அவர் கேட்கிறார். உக்ரைன் யுத்தத்தை உலக நெருக்கடிகளுக்கு எல்லாம் தாய் என்ற ஒப்புக் கொண்ட அவர், ஆயினும் உலகின் முழுக் கவனமும் உக்ரைன் நோக்கித் திரும்பியமைக்கு இனவாதம் காரணமாய் இருந்ததா? என்று வினவியுள்ளார். திக்ரேய் பிராந்தியம் தொடர்பான அவரது கருத்துகளை எதியோப்பிய அரசு மறுத்து வருகிறது.

சுகாதார அமைப்பின் தலைவர் பக்கச் சார்பாக - ஆதாரமற்ற - குற்றச் சாட்டுகளை உலக அரங்கில் முன்வைக்கிறார் என்று அது கண்டித்துள்ளது.

பஞ்சம் பட்டினியால் அறியப்படும் எதியோப்பிய நாட்டின் திக்ரேய் பிராந்திய மக்கள் இப்போது பெரும் போர் அவலங்களில் சிக்கியுள்ளனர். பிராந்தியத்தில் அமைதியை உருவாக்க உழைத்தவர் என்ற ரீதியில் எதியோப்பியப் பிரதமர் அபி அஹமட்டுக்கு (Abiy Ahmed) 2019 இல் சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஆனால் அடுத்த ஆண்டிலேயே அவர் தனது நாட்டுக்குள்ளே ஒரு பகுதியாகிய திக்ரேய் பிராந்தியத்தின் மீது இராணுவ நடவடிக்கைக்கு உத்தரவிட்டார். அங்கு அவர் ஓர் உள்நாட்டு யுத்தத்தையும் இனப்படுகொலையையும் முன்னெடுத்து வருகிறார் என்ற குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ளன.

திக்ரேய் பிராந்தியத்தின் அதிகாரத்தைத் தக்க வைத்திருந்த ”திக்ரேய் மக்கள் விடுதலை முன்னணியின் (Tigray People’s Liberation Front - TPLF)கிளர்ச்சிப் படைகளுக்கும் எதியோப்பிய மத்திய அரசாங்கப் படைகளுக்கும் இடையே அங்கு நடந்த சண்டைகளில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். சுமார் இரண்டு மில்லியன் திக்ரேய் மக்கள் வீடு வாசல்களை இழந்துள்ளனர். மேலும் பல்லாயிரக் கணக்கான எதியோப்பிய மக்களை அந்தப் போர் பட்டினிச் சாவின் விளிம்பில் தள்ளியுள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




# பத்மநாபா ஐயர் அவர்கள் பற்றியது

பகிர்வு -44

**கணபதி சர்வானந்தா**

இ. பத்மநாப ஐயர் அவர்கள் பற்றியும், அவரது பங்களிப்புப் பற்றியும் இலக்கிய உலகம் நன்கறியும். ஈழத்து இலக்கியத்துக்குப் பெரும் பங்காற்றி வரும் இலக்கிய ஆர்வலர். ஈழத்து இலக்கிய உலகில் மட்டுமல்ல, தமிழக இலக்கிய உலகிலும் நன்கு அறியப்பட்ட அவர் "ஐயர்" என அன்போடு அழைக்கப்படுகிறார். இலக்கியப் பங்களிப்புக்காக இயல் விருது பெற்றவர். அவர் பன்முகப் பார்வை கொண்ட நவீன படைப்பிலக்கிய முயற்சிகளின் உந்துசக்தி எனச் சொல்லப்படுகின்றார். வெளியீட்டுத் துறையிலும் ஆக்கங்களைத் தொகுப்பதிலும் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவர். தரமான, நேர்த்தியான பல நூல்களைப் பதிப்பித்திருக்கிறார். . நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்து இலக்கியத் துறையிலும் வெளியீட்டுத் துறையிலும் தனக்கென ஒரு முத்திரையை பதித்துக்கொண்ட அவர் பல அறிவியல்–சார் கட்டுரைகளை "இ. பத்மநாபன்" என்ற பெயரில் எழுதியுள்ளார். ஈழத்துப் பத்திரிகைகளில் அவரது கட்டுரைகள் பல வெளிவந்திருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் பிறந்த அவர் தற்பொழுது இலண்டனில் வசித்து வருகிறார்



அவர் பற்றிய ஒரு முகநூல் பதிவொன்றைப் பின்வருமாறு கண்டேன். அதனை உங்களோடு பகிர வேண்டும் என எண்ணியதன் விளைவு...

அண்மையில் லண்டன் சென்றிருந்தபோது அவரது இல்லத்திற்கும் ஔவையும் நானுமாகச் சென்றிருந்தோம். நண்பன் சபேசன் எங்களை அங்கு அழைத்துச் சென்றிருந்தான். இரண்டு அறைகள்,ஒரு சமையலறை மட்டுமுள்ள அந்தச் சிறிய குடியிருப்பில் ஒருவர் மட்டும் படுக்கக் கூடிய சிறிய கட்டில். அதுதான் அவர் இருக்க,படுக்க,வாசிக்கவென எல்லாவற்றுக்குமான ஒரு இடம். வீட்டின் மற்றெல்லா இடங்களையும் முழுமையாக ஆக்கிரமித்திருந்தவை ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவந்த மிக அரிய நூல்களின் குவியல்கள்.அவரது கட்டிலிலிலும் கூடக் கணிசமான அளவைப் புத்தகங்கள் பிடித்திருந்தன. புத்தகங்களைத் தமது வாசிப்புக்கும் ஆய்வுக்குமாகச் சேகரிப்பதையும் அவற்றைக் கவனமாகப் பேணிப்பாதுகாப்பதையும் மிகவும் ஆர்வமுடனும் அர்ப்பணிப்புடனும் செய்பவர்கள் பலரை நான் கண்டிருக்கிறேன். ஆனால் அவற்றுடன் வாழ்வதையே தனது பெரும்பேறாகக் கருதி வாழ்பவரென்று அவரைத் தவிர நானறிந்தவரை வேறு யாரையும் சொல்லி விட முடியாது. இருக்கும் ஒவ்வொரு நூலையும் ஒரு தடவையாவது எடுத்து தொட்டுப் பார்க்க நினைத்தாலே குறைந்தபட்சம் ஒருவார காலத்துக்கு மேலான நேரம் பிடிக்கும் என்று சொல்லுமளவுக்குப் பல முக்கியத்து வம் வாய்ந்த எண்ணுக்கணக்கற்ற அரிய நூல்கள் அவரடமிருப்பவை. இதற்கும் மேலாக இன்னமும் புதிது புதிதாக பல நூல்களை அவர் தேடித்தேடி வாங்கிக் கொண்டிருக்கிறார்.

1979 என்று ஞாபகம். அப்போது மாத்தளையிலிருந்த அவருடன் கடிதமூலம் தொடர்புகொண்டு கணையாளி இதழ்களைத் தபால்மூலம் பெறத்தொடங்கியதில் ஆரம்பித்த அவருடனான உறவு இன்றுவரை தொடர்கிறது. நல்ல நூல்களை நண்பர்களுக்கு அறிமுகப் படுத்துதல், அவை கிடைக்க வழிசெய்தல் என ஆரம்பித்த அவரது பணி, தனது பதிப்பகத்தினூடாகக் கவனத்துக்குரிய வகையில் நூல்களை பதிப்பித்து பதிப்புத்துறையில் ஒரு ஒரு தனித்துவமான போக்கை உருவாக்கியது, நூல்களை அடுத்தடுத்த பரம்பரையினருக்காக ஆவணப்படுத்தும் நூலகம் நிறுவனத்தின் இயக்குனராகச் செயற்படல் என்று தனது வயது, உடல்நிலை என்பவை பற்றி அதிகம் அலட்டிகொள்ளாமல் தொடர்ந்து இன்றுவரை இயங்கி வருபவர் அவர். பத்மநாப ஐயர் என்ற பெயர் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் பரவலாக அறியப்பட்ட பெயர். அவர் பற்றி இவ்வாறு நிறையவே எழுதலாம். இன்று பிறந்தநாள் காணும் எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய பத்மநாப ஐயர் அவர்களுக்கு எனது மனமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துக்கள்! வயது ஏற ஏற இளமை கூடிவரும் அவர் இன்னமும் பலகாலம் உடல் நலத்துடனும் இளமையுடனும் வாழ்ந்து தமிழ் மொழி பற்றியும் தமிழிலக்கியம், வரலாறு, பண்பாடு, மானிடவியல் என்று எண்ணிறைந்த துறைகள் சார்ந்த நம்மவரதும் பிறரதும் படைப்புக்களை ஆவணமாக்கும் அவரது பெரும்பணி சிறப்புடன் அமைய எனது வாழ்த்துக்கள்! அந்தச் சந்திப்பின் போது அவருடன் எடுத்து கொண்ட ஒளிப்படம் இது! எனச் சொல்லி மேற் காணும் இ.பத்மநாப ஐயர் அவர்கள் பற்றிய குறிப்பை இ.விக்கினேஸ்வரன் அவர்கள் தனது முகநூலிலே மேற்கண்டவாறு எழுதியிருக்கிறார்.

ஈழத்து இலக்கியம் என்ற விடயம்பற்றிப் பேசும்போது ஐயர் அவர்கள் பங்களிப்பு பற்றி அதிகம் தெரியவரும். ஏதோ ஒரு வகையில் அவர் அதற்கு உதவி புரிந்திருப்பார்.

அவரது முயற்சியால் பல ஈழத்து நூல்கள் தமிழகத்தில் வெளிவந்திருக்கின்றன. அவர் 1960 களில் மலேசிய, இலங்கை எழுத்தாளர்களின் படைப்புக்கள் அடங்கிய "அக்கரை இலக்கியம்", 1980களில் "பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்" என்ற தொகுப்பு, தொடர்ந்து "மரணத்துள் வாழ்வோம்" என்ற கவிதைத் தொகுப்பு, தேடலும் படைப்புலகமும் என்ற ஓவியர் மாற்கு பற்றிய ஆய்வு நூல் ஆகியன வெளிவருவதற்கு முன்னின்று உழைத்தவர். 1990 இல் புலம்பெயர்ந்து இலண்டனில் வாழ்ந்து வருவதுடன் தமிழர் நலன்புரிச் சங்கம் என்ற அமைப்புக்கு ஊடாக "1995 ஆம் ஆண்டு அறிக்கையும் 10 ஆவது ஆண்டு நிறைவுச் சிறப்பு மலரும்" என்னும் தொகுப்பை 1996 இல் வெளியிட்டார். மேலும் இவர் 1997 இல் "கிழக்கும் மேற்கும்" 1998 இல் "இன்னுமொரு காலடி" 1999 இல் "யுகம் மாறும்" 2001 இல் "கண்ணில் தெரியுது வானம்" ஆகிய ஐந்து தொகுப்புகளை உலகத் தமிழ் இலக்கியப் பரப்பில் முன்வைத்துள்ளார். – என இணையத்தில் கண்டேன்.

அவரைப் பற்றி தமிழகத்தைச் சேர்ந்த இலக்கியகர்த்தாவான சுந்தர ராமசாமி அவர்கள் தனது கட்டுரை ஒன்றில் பின்வருமாறு எழுதியிருப்பதையும் இங்கு குறிப்பிடலாம் என்று எண்ணுகிறேன்.

"தமிழக எழுத்தாளர்களுக்கும், இலங்கை எழுத்தாளர்களுக்கும் இடையே நேரடி உறவுகளையும், புத்தக வாயிலான உறவுகளையும் உருவாக்கியிருப்பதிலும் தமிழகப் புத்தகங்களை ஈழத் தமிழ் வாசகர்களுக்கும், ஈழத் தமிழ்ப் புத்தகங்களைத் தமிழக வாசகர்களுக்கும் கொண்டு செல்ல அவர் ஆற்றியிருக்கும் பங்கு பெரியது. அதற்கு மேல் ஈழத்து வாசகர்களின் தரமான வாசிப்பை அவர் மேலேடுத்துச் சென்றிருக்கிறார். ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் இடையிலான கலாசாரப் பரிவர்த்தனையை விரிவுபடுத்தியதில் அவர் ஆற்றிய பங்கு முக்கியமானது. அவ்வாறு ஒரு பங்கினைத் தாம் ஆற்றியிருக்கிறோம் என்பதை இலங்கை எழுத்தாளர்களுக்கும், தமிழக எழுத்தாளர்களுக்கும் ஒன்றாகக் கூடி அவருக்கு எடுத்துச் சொல்ல வேண்டி இருக்கிறது. செய்த காரியத்தின் முக்கியத்துவத்தை அவரும், புதிய தலைமுறையைச் சேர்ந்த வாசகர்களும், அறியும்படி செய்வது இரண்டு நாடுகளிலும் வாழ்ந்துவரும் அறிஞர்களின் கடமையாகும். – என அவர் பதிவு அமைந்திருந்தது.

# இந்தவார ராசிபலன் 28.08.2022 - 03.09.2022

**நல்ல நேரம்: 7.30 - 9.00** **ராகு காலம் : 04.30 - 06.00** **திதி : பிரதமை**

**ஓகஸ்ட் 28 ஞாயிற்றுக்கிழமை**
**சுபகிருது வருடம் - ஆவணி 12**

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

திடீர் வரவுகளால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். தொழிலில் இருந்த தடைகள் அகலும். எதிர்ப்புகள் விலகும். மனதை வாட்டிய பிரச்னைகள் விலகும். அந்நிய நபர்களின் வழியே உங்கள் வாழ்க்கைக்குரிய வழிகளைக் காண்பீர்கள். எதிர்பாலினரிடம் எச்சரிக்கைத் தேவை. வருமானம் பல வழிகளிலும் வர ஆரம்பிக்கும். குடும்பத்தின் நலனுக்காக செலவுகள் செய்வீர்கள்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

உங்கள் முயற்சிகள் விறு விறுப்பாக நடந்தேறும். யோசித்து செயல்படுவீர்கள். பிள்ளைகளின் திருமண, வேலை வாய்ப்பு முயற்சியில் இறங்குவீர்கள். எதிர்பாராத வருவாய் உண்டாகும். குடும்பத்தினருடன் உண்டான பிரச்னைகள் முடிவிற்கு வரும். உங்களுக்கு எதிராக செயல்பட்டவர்கள் உங்களைத் தேடிவந்து சரணடைவார்கள். எதிர்பாலினரின் நட்பில் எச்சரிக்கையாக இருப்பது நன்மையாகும். ஒரு சிலருக்கு வெளிநாட்டிற்கு செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். அந்நியர்களின் ஆதரவால் நினைத்ததை சாதிப்பீர்கள். எதிர்பாராத வரவுகளால் உங்களிடம் உற்சாகம் அதிகரிக்கும். கடினமான முயற்சிகளும் எளிதாக வெற்றியாகும். செல்வாக்கு உயரும். அரசு வழியிலான முயற்சிகள் ஆதாயமாகும். பண வரவில் இருந்த தடைகள் விலகி நீங்கள் எதிர்பார்த்த வரவு வந்து சேரும். செலவுகள் அதிகரித்தாலும் அதை உங்களால் சமாளிக்க முடியும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

நினைத்ததை நடத்தி சாதிப்பீர்கள். உங்கள் செயல்களில் வேகம் அதிகரிக்கும். குடும்ப நலனில் அக்கறை கூடும். வாழ்க்கைத் வார்த்தைகளில் வேகம் இருக்கும். வேலை பளு கூடும். உத்தியோகத்தில் உங்களுடைய விருப்பம் நிறைவேறும். அந்நியர்களால் ஆதாயம் காண்பீர்கள். வேலைகளில் ஆர்வத்துடன் செயல்படுவீர்கள். ஒரு சிலருக்கு வெளிநாட்டிலிருந்து வேலைக்குரிய தகவல் வரும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

செலவுகள் அதிகரிக்கும். நினைத்ததை அடைவீர்கள். செயல்களில் நிதானம் தேவை.அரசு வகையிலான எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நெருக்கடிகள் அதிகரித்தாலும் நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். முயற்சிகளில் முன்னேற்றம் உண்டாகும். சுய ஆற்றல் வெளிப்படும். உங்களை விட்டு விலகிச் சென்றவர்கள் மீண்டும் உங்களைத்தேடி வருவார்கள். உடல் நலனில் கூடுதல் கவனம் தேவைப்படும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

எதிர்பார்ப்பு நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். செலவுகளால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். பிள்ளையின் திருமண முயற்சியில் ஈடுபடுவதுடன் விருந்து விசேஷங்களுக்கு சென்று வருவீர்கள். நீண்ட நாள் பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். வரவு அதிகரிக்கும். தொழில், உத்தியோகத்தில் இருந்த சங்கடங்கள் விலகும். குடும்பத்தில் சுபச்செலவுகள் உண்டாகும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

உங்கள் செயல்களில் தடை தாமதம் என்ற நிலை இருக்கும். முயற்சிகளில் வெற்றிகளைக் காண்பீர்கள். தொழில் உத்தியோகத்தில் உங்கள் எண்ணம் நிறைவேறும். உங்களுடைய செல்வாக்கு உயரும். எதிர்பாராத செலவுகள் தோன்றும். உத்தியோகத்தில் உங்கள் நிலை உயரும். நீங்கள் விரும்பிய ஒன்று உங்கள் கைக்கு வரும். பொன் பொருள் வரவால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

நினைத்ததை அடைவீர்கள். உங்கள் செயல்களில் சிரமங்கள் உண்டாகும். தெளிவான முடிவுகளை மேற்கொள்ள முடியாமல் போகும். எதிரிகளால் உண்டான தொல்லைகள் விலகும். தம்பதிகளுக்கிடையே கருத்து மோதல் உண்டாகும். கவனமுடன் செயல்படுவதும் நிதானமாக இருப்பதும் நன்மையாகும். செல்வாக்கு உயரும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

முயற்சிகளில் தடைகளையும் தேவையற்றப் பிரச்னைகளையும் சந்திப்பீர்கள். மனதில் குழப்பம் அதிகரிக்கும்.பணத்தடை விலகும். பொருளாதார நிலை உயரும். விரும்பியவற்றை அடைவீர்கள். ஆரோக்கியம் மேம்படும். வியாபாரத்தில் உண்டான தடைகள் நீங்கும். லாபம் அதிகரிக்கும். செயல்களில் நிதானமும் கவனமும் தேவை. எதிர்பார்த்தவற்றில் அனுகூலம் ஏற்படும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

எண்ணங்கள் நிறைவேறும். திட்டமிட்டு செயல்படுவதால் முயற்சிகள் வெற்றியாகும். பொருளாதார நிலை உயரும். நெருக்கடிகளுக்கு ஆளாவீர்கள். தேவையற்ற சங்கடங்களால் மனதில் பயம் தோன்றும். பிரச்னைகளைக் கண்டறிந்து சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் ஏற்பட்ட நெருக்கடி விலகும். நீங்கள் நினைத்ததை அடைவீர்கள். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.


## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

செயல்களில் வெற்றிகளைக் காண்பீர்கள். நினைத்ததை அடைவீர்கள். குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். புதிய முயற்சிகள் பலிதமாகும். தடைபட்டிருந்த செயல்களில் முன்னேற்றத்தைக் காண்பீர்கள். கணவன் மனைவி உறவு பலப்படும். திட்டமிட்டு சில செயல்களில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். பண வரவு அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

முயற்சிகள் எளிதாக நிறைவேறும்.வார்த்தைகளில் கவனம் தேவை. தொழிலில் இருந்த தடைகள் விலகும். நெருக்கடிகள் விலகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உயர் அதி காரிகளால் பாராட்டப் படுவார்கள். உங்களுடைய புத்திசாலித்தனத்தால் நினைத்ததை சாதிப்பீர்கள். அரசு வழியிலான எதிர்பார்ப்புகள் நிறைவேறும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் விலகும். எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். தம்பதிகளுக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் விலகும்.

# தனது படைகளை இங்கே குவித்து சிறிது சிறிதாக போர்ச் சூழலை உருவாக்குவதே சீனாவின் திட்டம்



சென்னை மடல்

-பகவான் சிங்-

உங்கள் ஒவ்வொருவரிடமும் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள் கிறேன். தவறாகப் பேசிவிட்டேன். சீனாவின் ஆதிக்கம் ஒரு ஆக்கிரமிப்பாக மாறிவிடும் என்றும் அதனால் நீங்களும் உங்க ளின் நாடும் பெரு மளவு பாதிப்புக்குள்ளாவீர்கள் என்றும் அஞ்சி ஏதேதோ புலம்பிவிட்டேன் பலமுறை. இந்த அப்பாவியை மன்னித்துவிடுங்கள்.

எனக்கு ஞானோதயம் கிடைத்துவிட்டது. என் நீண்டகால நண்பர் ஜகனிடமிருந்து உண்மையின் வெளிச்சம் என் மேல் பாய்ச்சப்பட்டுள்ளது. அடேங் கப்பா! என்ன ஒரு தெளிவு, அறிவு, தொலைநோக்குப் பார்வை!

அவர் என்னிடம் தொலைபேசி மூலம் கொழும்பிலி ருந்து சில நாட்களுக்கு முன் பேசியபோது கூறிய அந்த ஆழ்ந்த கருத்து என்னைப் பிரமிக்க வைத்தது. என்னிடம் விதைக்கப்பட்டிருந்த அறியாமை என்ற பூதத்தை விரட்டியடித்துவிட்டது. நான் இப்போது கண் விழித்துக்கொண்டேன்.

ஆழ்ந்த ஞானத்தில் திளைத்த அவரது கடுமையான குரலில், எனது இனிய நண்பர் ஜகன், இலங்கைக்குள் சீனப் பிரவேசத் திற்கு எதிரான இந்திய மனநிலையை ஒரு வகை மனநோய் என்று வர்ணிக்கிறார். "இலங்கை யின் விவகாரங்களில் செல்வாக்கு செலுத்த இந்தி யாவுக்கு வாய்ப்புகள் இருந்தன, ஆனால் அவை அனைத்தையும் கோட்டை விட்டுவிட்டு, இப்போது இந்நாட்டு வளர்ச்சிக்கு உதவ சீனா முன்வரும்போது அதைத் தடுக்க விரும்புகிறது இந்தியா. இது சரியல்ல" என்று ஜகன் என்னிடம் கூறினார். சீனப் பாணியில் வளர்ச்சி என்பது குறித்து விளக்கிய அவர், "சீனா சமீபத்திய தொழில்நுட்பத்தை மட்டுமல் லாமல், பல் துறை வளர்ச்சிக்குத் தேவையான அனைத்தையும் முன் வைக்கும். அது எங்களுக்குத் தேவை. இந்த வளர்ச்சித்ஷ திட்டங்களின் மூலம் சீனா, இலங்கையை விழுங்கிவிடப் பார்க்கிறது என்று கூறுவது தவறானது" என்று கூறினார்.

நண்பர் ஜகனின் இந்தத் திட்டவட்டமான கருத்து என் கண்ணோட்டத்தையும் மாற்றித் தெளிவுபடுத்தி யுள்ளது. சீன எதிர்ப்பு மன நிலை மற்றும் இலங்கையின் நீண்ட கால வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களைத் தடுக்கும் தீய சக்திகளின் ஆதிக்கத்தால் மழுங்கிப்போயிருந்த என் மூளை செல்களை மீண்டும் கூர் தீட்டியுள்ளது.

"ஒரு தாய்ப் பிள்ளைகள் நாம் என்றும் நம்முடையது தொப்புள் கொடி உறவு என்றும் வாய்ச் சவடால் பேசி என்ன பயன்? இது வெறும் வெற்றுப் பேச்சு" என்று ஜகன் சொன்னது என் கன்னத்தில் பளாரென்று அறைந் தது போல் இருந்தது. என் மனதில் இருந்த பல கேள்விகளுக்கு விடையும் கிடைத்தது.

'ஈழநாட்'டில் எனது முந்தைய கட்டுரையில் நான் குறிப்பிட்டி ருந்த, கொழும்பில் உள்ள உயர்மட்ட குடி யிருப்பு ஒன்றில் வசிக்கும் எனது தமிழ்த் தோழி, அந்த ஆடம்பரமான அடுக்குமாடி குடியிருப்புகளில் தொண் ணூறு சதவீதத்திற்கும் அதிகமான சீனக் குடும்பங்கள் குடியிருப்பது பற்றிக் கவலைப்படாதது ஏன் என்பது இப்போது எனக்குப் புரிகிறது.

அம்பந்தோட்டையில் யுவான் வாங் 5 நிறுத்துவது பற்றி அவர் ஏன் கேள்விப்பட்டிருக்கவில்லை. தனது டீனேஜ் மகனின் எதிர் காலச் சுதந்தர-குடியுரிமைக்கு சீனாவை ஒரு அச்சுறுத்தலாக ஏன் அவர் பார்க்கவில்லை என்பது புரிந்தது. சில அரசியல் தலைவர்க ளும் ஊடகங் களும் சீனக் கடன் வலை மற்றும் விரிவாக்க வாதத்தை ஒரு அச்சுறுத்தலாகப் பார்க்காமல் நிதி வரவுக்கான வாய்ப்புகளாகப் பார்ப்பது ஏன் என்றும் புரிகிறது.

இலங்கையில் வாழும் ஒரு சாதாரணக் குடிமகன், தன்னைச் சுற்றி, சாலைகளில், கடைகளில், அலுவல கங்களில், அண்டை வீடுகளில் என எல்லா இடங்களி லும் சீனர்களைப் பார்ப்பது குறித்து ஏன் கவலைப்படு வதில்லை என்பதும் எனக்குப் புரிகிறது. சிக்கல் என் பார்வையில் தான் உள்ளது என்பது தெரிகிறது. உங்கள் அழகான தீவில் சீனாவின் நகர்வுகள் குறித்து நான் தான் தவறாகக் கருத்து கொண்டிருந்தேன்.

எங்கள் ராமேஸ்வரம் கோயிலிலிருந்து வெறும் 40 நிமிட படகுச்சவாரி தூரத்தில் இல்லாமல் இந்துமா கடலில் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இலங்கை இருந்திருந்தால், யுவான் வாங் 5 அம்பாந்தோட்டை வருவதையோ சீனத் தூதர் நல்லூர் கந்தன் கோயில் வருவதையோ குறித்து நான் இத்தனை கவ லைப்பட்டி ருப்பேனா என்ற கேள்விக்கு நேர்மையான பதிலை என்னிடமே தேடவேண்டும். இதற்கான நேர்மையான பதில், நிச்சயமாக

'ஆம்' என்பது தான்.. 72 ஆண்டுகளாகத் தடையில் லாச் சுதந்தரத்தை அனுபவித்துள்ள ஒரு மனிதனாக, ஒரு வலுவான நாடு, சிறிய நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்தி, அதன் பொரு ளாதாரத்தைச் சீரழித்து, அரசி யல் குழப்பம் ஏற்படுத்தி அதகளம் செய்வதை எதிர்த்துக் குரல் கொடுத்துப் போராடவேண்டியது எனது கடமை என்று நான் பெருமையுடன் பிரகடனப்படுத்து கிறேன்.

இலங்கையில் சீனா தலையிடுவதை வெறும் வலுவான நாடு சிறிய நாட்டின் உள் நாட்டுச் சிக்கலைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு இலாபமீட்டாத் திட்டங்களுக்கு நிதியுதவி செய்து வருவது என்று மட்டும் பார்க்கமுடியாது. இந்தியாவின் சிறிய அண்டை நாடுகளான இலங்கை, பாகிஸ்தான், மாலைதீவுகள், நேபாளம், மியன்மார் ஆகியவற்றைத் தனக்கு அடிமை யாக்கிக் கொண்டு அதன் மூலம் இந்தியாவிற்கு நெருக்கடி ஏற்படுத்துவது தான் சீனாவின் தெளிவான திட்டம்.

இப்போது என் கொழும்பு நண்பர் ஜகன் மற்றும் செல்வாக்கு மிக்க யாழ்ப்பாணத் தமிழ்த் தலைவர்களிடம் ஒரு கேள்வி கேட்கவேண்டும். இந்தியாவிற்கு இத்தனை நெருக்கமாக இல்லா மல், இலங்கை, இந்துமா கடலில் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்திருந் தால்,ஷ சீனா இந்த அளவுக்கு முதலீடும் நிதியுதவியும் அளித்திருக்குமா, அக்கறை காட்டியிருக்குமா என்று கேட்டால், அவர்களின் நேர்மையான பதில் 'இல்லை' என்பதாகத் தான் இருக்கவேண்டும்.

ஆனால் அவர்கள் உண்மையை ஒப்புக்கொள்வார் களா என்பது சந்தேகமே. இப்போது என் கருத்துருவாக் கத்தின் அடுத்த பக்கத்தைத் திருப்புகிறேன். ஓகஸ்ட் 16 முதல் 22 என்ற குறுகிய காலகட்டம் அம்பாந்தோட்டை யில் தேவையான பொருட்களை நிரப்பிக்கொண்டு யுவான் வாங் 5 சென்று விட்டதாகப் படித்தேன். இந்தக் கப்பலின் வருகை குறித்து இந்தியாவின் எதிர்வினை சற்று மிகைப்படுத்தப்பட்டதாக இருந்ததாகக் கூறும் டில்லி பத்திரி கையாளர் ஒருவர், இதன் காரணமாக, தீவிர பாதுகாப்பின்மை, பதற்றங்கள் மற்றும் சுய ஐயம் ஆகியவற்றால் பீடிக்கப்பட்ட ஒரு நாடாக இந்தியா தன்னைக் காட்டிக்கொண்டுள்ளதாகக் குறிப்பிடு கிறார். அண்மைக் காலங்களில் எத்தனையோ கப்பல்கள் இலங் கைத் துறைமுகங்களில் நிறுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில், ஒரு வலுவான நாடான சீனா, 99 ஆண்டு குத்தகையின் காரண மாகத் தனக்குச் சொந்தமான ஒரு துறை முகத்தில் வந்து தன் கப்பலை நிறுத்தப்போவதாக அறி வித்தபோது சிறிய நாடான இலங்கை செய்யக்கூடியது எதுவுமில்லை என்பது அவரது வாதம். மேலும், பொரு ளாதாரச் சிக்கலின்போது முதலில் உதவிய ஒரே கார ணத்துக்காகத் தனது ஆணைகளுக்கெல்லாம் இலங்கை அடிபணியவேண்டும் என்று இந்தியா எதிர்பார்ப்பது பெரியண்ணன் மனப்பான்மை தான் என்றும் 2014 இல் பிரதம ராகப் பதவியேற்ற போது உறுதியளித்தபடி, நரேந்திர மோதி, அண்டை நாடுகளுடன் நட்புணர்வு டன் பழகி எதிர்வினை யாற்றி யிருக்க வேண்டும் என்றும் அவர் தன் வாதத்தை முன்வைக்கிறார்.

வளர்ந்த நாடுகளின் ராஜாங்க நடவடிக்கைகள், வள ரும் நாடுகளின் அச்சங்களின் அடிப்படையில் அமைய முடியாது என்று மற்றொரு வெளியுறவுக் கொள்கை 'நிபுணர்' கருத்து தெரிவித்துள்ளார். 76 ஆவது சுதந்தர தின விழாவின்போது செங்கோட்டை கொத்தளத்திலி ருந்து பிரதமர் கூறியது போல, இந்தியா ஒரு வளர்ந்த நாடாக வேண்டுமானால், ஒவ்வொரு அடியிலும் சுய ஐயமும் பதற்றமும் நிறைந்ததாக அன்றி, நன்னம்பிக்கை யுடன் பீடு நடை போட வேண்டும் என்று அவர் விளக்குகிறார். ஆனால் யுவான் வாங் 5 நிறுத்தத்திற்கான எதிர்வினையாக இந்தியா தனது அச்சம், பொறுமை யின்மை, சகிப்புத்தன்மையின்மை, நம்பிக்கையின்மை ஆகியவற்றை வெளிப்படுத்தும் விதத்தில் தான் நடந்து கொண்டது என்று நமது அந்த 'நிபுணர்' சுட்டிக்காட்டு கிறார்.

சோனியா காந்தி குடும்பத்தினரின் காங்கிரஸ் கட்சி, எம் ஜி ஆர்- ஜெயலலிதாவின் அதிமுக ஆகிய கட்சி களில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள், பின்னடைவுகள் குறித் தும் இந்தியாவின் உச்ச நீதிமன்றத்துக்கு வரவுள்ள புதிய தலைமை நீதிபதி குறித்தும் இந்த வாரம் என் ஈழநாடு வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள எண்ணியிருந்தேன். ஆனால்,

மேலே குறிப்பிட்ட 'நிபுணர்களின்' கருத்து குறித்து அசை போடுவது இப்போது முக்கியத்துவம் பெறுவ தால், உள் நாட்டு விடயங்களைப் பின்னொரு சமயத்திற்கு ஒத்திப்போடுகிறேன்.

தனது சுதந்தர தின உரையில் பிரதமர், அடுத்த 25 ஆண்டுகளில் இந்தியா வளர்ந்த நாடாக உருவாகத் தன்னைத் தயார் படுத்திக்கொள்ளவேண்டும் என்று தான் கூறினாரேயன்றி, தான் இப்போதே ஒரு வளர்ந்த நாடு என்றோ அது போன்றே நடந்துகொள்ள வேண்டும் என்றோ கூறவில்லை. சீன உளவுக் கப்பல் அம்பாந்தோட்டையில் நிறுத்தப்படுவதை எதிர்ப்பதால் இந்தியா தன்னை ஒரு பலவீனமான நாடாகக் காட்டிக் கொள்கிறது என்பதை ஏற்க முடியாது.

'ஹிந்தி-சீனீ பாயி பாயி' என்ற நேரு கால சித்தாந்தத் திலிருந்து இன்றைய டோக்லாம் மோதல் வரை, சீனா வின் வரலாற்றைக் கருத்தில் கொண்டு, தனது பாதுகாப்பு அச்சுறுத்தல் களை இந்திய வெளியுறவுத் துறை கோடிட்டுக் காட்டியிருந்தது என்பதே உண்மை.

இந்த 'நிபுணர்கள்' கருத்து தெரிவிக்கும் முன், சீனா, ஈரானி டம் பெற்ற எண்ணெயை அம்பாந்தோட்டையில் குவித்து வைத்தி ருப்பதையும் கருத்தில் கொள்ளட்டும். தூதர் க்வி,-யின் யாழ். பயணம் குறித்தும் சீனா விடம் விசுவாசம் காட்டும் இலங்கை, இந்தியாவுடன் நட்பு நாடுவதையும் கூட நினைவில் கொள்ளட்டும். டி என் ஜி டி(ட்ரான்ஸ்நேஷனல் கவர்ன்மென்ட் ஆஃப் தமிழ் ஈழம்) தனது நியூயோர்க் அலுவலகத்திலிருந்து வியாழனன்று வெளியிட்ட அறிக்கையில் 'இலங்கை பீஜீங்குக்குடன் இந்தியக் கறியைச் சேர்த்துச் சுவைக்க விரும்புகிறது' என்று குறிப்பிட்டுள் ளது. 2018 இல் அமெரிக்க துணை அதிபர் மைக் பென்ஸ் சீனா குறித்த தமது உரையில், அம்பாந்தோட்டை சீன ராணுவ முகா மாக மாற வாய்ப்புள்ளது என்று கூறியிருந்ததையும் டி என் ஜி டி மேற்கோள்காட்டியிருந்தது. ரணில் விக்ரமசிங்க 99 ஆண்டு குத்தகை ஒப்பந்தத்தில் கையெ முத்திட்டவுடன், டி என் ஜி டி, ஒரு கடல் சார் சட்ட நிறுவனத்தை அணுகி, சர்வதேச சட்டம், இறை யாண்மை, பொருளாதார அழுத்தம் ஆகியவை குறித்த ஆய்வு மேற்கொள்ளக் கோரியது. 2017 ஒக்ரோபர் 14 திகதியிட்ட அந்த ஆய்வறிக்கை, http://tgte-us.org/wp- content/uploads/2022/08/Expert-Opinion_Hambantota-Port-Project.pdf இல் கிடைக்கிறது. என் ஈழநாடு வாசகர்களை யும் டில்லியில் உள்ள 'நிபுணர்களை' யும் இந்த ஆய்வறிக் கையைப் படிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையிலான கப்பல் வழித்தடத்தில் 10 நாட்டிகல் மைல் தொலைவில் அம்பாந்தோட்டை துறைமுகம் அமைந்திருப்பதால், கடல்வழிப் பட்டுச் சாலையில் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது என்றும் வர்த்தக முதலீட்டுக் கண்ணோட் டத்தில் மட்டுமல்லாமல், புவியியல் ரீதியாக கேந்திர மற்றும் பாதுகாப்பு முக்கியத்துவமும் பெற்று விளங்குவ தாகவும் அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. இலங்கையைக் 'கடல்வழிப் பட்டுச் சாலையில் ஒளிவிடும் ஒரு முத்து' என்று 2015 இல் சீன அயலுறவுத் துறை அமைச்சர் வாங் யீ கொண்டாடியதில் வியப்பொன்றுமில்லை. அதனால் தான் சீன உளவுக் கப்பல் அம்பாந்தோட்டை வருவது குறித்து நான் கவலை கொண்டேன். இது ஒரு முறை வரவன்று என்றும் இந்தியாவைக் குறி வைத்து இப்பிராந்தியத்தில் சீனா செய்யவுள்ள விஷமத்தனங் களின் தொடக்கம் இதுவென்றும் உணர்ந்தேன். உங்களிடம் பல முறை 'புலம்பினேன்'. சீனா, ரனிலிடமிருந்து அம்பாந்தோட்டை துறை முகத்தையும் சுற்றியுள்ள 1500 ஏக்கர் நிலத்தையும் அபகரித்தது குறித்த ஒரு செய்தியும் 2018 ஜுலை நியூயோர்க் டைம்ஸ் இதழில் வெளியானதும் இங்கு நினைவு கொள்ளத்தக் கது.

நியூயோர்க் டைம்ஸின் இந்த அறிக்கை, சீனா எப்படி மூன்றாம் உலக நாடுகளுக்கு லாபமில்லாத் திட்டங்களுக்கு, அதிக வட்டியில் கடன்களைக் கொடுத்து(அந்த நாடுகளின் ஊழல் அரசியல்வாதிகளுக்கு லஞ்சம் கொடுப்பதன் மூலம்) தனது கடன் வலையில் அந்த நாடுகளைக் கபளீகரம் செய்கிறது என்பது குறித்து விளக்கியது. இதற்கு எதிர்வினையாற்றிய இந்தியாவின் முன்னாள் வெளியுறவுத் துறைச் செயலரும் தேசியப் பாதுகாப்பு ஆலோசகருமான சிவசங்கர் மேனன், "அம் பாந்தோட்டை துறைமுகத்தில் சீனாவின் முதலீட்டை நியாயப் படுத்த, சீனாவின் தேசியப் பாதுகாப்பு என்ற ஒரே ஒரு நிலைப் பாடு தான் உதவும்" என்றார்.

மகிந்த ராஜபக்ஷ தனது சொந்த மாவட்டத்தில் துறைமுக திட்டத்திற்கு நிதியுதவி செய்ய இந்தியாவை அணுகியபோது சிவசங்கர் மேனன் பொறுப்பில் இருந்தார். சாத்தியக்கூறு ஆய்வுகளை நடத்தி துறை முகம் லாபகரமானதல்ல என்று கண்டறிந்த பின்னர் இந்தியா கைவிரித்து விட்டது. ஆனால் சீனா இந்தத் திட்டத்தை அள்ளிக்கொண்டது. மேனன் சரியாகச் சுட்டிக் காட்டியது போல, அது பொருளாதார ரீதியில் லாபகரமாக இருக் கும் என்பதால் அல்ல,

மாறாக அது ஒரு முக்கியமான கடற்படைத் தளமாக இறுதி யில் பயனுள்ளதாக இருக்கும் என்பதால் தான் சீனா இதை முன்னெடுத்தது. இந்த செயல்பாட்டில், மகிந்த தனது பங்காக ஒரு பெரிய தொகையை லஞ்சமா கப் பெற்றார். அவரது 2015 பாராளுமன்றத் தேர்தல் பிரசாரத்திற்கு, சீன துறைமுக நிர்மாண நிதியிலி ருந்து ஒரு பெரிய தொகை சென்றதாக நியூயோர்க் டைம்ஸ்-ன் அந்தப் புலனாய்வறிக்கை, சுட்டிக் காட்டியுள்ளது.

இந்திய அயலுறவுத் துறை அமைச்சகத்தை விமர்சிக்கும் தில்லி 'நிபுணர்கள்', கடந்த சில தசாப்தங்களாக, குறிப்பாக ஈழப்போர் முடிந்த காலத்திலிருந்து சீனா, ராஜரீக-ராணுவக் கட்டமைப்பை இலங்கையில் அமைத்து வருவதையும் கூர்ந்து நோக்க வேண்டும். அப்போதைய அதிபர் மகிந்த ராஜபக்ஷ கோரிய கனரக ஆயுதங்களை இந்தியா வழங்க முடியாத நிலை யில், சீனாவும் பாகிஸ்தானும் ஓடி வந்து உதவின. இதனால், மே 2009இல் ஜெனரல் பொன்சேகா தலைமையிலான ராணுவம் தமிழ் விடுதலைப் புலிகளை அழிக்க முடிந்தது குறிப்பிடத்தக்கது.

2013 இல் சீனா- இலங்கை இடையிலான உறவு ராஜரீக உறவு என்னும் அளவுக்கு மேம்பட்டிருந்தது. அதாவது, இலங்கை யில் உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கான சீன முதலீடுகள் மற்றும் நெருக்கமான கடல்சார் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு என்பது தான் இதன் பொருள். ஜகன் உட்பட, என் இலங்கை நண்பர்களை யும் சீனாவிற்குச் சொகுசுப் பயணங்கள் மேற்கொண்ட நம் எம். பிக்களையும் கவர்கின்ற இந்த ஆடம்பரத் திட்டங்கள் மூலமாக எதிர்காலத்தில், தனது கட்டமைப்புகளையும் பணியாளர்களையும் பாதுகாக்க, படைகளைக் குவித்து சிறிது சிறிதாகப் போர்ச் சூழலை உருவாக்கி விடுவது தான் சீனாவின் திட்டம். இது நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வரும் கருத்துதான்.

அடிமைகளாகி சீனாவின் ஆடம்பரக் கட்டமைப்புகளைப் பிரமித்து ரசிப்பதை விட, கிராமத்தில் ஒரு பனை மரத்துக்குக் கீழ் நின்று சுதந்தரமாகக் கஞ்சி குடிப்பது இனிமையானது. ஜன நாயகத்தின் மதிப்பறிந்தோருக்கு பனை மரக் கஞ்சியின் சுவை புரியும்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# மக்களின் பணத்தில் அரசியல்வாதிகளின்

# சொகுசு வாழ்க்கை



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச சிங்கப்பூரில் இருந்து தாய்லாந்துக்கு சென்ற பிரத்தியேக விமானத்துக்கான கட்டணத்தை அரசாங்கமே செலுத்தியதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன முதலில் கூறிவிட்டு பிறகு அதை மறுதலித்தமை அண்மையில் சர்ச்சையொன்றைத் தோற்றுவித்திருந்தது.

ஆகஸ்ட் 16 செய்தியாளர் மகாநாட்டில் கோட்டாபயவின் தாய்லாந்து பயணம் தொடர்பாக செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த குணவர்தன முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் அவரின் பயணத்துக்கான செலவைக் கொடுப்பது அரசாங்கத்தின் சட்டரீதியான கடமையாகும் என்றும் தாய்லாந்துக்கு அவர் சென்ற விமானத்தின் கட்டணத்தை அரசாங்கம் செலுத்தியது என்றும் கூறினார்.

1986 ஆம் ஆண்டின் இல.4 ஜனாதிபதி உரித்துக்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஓய்வு பெற்ற சகல நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளுக்கும் சிறப்புரிமைகளும் விசேட வசதிகளும் இருக்கின்றன. அவர்கள் மரணமடைந்தால் அவர்களின் விதவை மனைவிமாரும் அவற்றுக்கு உரித்துடையவர்கள். அவர்களுக்கு கொடுப்பனவுகளும் செய்யப்படுகின்றன. முன்னாள் ஜனாதிபதிகள் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மைத்திரிபால சிறிசேனவுக்கும் காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசவின் மனைவி ஹேமாவுக்கும் வாசஸ்தலங்களும் கொடுப்பனவுகளும் வசதிகளும் வழங்கப்படுகின்றன. கோட்டாபய நாடு திரும்பும்போது அவரும் அதே சிறப்புரிமைகளுக்கும் வசதிகளுக்கும் உரித்துடையவராக இருப்பார் என்று குணவர்தன விளக்கம் அளித்தார்.



ஆனால், அன்றைய தினம் மாலை அரசாங்க தகவல் திணைக்களம் கோட்டாபயவின் விமானப்பயணச் செலவை அரசாங்கம் செலுத்தவில்லை என்றும் வெளிநாட்டில் அவர் தனது செலவுகளுக்கு அரச நிதியைப் பயன்படுத்தவில்லை என்றும் அறிவித்தது. இதையடுத்து குணவர்தன கோட்டாபயவின் விமானப்பயணச் செலவை அரசாங்கம் செலுத்தியதாக தான் கூறவில்லை என்றும் ஊடகங்கள் தன்னை தவறாக மேற்கோள் காட்டிவிட்டன என்றும் மறுதலித்தார்.

பயணச்செலவை அரசாங்கம் பொறுப்பேற்றதாக அவர் கூறியதை ஒரு ஊடகம் அல்ல பெருவாரியான ஊடகங்கள் வெளியிட்டன. அப்படியென்றால் அவை சகலதுமே தவறான செய்தியையா வெளியிட்டன? தனக்கு ஏற்பட்ட அசௌகரியத்தை சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டுவிட்டது. ஊடகத்துறை அமைச்சராகவும் இருக்கும் குணவர்தனவின் கூற்றை அவரின் கீழ் இருக்கும் தகவல் திணைக்களமே மறுத்து அறிக்கை வெளியிட்டது என்பதே இங்கு விசித்திரம்.

அதேவேளை, அமைச்சரிடம் இருந்தும் தகவல் திணைக்களத்திடம் இருந்தும் வந்திருக்கும் முரண்பாடான அறிவிப்புகளின் பின்புலத்தில் நாட்டுக்கும் மக்களுக்கும் விளங்காமல் இருப்பது கோட்டாபயவின் விமானக் கட்டணத்தை அரசாங்கம் செலுத்தியதா இல்லையா என்பதும் அவர் வெளிநாட்டில் தனது செலவுகளுக்கு அரச நிதியைப் பயன்படுத்துகிறாரா இல்லையா என்பதுமேயாகும்.

ஜனாதிபதி உரித்துக்கள் சட்டத்தின் பிரகாரம் ஓய்வுபெற்ற ஜனாதிபதிகள் அல்லது அவர்களின் விதவைகள் வாடகை இல்லாத அரசாங்க வீடு, ஜனாதிபதியின் ஓய்வூதியத்தின் மூன்றில் ஒரு பங்குக்கு சமமான கொடுப்பனவு மற்றும் செயலக கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்கள் என்பது உண்மையே. இவற்றுக்கு புறம்பாக, அமைச்சரவை அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்படுவதைப் போன்ற உத்தியோகபூர்வ போக்குவரத்து மற்றும் சகல வசதிகளுக்கும் முன்னாள் ஜனாதிபதிகளும் விதவைகளும் உரித்துடையவர்கள்.

தற்போது அந்த வசதிகளை பெறுபவர்கள் என்றால் அது திருமதி குமாரதுங்கவும் மகிந்த ராஜபக்சவும் சிறிசேனவுமாகவே இருக்கவேண்டும்.

இவர்களில் ராஜபக்சவும் சிறிசேனவும் தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள். கோட்டாபயவின் வெளிநாட்டு பயணங்களுக்கான செலவை அரசாங்கம் பொறுப்பேற்றிருந்தால், தங்களது வெளிநாட்டு பயணங்களுக்கான செலவையும் இனிமேல் தருமாறு இவர்கள் அரசாங்கத்தை கேட்கவும் கூடும்.

இதனிடையே, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற வசதிகள் குறித்து குணவர்தன செய்தியாளர் மகாநாட்டில் கூறிய மறுநாளே திருமதி குமாரதுங்கவின் அலுவலகம் அறிக்கையொன்றை வெளியிட்டது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற வசதிகளைப் பொறுத்தவரை, ராஜபக்ச அரசாங்கத்தினால் திருமதி குமாரதுங்கவுக்கு பாரபட்சம் காட்டப்பட்டதாக முறைப்பாடு தெரிவிக்கும் வகையில் அந்த அறிக்கை அமைந்தது. ஆனால், ஜனநாயக ஆட்சி முறையை நிறுவுவதற்கு அவசியமான கட்டமைப்பு மாற்றங்களின் ஒரு அங்கமாக முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் தற்போதைய அரசியல் தலைவர்களுக்கும் வழங்கப்படுகின்ற சகல சிறப்புரிமைகளும் வசதிகளும் ஒரு ஒப்புரவான முறையில் குறைக்கப்படவேண்டும் என்பது திருமதி குமாரதுங்க வலியுறுத்தல் என்று அறிக்கை கூறியது.

ஜனாதிபதி பதவி வகிப்பவர்கள் அவர்களது அந்தஸ்துக்கு பொருத்தமான முறையில் ஓய்வுகாலத்தில் கண்ணியமான வாழ்க்கையை நடத்துவதை உறுதிப்படுத்துவதே அவர்களுக்கு சிறப்பு வசதிகள் வழங்கப்படுவதற்கு சட்டரீதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டதற்கான அடிப்படைக் காரணமாக இருக்கலாம். ஆனால், இலங்கையில் இது வரையில் ஜனாதிபதியாக இருந்தவர்களில் எவருமே பதவியில் இருந்து இறங்கிய பிறகு அரசாங்கத்தை நம்பியிராமல் தங்கள் சொந்தத்தில் வசதியான வாழ்வை உறுதிசெய்யமுடியாதவர்கள் அல்லவே.



அவர்கள் வசதிபடைத்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக அல்லது அரசியலுக்கு வந்தபிறகு சொத்துக்களைக் குவித்தவர்களாக இருந்தார்கள்.

இன்று இருக்கக்கூடிய முன்னாள் ஜனாதிபதிகளான திருமதி குமாரதுங்கவும் மகிந்த ராஜபக்சவும் மைத்திரிபால சிறிசேனவும் அரசாங்கத்தினால் வசதிகளும் கொடுப்பனவுகளும் செய்யப்படாவிட்டால் வசதியான - கண்ணியமான வாழ்க்கையை வாழமுடியாதவர்களா என்ன?

கோட்டாபயவின் விமானப்பயணச் செலவு தொடர்பில் மூண்ட சர்ச்சையைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற வசதிகள் குறித்து ஊடகங்களில் வெளியான விமர்சனங்கள் இந்த கேள்வியை எழுப்ப எம்மை நிர்ப்பந்திக்கின்றன.

ஒரு காலத்தில் அரசியலில் ஈடுபட்டு தங்கள் சொத்துக்களை இழந்து இறுதிக் காலத்தில் கஷ்டப்பட்டவர்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இந்த காலத்தில் அரசியலில் ஈடுபட்டு சொத்துச் சேர்க்காதவர்கள் என்று எத்தனை பேரை அடையாளம் காட்ட முடியும்?

முன்னாள் பாராளுமன்ற செயலாளர் நாயகம் காலஞ்சென்ற சாம் விஜேசிங்க புதிதாக பாராளுமன்றத்துக்கு தெரிவானவர்களுக்கு பாராளுமன்ற நடைமுறைகள் குறித்து விளக்கம் அளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்படுகின்ற பயிற்சிப்பட்டறைகளுக்கு அழைக்கப்படுவதுண்டு. ஒரு தடவை புதிய உறுப்பினர்களிடம் நீங்கள் ஏன் பாராளுமன்றம் வந்திருக்கிறீர்கள் என்று அவர் கேட்க எல்லோரும் மக்களுக்கு சேவை செய்யவே வந்திருக்கிறோம் என்று உரத்த குரலில் பதிலளித்தார்களாம்.

உடனே அவர் இல்லை... இல்லை.. நீங்கள் வசதிவாய்ப்புக்களைப் பெருக்கவே வந்திருக்கிறீர்கள் என்று வெளிப்படையாக கூறினாராம். 1990 களில் விஜேசிங்க பத்திரிகை நேர்காணல் ஒன்றில் இதை கூறியதை வாசித்தது நன்றாக நினைவில் இருக்கிறது.

இன்று சகல சமூகங்கள் மத்தியிலுமே அரசியலை மாத்திரம் தொழிலாகக் கொண்ட பிரிவினர் இருக்கிறார்கள். அரசியலை சமூகத்தின் நலன்களுக்காக அல்ல தங்களையும் தங்களைச் சார்ந்தவர்களையும் வளப்படுத்தவே இவர்கள் பயன்படுத்துகிறார்கள். பழிபாவத்துக்கு அஞ்சாமல் சமூகவிரோத செயல்களில் ஈடுபடுகின்ற சக்திகளினால் இன்று அரசியல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அரசியல்வாதிகளின் தவறான ஆட்சிமுறையும் அதிகார துஷ்பிரயோகமும் ஊழல் மோசடிகளும் பிரதான காரணங்களாகும். வாழும் முறையால் வழிகாட்டக்கூடிய அரசியல்வாதிகளை இன்று எம்மால் காணமுடியவில்லை. ஆட்சியதிகாரத்தில் இருக்கும் போதும் பதவிகளில் இருந்து இறங்கிய பின்னரும் பொது மக்களின் பணத்தில் சொகுசாக வாழ்வதிலேயே அரசியல்வாதிகள் நாட்டம் காட்டுகிறார்கள். ஆனால் மக்களின் வாழ்க்கைத் தரமோ அதலபாதாளத்துக்கு சென்றிருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் எமது காலத்தில் வாழ்ந்துசென்ற - வாழும் முறையால் வழிகாட்டிய ஒரு கனவானை நினைவூட்டுவது பொருத்தமானதாக இருக்கும்.

அப்துல் கலாம் ஒரு அரசியல்வாதியல்ல. அவர் ஒரு அணு விஞ்ஞானி.

(09 ஆம் பக்கம் பார்க்க..)

# கோட்டாபய ராஜபக்ஷவை பிரதமராக்க முயற்சியா?

**- ரஞ்சன் அருண் பிரசாத்**



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்க யோசனைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

மக்கள் எதிர்ப்புக்கு மத்தியில், நாட்டைவிட்டுச் சென்ற கோட்டாபய ராஜபக்ஷ, முதலில் மாலத்தீவிலும் பிறகு அங்கிருந்து சிங்கப்பூரில் சில வாரங்களும் தற்போது தாய்லாந்திலும் வசித்து வருகிறார்.

இந்த நிலையில், கோட்டாபய மீண்டும் தாயகம் திரும்பும் நோக்கத்துடன் இருப்பதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக, கோட்டாபய ராஜபக்ஷ கடந்த 24ஆம் தேதி நாடு திரும்பவிருந்த நிலையில், அந்த திட்டம் தள்ளிப்போனது.

ரஷ்யாவிற்கான முன்னாள் தூதுவரும், ராஜபக்ஷவின் உறவினருமான உதயங்க வீரதுங்க, இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

"கோட்டாபய ராஜபக்ஷ 100 வீதம் 24ஆம் தேதி வருகை தரவிருந்தார். அவர் வருகின்றமையை அன்றைய தினம் நான் அவசரப்பட்டு கூறி விட்டேன். அதன் பின்னர் சில மாற்று கருத்துக்கள் வெளியாகியிருந்தன. அதனால், அந்த பயணத்தை அவர் செப்டம்பர் மாதம் 3ஆம் திகதிக்கு பிற்போட்டுள்ளார்" என உதயங்க வீரதுங்க தெரிவிக்கின்றார்.

இதேவேளை, மிரிஹான பகுதியிலுள்ள அவரது வீட்டில் தங்குவதற்கு கோட்டாபய ராஜபக்ஷவின் மனைவி விருப்பத்துடன் உள்ள போதிலும், இலங்கை அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதி என்ற விதத்தில் அவருக்கு அதிகார பூர்வ இல்லமொன்றை வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

**கோட்டாபயவை பிரதமராக்க முயற்சி**

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை, பிரதமர் பதவியில் அமர்த்துவதற்கு சிறிலங்கா பொதுஜன பெரமுன முயற்சி செய்து வருகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியவுடன், அவரை தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்திற்குள் அனுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்திற்குள் பிரவேசிக்கும் கோட்டாபய ராஜபக்ஷவை, பிரதமராக நியமிக்க திட்டமிடப்பட்டு வருகின்றமை குறித்த தகவல் வெளியாகியிருந்தது.

சிறிலங்கா பொதுஜன பெரமுன சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அந்த கட்சியுடன் தொடர்புடையவர்கள் இந்த தகவலை வெளியிட்டுள்ளனர்.

**உதயங்க வீரதுங்க வெளியிட்ட கருத்து**



கோட்டாபய ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்குள் கொண்டு வருவதற்கு அவருடைய நெருங்கிய சகாக்கள் செயற்பட்டு வருவதாக ராஜபக்ஷவின் உறவினரும், ரஷ்யாவிற்கான முன்னாள் தூதுவருமான உதயங்க வீரதுங்க தெரிவிக்கின்றார்.

"அவரை மீண்டும் அரசியலுக்குள் கொண்டு வருவதற்கு அவருடன் தொடர்புடையவர்கள் எதிர்பார்த்துள்ளனர். தேசிய பட்டியல் ஊடாக நாடாளு மன்றத்தில் அழைத்து வருவதற்கும், பிரதமர் ஆசனம் அல்லது ஏதோ ஒரு ஆசனத்தை வழங்க முயற்சிக்கின்றார்கள். ஆனாலும், பொதுஜன பெரமுன அல்லது அரசாங்கத்தில் உள்ளவர்கள் அதற்கு இணங்குவார்கள் என நான் எதிர்பார்க்கவில்லை. எனினும், அவருடன் இருந்தவர்கள் அதனை எதிர்பார்க்கின்றனர். அவரது ஆழ் மனதிலும் அந்த எண்ணம் இருக்கின்றது" என உதயங்க வீரதுங்க குறிப்பிடுகின்றார்.

**பொதுஜன பெரமுனவின் பதில்**

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரதீப் உந்துகொட, ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய சந்தர்ப்பத்தில், கோட்டாபய ராஜபக்ஷவை பிரதமர் ஆசனத்தில் அமர்த்துகின்றமை குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

கோட்டாபய ராஜபக்ஷவிற்கு பிரதமர் பதவியை வழங்க தாம் ஆதரவு தெரிவிப்பதாக உதயங்க வீரதுங்க தெரிவிக்கின்றார்.

"எனது தனி விருப்பத்திற்காக அவரை பிரதமர் பதவிக்கு நியமிக்க முடியாது. நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை விருப்பத்திற்கு அமையவே, பிரதமரை நியமிக்கலாம். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பத்தை வெற்றிக் கொள்ள முடியு மாக இருந்தால், அவர் பிரதமராவார். அவர் நாடாளுமன்றத்திற்கு ஏதோ ஒரு வகையில் வருகைத் தந்து, நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவை பெற்றுக் கொள்ள முடியுமானால், அவர் பிரதமராவார். அவர் பிரதமர் பதவியை ஏற்பதற்கு தாம் எதிர்ப்பு கிடையாது. 69 லட்சம் மக்கள் வாக்களித்து, ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவர், எந்தவொரு ஊழல், மோசடியுடன் தொடர்புப்படாத அரசியல் தலைவர், பிரதமர் பதவிக்கு நியமிக்க எதிர்ப்பு கிடையாது. நாம் எதிர்ப்பு கிடையாது" என பிரதீப் உந்துகொட தெரிவிக்கின்றார்.

**தாய்லாந்தில் தங்கியிருக்கும் கோட்டாபய**

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஏற்பட்ட பொருட்கள் தட்டுப்பாடு, வாழ்க்கை செலவு அதிகரிப்பு உள்ளிட்ட பிரச்னைகளுக்கு ராஜபக்ஷ குடும்பமே காரணம் என தெரிவித்து, மக்கள் எதிர்ப்புக்களில் ஈடுபட்டனர்.

மார்ச் மாதம் 31ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கை பின்னரான காலத்தில் தொடர் தன்னெழுச்சி போராட்டமாக மாற்றம் பெற்றது.

காலி முகத்திடலில் ஏப்ரல் மாதம் 09ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தன்னெழுச்சி போராட்டம் சுமார் 4 மாத காலம் இடம்பெற்றது.

இதன்படி, ஜூலை மாதம் 09ம் திகதி கொழும்பில் கூடிய லட்சக்கணக்கான மக்கள், ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றை கைப்பற்றியிருந்தனர்.

இதையடுத்து, தலைமறைவான அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜூலை மாதம் 13ம் திகதி மாலைத்தீவு சென்று, அங்கிருந்து 14 ஆம் திகதி சிங்கப்பூர் சென்று வசித்து வந்தார்.

இந்த நிலையில், கோட்டாபய ராஜபக்ஷவிற்கான விஸா காலத்தை நீடிக்க சிங்கப்பூர் அரசாங்கம் அனுமதி வழங்காத நிலையில், அவர் தனது மனைவியுடன் தாய்லாந்து நோக்கி ஆகஸ்ட் மாதம் 11ம் திகதி சென்றார்.

தற்போது தாய்லாந்தில் தங்கியிருக்கும் கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் நாடு திரும்புவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தனது ஆட்சி காலத்தை நிறைவு செய்ததன் பின்னராக காலத்தில், இலங்கையின் பிரதமராக கடமையாற்றியிருந்தார்.

அதேபோன்று, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது பதவி காலத்தை நிறைவு செய்ததன் பின்னர், அவர் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக தற்போது பதவி வகித்து வருகின்றார். முன்னாள் ஜனாதிபதிகளாக பதவி வகித்த மைத்திரிபால சிறிசேன மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் 9வது நாடாளுமன்றத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தற்போது செயல்பட்டு வருகின்றனர்.

**(பிபிசி)**



# மக்களின் பணத்தில் அரசியல்வாதிகளின்...

*(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

உபகண்டத்தில் அணுவாயுதப்போட்டி தீவிரமடையத் தொடங்கிய காலகட்டத்தில் இந்தியாவின் அணுத்திட்டங்களுக்கு பெரும் பங்களிப்பைச் செய்த அவரை 2002 இந்திய அரசியல்வாதிகள் ஜனாதிபதியாக தெரிவுசெய்தனர்.

எந்தவிதமான எதிர்பார்ப்புமே இல்லாமல் அந்த பதவிக்கு வந்த அப்துல் கலாம் ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு 2007 நடுப்பகுதியில் பதவியில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும்போது இவரைப் போன்ற ஜனாதிபதி இனிமேல் எப்போது கிடைக்கப்போகிறார் என்ற ஏக்கத்தை சாதாரண மக்கள் மத்தியில் ஏற்படுத்தினார். உயர்பதவிகளில் இருப்பவர்கள் இனிமையாகவும் எளிமையாகவும் செயற்படமுடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியமையே அப்துல் கலாம் என்ற தற்பெருமையோ அல்லது பகட்டுத்தன்மையோ இல்லாத மனிதனின் ஆளுமையின் பெரு வெற்றி.

எந்தவொரு பதவிக்கும் பெருமையோ அதிகாரமோ உண்மையில் கிடைப்பது அதை அலங்கரிக்கும் நபர்கள் நடந்துகொள்ளும் விதத்தில்தான் என்பதை எமது காலத்தில் நாம் காணக்கூடியதாக நடைமுறை வாழ்வில் காண்பித்த ஒருவராக அப்துல் கலாம் விளங்கினார்.

ஜனாதிபதி பதவியில் இருந்து இறங்கிய பிறகு ராஷ்டிரபதி பவனில் இருந்து வெறுமனே இரு சூட்கேஸுகளுடன் மாத்திரமே அப்துல் கலாம் வெளியேறினார். ஒரு தடவை இராமேஸ்வரத்தில் இருந்து புதுடில்லி சென்ற அவரின் ஐம்பதுக்கும் அதிகமான உறவினர்கள் ராஷ்டிரபதி பவனில் சில நாட்கள் தங்கியிருக்க விரும்பினார்களாம். ஒரு வாரம் தங்கியிருந்த அவர்கள் ஊர் சுற்றி பார்ப்பதற்கு ஒரு தடவை கூட அரசாங்க வாகனம் பயன்படுத்தப்படவில்லை. அது மாத்திரமல்ல, அவர்களது உணவுக்கான செலவைக்கூட தனது தனிப்பட்ட கணக்கில் சேர்த்து அதற்கான கட்டணங்களை வசூலித்துவிட வேண்டும் என்ற கண்டிப்பான உத்தரவை அப்துல் கலாம் பிறப்பித்திருந்தாராம்.

தங்களது குடும்பங்களுக்கு மாத்திரமல்ல, தங்களைச் சார்ந்த பரிவாரங்கள் சகலதுக்கும் அரசாங்கப் பணத்தில் ஆடம்பர வாழ்க்கை தேடிக்கொடுக்கும் அரசியல் வாதிகள் தான் இன்று எம்மைச் சூழ காணப்படுகிறார்கள்.

# ஜெயலலிதா மரணம்:

## இப்போதும் சூழ்ந்திருக்கும் ஆறு சர்ச்சை கேள்விகள்

தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா 2016ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதி மரணம் அடைந்தபோது அது இயற்கை மரணம் அல்ல என்றும் அவர் கொல்லப்பட்டார் என்றும் அப்போது ஆளும் அதிமுகவில் இருந்த பலரும் சந்தேகம் எழுப்பினார்கள்.

இதையடுத்து அப்போதைய முதல்வராக இருந்த எடப்பாடி பழனிசாமி முன்னாள் நீதிபதி ஆறுமுகசாமி தலைமையிலான ஆணையத்தை அமைத்தார். அந்த ஆணையத்தின் பதவிக்காலம் பல முறை நீட்டிக்கப்பட்டு, ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு தனது இறுதி அறிக்கையை தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலினிடம் நேற்று (ஆகஸ்ட் 27ஆம் திகதி) அளித்தது.



இந்த நிலையிலும் கூட ஜெயலலிதாவின் மரணம் தொடர்பான சர்ச்சைகள் நீடிக்கின்றன. அதில் ஆறு முக்கிய சர்ச்சைகளை இங்கே தொகுத்துள்ளோம்.



### சர்ச்சை 1

இந்தியாவின் முதல் அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினரான மோடூரி சத்யநாராயணாவின் பேத்தி என்று தன்னை அழைத்துக் கொள்ளும் கே.எஸ்.கீதா, தனது தாயார் சரோஜினியும் ஜெயலலிதாவின் தாயார் சந்தியாவும் நெருங்கிய தோழிகள் என்று கூறினார். ஜெயலலிதா தனது "நல்ல நண்பர்" என்று கூறி இவர் தான் முதல் முறையாக வெளிப்படையாக அவரது மரணம் குறித்த சந்தேகங்களை எழுப்பினார்.

அத்துடன் ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக விசாரணை கோரி நீதிமன்றத்திலும் மனு தாக்கல் செய்தார். ஆனால் அந்த மனு தள்ளுபடி செய்யப் பட்டது. முன்னதாக அவர், ஜெயலலிதா மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்ட நாள் இரவே இறந்து விட்டார் என்றும் அந்தத் தகவல்கள் வேண்டு மென்றே மறைக்கப்பட்டதாகவும் கீதா டிவி சேனல்க ளில் தோன்றி குற்றம்சாட்டினார்.

### சர்ச்சை 2

ஜெயலலிதா இறந்து இரண்டு மாதங்களுக்குப் பிறகு, அவது மரணம் குறித்து மௌனம் கலைந்த அதிமுகவின் மூத்த தலைவர்களில் ஒருவரான பி.எச்.பாண்டியன், 2016ஆம் ஆண்டு செப்டம்பர் 22ஆம் தேதி இரவு ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் இல்லத்தில் காரசாரமான வாக்குவாதங்கள் நடந்ததாக நினைவு கூர்ந்தார். சசிகலாவின் பெயரை நேரடியாகக் குறிப்பிடாமல் யாரோ ஒருவரால் ஜெயலலிதா கீழே தள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார். ஜெயலலிதா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நாளில் சசிகலா குடும்பத்தினர் வருத்தப்படவோ அழவோ இல்லை. மாறாக தமது உறவினர்கள் அனைவரையும் மருத்துவமனை முழுவதும் நிரப்பியிருந்தார்கள் என்று பி.எச். பாண்டியன் தெரிவித்தார்.

### சர்ச்சை 3

ஜெயலலிதா மருத்துவமனையில் சேர்க்கப் பட்ட ஆரம்ப நாட்களில் அவருக்கு சரியாக என்ன நோய் ஏற்பட்டது, என்ன சிகிச்சை அளிக்கப்பட்டது போன்ற விவரங்கள் அலுவல்பூர்வமாக வெளியிடப்படவில்லை.

ஜெயலலிதாவுக்கு மூச்சு விடுவதில் சிரமம் இருந்ததாகவும் செப்டம்பர் 22ஆம் திகதி அப்பல்லோ மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டபோது கூட அவரால் பேச முடிந் தது என்றும் முதலாவது மருத்துவ அறிக்கை யில் கூறப்பட்டிருந்தது. ஒன்றரை மாதத்துக்கும் மேலாக ஜெயலலிதாவின் "காய்ச்சல் நீடித்ததாகவும் அவருக்கு நீர்ச்சத்து குறைபாடு" இருந்ததாகவும் கூறப்பட்டு வந்தது.

### சர்ச்சை 4

ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளிப்பதற்காக வரவ ழைக்கப்பட்ட லண்டன் மருத்துவம னையின் தீவிர சிகிச்சை பிரிவு நிபுணர் டாக்டர் ரிச்சர்ட் பீல், ஜெயலலிதா கடுமையான செப்சிஸ் (தொற்றுநோயின் உயிருக்கு ஆபத்தான நிலை) காரணமாக இறந்துவிட்டதாக பின்னாளில் கூறினார். கடைசி நாட்களில் அவரது பல உறுப்புகள் செயலிழந் ததாக அவர் தெரிவித்தார்.

"ஒரு வார காலமாக ஜெயலலிதா பேசிக் கொண்டிருந்தார். சாப்பிட்டார், சிகிச்சை அளிக்க வந்தவர்களுடன் தொடர்பில் இருந்தார். ஆனால், செப்சிஸ் மோசமடைந்த பிறகு அவர் சோர்வாகவும் தூக்கமாகவும் இருந்தார். அவருக்கு ஏற்கெனவே இருந்த நீரிழிவு நோய், தொற்றை கடுமையாக்கியது. அதனால் கடைசி சில நாட்களாக பேச முடியாதபோதும் சுற்றி நடக்கும் விஷயங்களை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது," என்று ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்தார் டாக்டர் ரிச்சர்ட் பீல்.

### சர்ச்சை 5

ஜெயலலிதா மரணத்துக்குப் பிறகு அவரது கன்னங்களில் நான்கு புள்ளிக ளுடன் இருக்கும் படம், சமூக வலை தளங்களில் வைரலாகியது. அது குறித்து கேட்கப்பட்டபோது, தீவிர நோய்வாய்ப்பட்ட நோயா ளிகளுக்கு சில நேரங்களில் கன்னங்களில் புள்ளிகள் வர லாம் என்றும் அவருக்கு உடல் உறுப்பு மாற்று சிகிச்சை எதுவும் செய்யப்படவில்லை என்றும் டாக்டர் பீல் விளக்கினார்.

ஜெயலலிதாவுக்கு எம்பாமிங் செய்த குழுவின் தலை வராக இருந்தவர் சென்னை மருத்துவ கல்லூரியின் உடற்கூறியல் துறையின் அப்போதைய இயக்குநர் டாக் டர் சுதா சேஷய்யன். வென்டிலேட்டரில் தொடர்ந்து இருந்ததால் ஜெயலலிதாவின் உதடுகள் வீங்கியிருந்தன. எம்பாமிங் செயல்பாட்டின் போது மூன்று அல்லது நான்கு எக்கிமோடிக் புள்ளிகள் இருந்தன என்று அவர் கூறினார்.

உடல் அழுகுவதைத் தடுக்கவும், துர்நாற்றம் வீசுவ தைத் தடுக்கவும் அவ்வாறு செய்யப்பட்டதாக மருத்து வர்கள் பின்னாளில் விளக்கினர். எக்கிமோடிக் புள்ளிகள் சிதைந்த ரத்த நாளங்களில் இருந்து ரத்தம் வெளியேறு வதால் ஏற்படுகிறது. சுதா சேஷய்யன் பின்னாளில் டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் 10ஆவது துணை வேந்தராக நியமிக்கப்பட்டார்.

### சர்ச்சை 6

2017ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதி ஜெயலலி தாவின் மரணத்துக்கு திடீர் மாரடைப்பு காரணம் என்று கூறப்பட்டது. இருப்பினும், அப்பல்லோ மருத்துவ மனையில் 75 நாட்கள் இருந்தபோதும் ஜெயலலிதாவின் உடல்நிலை குறித்த முழு தகவல், அவர் சிகிச்சை பெற்ற நாட்களில் அவருக்கு மிக அருகே இருந்தவர்களிடம் கூட தெரிவிக்கப்பட வில்லை என்ற சர்ச்சை நிலவுகிறது.

ஜெயலலிதாவுக்கு ஏன் வெளிநாட்டில் சிகிச்சை அளிக்கப்படவில்லை என்றும் மருத்துவமனை யில் இருந்தபோது அவரது புகைப்படத்தை ஊடகங் களில் வெளியிடாதது ஏன் என்றும் பல கேள்விகள் எழுப்பப்பட்டன. அவ் வாறு செய்வதை ஜெய லலிதா விரும்பவில்லை என்ற ஒற்றை பதிலை மட்டும் சசிகலா மற்றும் மருத்துவர்கள் தரப்பில் தெரிவித்தனர். இவை குறித்தெல்லாம் ஓய்வு பெற்ற நீதிபதி ஆறுமுக சாமி ஆணையம் விசாரித் துள்ளது.



# ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி பல்வேறு மட்டங்களில் உள்ளவர் களையும் வெகுவாக பாதித்துள் ளது. காஸ் தட்டுப்பாடு, எரிெ பாருள் தட்டுப்பாடு, உணவுப் பொருள் விலையேற்றம் உட்பட பல்வேறு பிரச்னைகளுக்கு நாட்டு மக்கள் அன்றாடம் முகம் கொடுத்துள்ளனர்.

இதுவரை காலமும் போரினால் பாதிக்கப்பட்டு பொருளாதாரம் முடங்கிப் போயிருந்த தமிழ் மக்களின் நிலைமை இன்று ஒட்டு மொத்த நாட்டுக்கும் ஏற்பட்டுள்ளமை தான் இந்த பெரும் கொந்தளிப்பு நிலைக்கு காரணம்.

இதுவரை காலமும் ஆட்சியில் இருந்த கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி ஆகியதும் நெருக்கடிகள் அனைத்தும் தீர்ந்துவிடும் என்று பலரும் ஆருடம் கூறியிருந்தனர்.

ஆயினும் அந்த கூற்றுக்களைப் பொய்யாக்கும் செயற்பாடுகளே இன்று நாட்டில் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன. ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை என்ற நிலைமைதான் இப் போதும்.

கதிரைகள்தான் மாற்றமடைந்தனவே தவிர செயற்பாடுகளில் மாற்றம் இல்லை. மக்கள் மென் மேலும் துன்பப்பட்டுகொண்டே வாழ்க்கையை நகர்த்திக்கொண்டிருக்கின்றனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் வெளிப் படுத்தும் கருத்துக்கள் இவை:-

## நெருக்கடி நிலை தீர நீண்ட காலம் பிடிக்கும்



**இ.மதுர்சன்**
பொதுமகன்

இலங்கையைப் பொறுத்தவரை தற்போது பொருளாதார நெருக்கடியானது ஒரு பெரும் பிரச்னையாக காணப்படுகின்றது.

இந்த பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தால் பொதுமக்கள் மூன்று நேர உணவுக்குக்கூட அதிக அளவு பணத்தைச் செலவழிக்கவேண்டிய நிலை காணப் படுகின்றது

குறிப்பாக ஒரு கிலோ அரிசியில் கடையில் வாங்குவதாக இருந்தால் 290 ரூபாவுக்கு மேற்பட்ட விலையில் வாங்கக்கூடியதாகவுள்ளது. அதேபோல் சாதாரணமாக ஒரு இறாத்தல் பாண் மற்றும் ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளை பார்க்கும்போது மிகவும் உயர்வாகக் காணப்படுகின்றது.

இலங்கையை பொறுத்தவரை தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலை தணிந்து பழைய நிலையை அடைவதற்கு நீண்ட காலம் செல்லும். அதாவது பொருளாதார நிபுணர்களின் கருத்தின்படி இந்த பொருளாதார நெருக்கடி நிலையை தணிப்பதற்கு இன்னும் பல காலம் செல்லும் எனத் தெரிவிக்கின்றனர். இதனால் பொதுமக்கள் தான் பாதிக்கப்படுகின்றோம்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு நாங்கள் உள்ளூர் உற்பத்திகளை சுயமாக உற்பத்தி செய்து அவற்றின் பலாபலன்களை அனுபவிப்பதன் மூலம் எங்களை காப்பாற்றிக்கொள்ள முடியும்

இல்லாது விட்டால் நாங்கள் மூன்று வேளை உணவுக்கு கூட இன்னொருவரிடம் கையேந்தவேண்டிய நிலை ஏற்படும். இந்த பொருளாதார நெருக்கடி வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்களை பெரிதும் பாதிக்கின்றது.






## நடைபாதை வியாபாரிகள் பெரும் பாதிப்பில் உள்ளனர்

**டானியல் றொபின் வின்சன்**
நடைபாதை வியாபாரி
யாழ்.நகர்

நான் நீண்ட நாட்களாக இந்த நடைபாதை வியாபாரத்தை மேற்கொண்டு வருகின்றேன்.

கடந்த ஒரு வருடமாக இந்த பொருட்கள் விலை ஏற்றத்தின் காரணமாக நாம் பல இடர்பாடுகளை எதிர் நோக்குகின்றோம்.

கடைக்கு வருபவர்கள் தூரத்தில் நின்று கேட்கின்றார்கள் அது என்ன விலை என்று. நாங்கள் விலையினை கூறும்போது அவர்கள் அவ்வாறே செல்கின்றார்கள். ஆனால் முன்னர் எப்போதும் இவ்வாறு இல்லை. நமது கடைக்கு நேரில் வந்து உள்ள பொருட்களை புரட்டிப் பார்த்து தமக்கு தேவையான உணவுப்பொருட்கள் மற்றும் ஏனைய ஆடம்பரப் பொருட்களை பெற்றுச் செல்வார்கள். தற்பொழுது அந்த நிலைமையில்லை. தூரத்தில் நின்றுவிட்டு அது என்ன விலை என்று கேட்டுவிட்டுச் செல்கின்ற நிலை காணப்படுகின்றது.

நாங்கள் அதிகாலையில் இருந்து மாலை வரை வியாபாரம் இல்லாது வீணாக எமது பொழுதை கழிக்கின்ற செயற்பாடாக காணப்படுகின்றது. குறிப்பாக நமது நடைபாதை வியாபாரக் கடைக்கு மின்சார கொடுப்பனவு மற்றும் வாடகை போன்றவற்றையும் நான் செலுத்தவேண்டியுள்ளது. ஆனால் எனது கடையில் வியாபாரம் இடம் பெறுவதில்லை.

உதாரணமாக 100 ரூபாய்க்கு விற்ற ஒரு சாதாரண பிஸ்கட் பைக்கெற் இன்று 400 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது. அதாவது 100 ரூபாவுக்கு நாங்கள் பிஸ்கட்டை விற்பனை செய்தால் 10 ரூபாய் லாபம் கிடைக்கும். ஆனால் தற்பொழுது 400 ரூபாய்க்கு அந்த பிஸ்கட்டை விற்றால் மாத்திரமே பத்து ரூபாய் லாபம் கிடைக்கும். ஆனால் 400 ரூபாய்க்கு பொதுமக்கள் அந்த பிஸ்கட்டை வாங்க முன்வரமாட்டார்கள்.

எரிபொருள் விலை குறைவடைந்துவிட்டதாக தெரிவிக்கின்றார்கள். ஆனால் எரிபொருள் விலை குறைவடைந்து எமக்கு எந்த ஒரு பிரயோசனமும் ஏற்படவில்லை. குறிப்பாக மொத்த வியாபாரிகளும் பொருட்களை கூடிய விலைக்கே எமக்கு வழங்குகின்றார்கள். எமக்குரிய லாபங்கள் அதிக அளவில் தற்போது கிடைப்பதில்லை.

பொருளாதார நெருக்கடியானது தொடர்ந்து வண்ணமே உள்ளது ஆட்சி மாறினாலும் எமது பொருளாதார நெருக்கடியில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை எனத் தெரிவித்தார்.

## மக்கள் பற்றி சிந்திக்காத அரசு

**ஜி.செபஸ்ரியன்**
வர்த்தக நிலைய பணியாளர்

நான் யாழ்.நகரில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பணியாளராக பணிபுரிகின்றேன்.

எனக்கு நாளொன்றுக்கு 1500 ரூபா வேதனம் கிடைக்கின்றது. அந்த 1500 ரூபாவில் எனது அன்றாட தேவைகளை நான் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் காணப் படுகின்றேன்.

குறிப்பாக நான் காலையில் உணவு அருந்தாமல் தான் வேலைக்கு வருவேன். முன்னர் காலை உணவு அருந்தித்தான் வருவேன். ஆனால் தற்பொழுது உணவு வகைகளின் விலை அதிகரித்துள்ளது. உதாரணமாக வீட்டில்கூட பாண் வாங்குவதில்லை.

ஏனென்றால் ஒரு இறாத்தல் பாண் 180 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றது. இவ்வாறான நிலையில் நான் 1500 ரூபா சம்பளம் பெற்று காலை உணவுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதாக இருந்தால் எனது வருமானமானது கேள்விக்குறியாக விடும்.

எல்லா பொருட்களின் விலையை பொறுத்தவரை இவ்வாறான நிலையே காணப்படுகின்றது. உதாரணமாக பஸ் கட்டணத்தை எடுத்துக் கொண்டால் நாம் சைக்கிளில் பயணம் செய்வது இலகுவாக மாறிவிட்டது.

அதேபோல ஏனைய பொருட்களை எடுத்துக் கொண்டால் இதே நிலைமைதான். குறிப்பாக உணவுப் பொருட்கள். காலையில் எனது பிள்ளைகள் சில வேளைகளில் பிஸ்கட்டை காலை உணவாக எடுத்துச் செல்வார்கள். தற்போது அந்த பிஸ்கட்பைகூட 400 ரூபாய்க்கு சென்றுவிட்டது.

எனவே இந்த பொருளாதார நிலைமையானது அதிகபட்சமாக காணப்படுகின்றது.

நாட்டில் ஜனாதிபதி மாறிவிட்டார். அரசாங்கம் மாறிவிட்டது என்றெல்லாம் பத்திரிகைகளில் பார்க்கின றோம். ஆனால் எமக்கு பொருளாதார நிலைமையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை

முன்னர் எவ்வாறு இருந்ததோ அதே நிலைமை இப்போதும் காணப்படுகின்றது. அதாவது இந்த ஆட்சி மாற்றத்திற்கு முதல் இருந்த நிலை தான் தற்பொழுதும் காணப்படுகின்றது.

ஆனால் இந்த நிலை வெகு விரைவில் மாற்றமடைய வேண்டும். ஏனென்றால் என்னைப் போன்ற சாதாரண அன்றாடம் கூலி தொழில் செய்து பிழைப்பவர்களின் நிலை மிகவும் கேள்வி குறியாக காணப்படுகின்றது.

ஆகவே தற்பொழுது உள்ள அரசாங்கமானது இந்த விடயங்கள் தொடர்பில் உரிய கவனம் எடுக்க வேண் டும்.



ஆனால் ஒரு உண்மை உள்ளது. எந்த அரசாங்கமானது ஆட்சிக்கு வந்தாலும் மக்களைப் பற்றி சிந்திப்பதில்லை. மக்களின் கஷ்டங்களுக்கு தீர்வு பெற்றுக் கொடுப்பதில்லை. குறிப்பாக இன்று நான் காலை உணவு அருந்தவில்லை. மதியம் ஒரு தேநீர் மாத்திரம் குடித்துவிட்டு கடையில் நிற்கின்றேன்.

ஏனென்றால் என்னுடைய சாப்பாட்டுப் பணத்தினை மீதப்படுத்துவதற்காக. அந்த அளவுக்கு நிலைமை சென்றுவிட்டது. என்னைப் போல் எத்தனை பேர் இவ்வாறு உணவருந்தாமல் இருப்பதன் காரணமாக வேறு நோய்கள் வேறு பல பிரச்னைகளும் ஏற்படலாம்.

எனவே இந்த பொருளாதார நெருக்கடியினை தீர்ப்பதற்கு அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.



## மாறுபட்ட வேடத்தில் கார்த்தி!




கார்த்தி நடிப்பில் சமீபத்தில் வெளியான "விருமன்" படம் விமர்சனங்களை தாண்டி வசூலித்து வெற்றிப் பட வரிசையில் இணைந் தது. அடுத்து அவரின் நடிப்பில் பொன்னியின் செல்வன் படம் வெளியாக வுள்ளது. இதையடுத்து சர்தார் படம் வெளியாகிறது.

அடுத்து, இயக்குநர் ராஜூமுருகன் இயக்கத்தில் உருவாகும் ஒரு படத்தில் இதுவரை ஏற்காத வித்தியாசமான வேடத்தில் நடிக்க கார்த்தி ஒப்புக் கொண்டுள்ளராம்.

## அசரடிக்கும் வரலட்சுமி!

"போடா போடி" படத்தின் மூலம் நாயகியாக அறிமுகமானவர் நடிகர் சரத்குமாரின் மகளான வரலட்சுமி. தொடர்ந்து பல படங்களில் நாயகியாக மட்டுமல்லாது வில்லியாகவும் அசத்தி வருகிறார்.

ஆரம்பத்தில் சற்று குண்டாக இருந்த வரலட்சுமி தற்போது, ஆச்சரியப்படும் விதத்தில் ஒல்லியாக மாறியுள்ளார். இதை வெளிப்படுத்தும் விதமாக குட்டைப் பாவடையுடன் படங்களை எடுத்து பதிவேற்றியுள்ளார் அவர்.




## தூசு தட்டப்படும் விக்ரம் படம்!

கௌதம் மேனன் இயக்கத்தில் விக்ரம் நடிப்பில் உருவான துருவ நட்சத்திரம் படம் படப்பிடிப்பு முடிந்தும் இது கிடப்பில் கிடக்கிறது. இதற்குக் காரணம், அவரின் படங்கள் சரியாக ஓடாததே.

இந்நிலையில், விக்ரமின் கோப்ரா படம் வரும் 31ஆம் திகதி வெளியாகிறது. இதைத் தொடர்ந்து செப்ரெம்பர் 30இல் பொன்னியின் செல்வன் வெளியாகிறது. இந்த இரு படங்களில் ஒன்று வென்றாலும் விக்ரமின் மதிப்பு உயர்ந்துவிடும்.

எனவே, இந்தச் சூட்டோடு துருவ நட்சத்திரம் படத்தையும் வெளியிட திட்டமிடுகிறார்கள். டிசெம்பரில் இந்தப் படம் வெளியிடப்படும் என்று பேச்சு அடிபடுகிறது.



## சமந்தாவின் பயிற்சி!

சாகுந்தலம், யசோதா ஆகிய படங்களில் நடித்துள்ளார் சமந்தா. இந்த இரண்டு படங்களும் அடுத்தடுத்து வெளியாகவுள்ளன. " திபமிலிமேன்" இணையத் தொடர் மூலம் ஹிந்தியிலும் பிரபலமான சமந்தா தற்போது ஹிந்தியில் மீண்டும் ஓர் இணையத் தொடரில் நடிக்கிறார்.

ராஜ் டிகே இயக்க, வருண் தவான் நாயகனாக நடிக்கிறார். இந்தத் தொடரில் சமந்தாவுக்கு சண்டைக் காட்சிகள் உள்ளன. இதனால் தற்காப்பு கலைக்கான பயிற்சியை சமந்தா தற்போது பெற்று வருகிறார். விரைவில் இதன் படப்பிடிப்பு ஆரம்பமாகவுள்ளது.



## சூர்யாவுடன் திஷா

பாலா இயக்கும் வணங்கான் படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பில் நடித்து முடித்துள்ள சூர்யா, தற்போது சிவா இயக்கும் தனது 42ஆவது படத்தில் நடிக்க தொடங்கி விட்டார்.

இந்த படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக பொலிவூட் நடிகை திஷா பதானி நடிக்கிறார். இந்தப் படத்தை தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி, மராத்தி, பெங்காலி என பத்து மொழிகளில் வெளியிடவும் திட்டமிடப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.




**திரைப்படம் - டைரி**
**இயக்கம் - இன்னாசி பாண்டியன்**
**நடிப்பு - அருள்நிதி, பவித்ரா மாரிமுத்து**

வித்தியாசமான ஒரு கதையை யோசித்துவிடலாம். ஆனால், அந்தக் கதையை ரசிக்கும் விதத்தில் கொடுக்கும் "மந்திரம்" திரைக்கதையில் தான் இருக்கிறது. மையப் புள்ளியிலிருந்து விலகாத, அதைச் சுற்றிய திரைக்கதைதான் ஒரு படத்தை மேலும் சுவாரசியமாக்கும்.

இந்தப் படத்தின் இயக்குநர் இன்னாசி பாண்டியன் கதையை மட்டும் வித்தியாசமாக யோசித்துவிட்டு திரைக்கதையில் தடம் புரண்டுவிட்டார். கடைசி இருபது நிமிடங்கள் மட்டுமே ரசிக்கும் விதமாக இருக்கிறது. படம் முடிந்துவிடும் என்று எதிர்பார்த்தால் அங்கும் முடிக்காமல் இன்னமும் நீட்டித்துப் போகிறார். முதல் படத்தில் முத்திரை பதிக்க வேண்டுமென என்னென்னமோ சொல்லி, எங்கெங்கோ இழுத்துச் செல்கிறார்.

காவல்துறை உதவி ஆய்வாளராக பயிற்சியை முடிக்கும் தறுவாயில் இருப்பவர் அருள்நிதி. ஆவணக் காப்பகத்திலிருந்து முடிக்க முடியாத வழக்குகளில் ஒன்றை எடுத்து பயிற்சி பெறுபவர் விசாரிக்கலாம் எனச் சொல்கிறார் மேலதிகாரி.

கண்ணை மூடிக் கொண்டு ஒரு வழக்கைத் தெரிவு செய்கிறார் அருள்நிதி. ஊட்டியில் 16 வருடங்களுக்கு முன்பு நடந்த கொள்ளை, கொலை வழக்கு அது. அங்கு சென்று தன் விசாரணையை ஆரம்பிக்கிறார். ஒரு வழக்கை விசாரிக்கப் போய் மேலும் சில பல மர்மங்களுக்கான விடை தெரிகிறது. அது என்ன என்பதுதான் இந்த "டைரி".

தனக்கான கதைகளைத் தெரிவு செய்வதில் அருள்நிதி தனிக் கவனம் செலுத்துவார் என்று பெயர் வாங்கியுள்ளார். இந்தப் படத்தையும் அப்படித்தான் தெரிவு செய்திருப்பார். ஆனால், இடைவேளை வரை அருள்நிதிக்கு திரைக்கதையில் ஒரு சில காட்சிகளை மட்டுமே வைத்து ஏமாற்றியிருக்கிறார் இயக்குநர். இயக்குநர் எழுதிய டைரியை அருள்நிதி முழுதாகப் படித்திருக்க மாட்டார் போலிருக்கிறது. அவருக்கான முக்கியமான பக்கங்கள் இல்லவே இல்லை. இடைவேளைக்குப் பிறகுதான் அருள்நிதி களத்தில் இறங்குகிறார். காவல்துறை கதாபாத்திரங்களில் கட்டுடலுடன் நடித்துப் பழகிவிட்டார். இந்தப் படத்திலும் அப்படியே.

அருள்நிதிக்கு ஜோடி என்பதால் படத்தின் கதாநாயகியாக பவித்ரா மாரிமுத்துவைச் சொல்லலாம். ஊட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக வேலை பார்ப்பவர் பவித்ரா. இவரைப் பார்த்த உடனேயே அருள்நிதிக்குக் காதல் வந்துவிடுகிறதாம்.

படத்தில் ஊட்டியில் இருந்து கோயம்புத்தூருக்கு நள்ளிரவில் புறப்படும் ஒரு பேருந்துதான் முக்கிய கதைக்களம். அதில்தான் அதிக காட்சிகள் நடக்கின்றன. அந்தப் பேருந்து பயணிகளாக சிலர் நடித்துள்ளார்கள். அவர்களில் ஷாராக்கு மட்டும் அதிக வசனம், அதுவும் இரட்டை அர்த்த வசனங்களைப் பேசி நெளிய வைக்கிறார். சாம்ஸ், ஜெயப்பிரகாஷ் ஆகியோரும் படத்தில் உண்டு. மீதிப் பேர் நமக்கு அதிகம் தெரியாத முகங்கள்.

ஒளிப்பதிவாளர் அரவிந்த் சிங், இசையமைப்பாளர் ரான் ஈத்தன் யோஹான் இருவரும் படத்தை எப்படியாவது தரம் உயர்த்திக் காட்டிவிட வேண்டும் என கடுமையாக உழைத்திருக்கிறார்கள்.

படத்தின் ஆரம்பம் நன்றாகத்தான் ஆரம்பிக்கிறது. ஊட்டிக்கு சென்ற பின் அருள்நிதி விசாரணையை ஆரம்பித்தவுடன் வேறு கோணத்தில் படம் செல்லும் என்று எதிர்பார்த்தால் ஊட்டி கொண்டை ஊசி வளைவு போல படம் சுற்றிச் சுற்றி போகிறது. படத்தில் பாராட்டப்பட வேண்டிய ஒரு முக்கிய அம்சம், உச்சக்காட்சிக்கு முன்பாக நடக்கிறது. அது மட்டும் நாம் சிறிதும் எதிர்பார்க்காத ஒன்று. இதுவரை வந்த தமிழ் திரையுலகில் அப்படி ஒரு திருப்புமுனையை எதிர்பார்த்திருக்க மாட்டோம். அந்த திருப்புமுனை போலவே முழு படத்தையும் யோசித்திருந்தால் "டைரி" நீங்கா நினைவைத் தந்திருக்கும்.




# கொண்டாட்டத்துக்கு தயாராவோம்!

## பாகிஸ்தான் - இந்தியா போட்டி இன்று!

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கு மட்டு மல்ல, ஒட்டுமொத்த கிரிக்கெட் ரசிகர்களுக்கும் இன்றைய தினம் மறக்க முடியாததாக இருக்கும். காரணம் நேற்று ஆரம்பமான ஆசியக் கிண்ணத் தொடரில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் இன்று மோதவிருப்பதுதான்.

1984ஆம் ஆண்டு முதல் நடை பெற்று வரும் ஆசியக் கிண்ணத் தொடரை இந்திய அணி 7 முறை வென்றிருக்கிறது. கடைசியாக 2016, 2018இல் நடந்த ஆசியக் கிண்ணத் தொடர்களையுமே இந்திய அணியே வென்றிருக்கி றது.

2018இல் ஐக்கிய அரபு எமி ரேட்ஸில் நடந்திருந்த தொடரில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி இந்திய அணி ஆசிய சம்பியன் ஆகியிருந்தது. இப்போது அதே ஐக்கிய அரபு எமிரேட்ஸில் மீண்டும் ஆசியக் கிண்ணத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் முனைப் போடு இந்திய அணி களமிறங்கு கிறது. அதை தட்டிப் பறிக்கும் நோக்கில் களமிறங்குகிறது அதன் பரம வைரி என்று வர்ணிக்கப் படும் பாகிஸ்தான் அணி.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டிக ளுக்கு எதிர்பார்ப்பு இல்லாமல் இருந்தால்தான் ஆச்சரியம். வழக்கம்போலவே இந்த முறையும் இந்த மோதலை ஒரு யுத்தமாக பாவிக்கும் அளவுக்கு எக்கச்சக்க எதிர்பார்ப்புகள் உருவாகியிருக் கின்றன. ஒக்ரோபரில் இருபது - 20 உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவிருக்கிறது. அதுவும் நெருங்கிவிட்டதால் உலகக் கிண்ணத்துக்கான முன்னோட்ட மாகவும் இந்தத் தொடர் பார்க்கப்படுகிறது. ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி மற்றும் பாபர் அஸாம் தலைமையிலான பாகிஸ்தான் அணி என இரு தரப்புமே தங்களின் முழுப்பலத்தை வெளிக்காட்ட தயாராகிக்கொண்டிருக்கின்றனர்.

வழக்கத்தை விட இந்திய அணிக்கு இந்த மோதல் கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. காரணம், கடந்த உலகக் கிண்ணத்தில் இந்திய அணி அடைந்த தோல்வி.

கடந்த 2021 இல் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தானே இந்திய அணியின் வீழ்ச்சியை ஆரம் பித்து வைத்தது. இந்திய அணியை 10 விக்கெட் வித்தியாசத்தில் மொத்தமாக சாய்த்து வென்றிருந்தது.

அந்தத் தோல்வியிலிருந்து இந்திய அணியால் அவ்வளவு சீக்கிரமாக மீள முடியவில்லை. நியூசிலாந்துக்கு எதிரான அடுத்த போட்டியிலும் வீழ்ந்து அடுத்த சுற்று வாய்ப்பையே இந்திய அணி இழந்தது. இந்திய ரசிகர்கள் திரும்பிப் பார்க்க விரும்பாத கசப்பான மீள் காட்சிகள் இவை.

அந்த உலகக் கிண்ணத் தோல்விக்குப் பிறகு இந்திய அணியில் எக்கச்சக்க மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அணித் தலைவர் மாறிவிட்டார். பயிற்றுநர் மாறிவிட்டார். இந்தப் புதிய கூட்டணி யின் முயற்சிகளால் அணியின் அணுகு முறையே மொத்தமாக மாறிவிட்டது. முதல் பந்திலிருந்தே அதிரடியாக ஆடும் மனநிலைக்கு இந்திய அணி மாறிக் கொண்டிருக்கிறது.

உலகக் கிண்ணத் தோல்விக்காக பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுப்பதற் காக மட்டுமல்ல, இந்திய அணி முயன்று பார்த்திருக்கும் புதிய சமாசாரங்கள் பெரிய தொடர்களில் என்ன மாதிரியான பெறுபேறை கொடுக்கப்போகின்றன என்பதற்கான முன்னோட்டமாகவும் இந்த ஆசியக்கிண்ணம் அமையும்.

2021 ஒக்ரோபரில் நடந்த உலகக் கிண்ணத் தொடருக்குப் பிறகு இந்திய அணி 24 இருபது -20 போட்டிகளில் ஆடியிருக்கிறது. இந்த 24 போட்டிகளில் 19 போட்டிகளை இந்திய அணியே வென்றிருக்கிறது.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக இரண்டு போட் டிகளிலும் இங்கிலாந்து மற்றும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக தலா ஒரு போட்டியிலும் இந்திய அணி தோல் வியை தழுவியிருக்கிறது. இந்த 24 போட்டிகளிலும் இந்திய அணி சுழற்சி முறையில் பல வீரர்களையும் பயன்படுத்தியிருக்கிறது. விளையாடும் பதினொருவர் முக்கியமான இடங்க ளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல தெரிவு களை முயன்று பார்த்திருக்கிறது. இதில் குறிப்பிட்டு சொல்ல வேண்டியது தொடக்க ஆட்டம்.

இந்த 24 போட்டிகளில் மட்டும் 9 வெவ்வேறு ஆரம்ப இணையை இந்திய அணி பயன்படுத்தியிருக்கிறது.

பண்ட், சூர்யகுமார் யாதவ் முதல் கொண்டு கற்பனையே செய்திடாத வீரர் களையெல்லாம் ஆரம்ப வீரர்களாக இறக்கி விட்டார்கள். இந்திய அணியின் இந்த அதீத பரீட்சார்த்த முயற்சிக ளுக்கும் ஒரு வகையில் பாகிஸ்தானுக்கு எதிரான அந்த உலகக்கிண்ணத் தோல்வி தான் காரணம். அந்த உலகக்கிண்ணத்தில் ஷ ாகீன் ஷா அப்ரிடி வீசிய பந்தில் இந்திய அணியின் முன்வரிசை சிதறியிருக்கும்.

ஷாகீன் ஷா அப்ரிடி கொடுத்த அதிர்ச்சியிலிருந்து மீளாத இந்திய அணி அடுத்ததாக நியூசிலாந்துக்கு எதிராக போல்டை மனதில் வைத்து முதல் வரிசையில அவசரமான மாற்றத்தைச் செய்திருந்தது. இஷான் கிஷன் திடீரென பதினொருவர் அணிக்குள் வந்து தொடக்கம் கொடுத்தார். ரோஹித் மூன்றாமிடம், கோலி நான்காம் நிலை என கீழிறங்கினர்.

இந்த மாற்றம் இன்னும் சேதாரத் தையே கொடுத்தது. நியூசிலாந்திடமும் இந்திய அணி பலத்த அடி வாங்கியது. அந்தத் தோல்விகள் கொடுத்த படிப்பி னையில்தான் இந்திய அணி பல வீரர்களையும் கலைத்துப் போட்டு முன்னும் பின்னுமாக மாற்றி இறக்கி பார்த்தது. சூழலை பொறுத்து எந்த இடத்திலும் யார் வேண்டுமானாலும் மாற்றி இறக்கப்பட்டாலும் இந்திய அணி தடுமாறாமல் இலக்கை எட்ட வேண்டும். இதுதான் ரோஹித் - டிரா விட் கூட்டணியின் புதிய திட்டமாக இருந்தது. இதை ஓரளவுக்கு சிறப்பாகச் செயல்படுத்தியும் காட்டியிருக்கின்றனர். ஆசியக் கிண்ணத்துக்கான இந்திய அணி யில் ராகுலும் இடம்பெற்றிருக்கிறார். ஆக, ரோஹித்தும் ராகுலும் தொடக் கத்தில் இறங்கவே அதிக வாய்ப்பிருக்கி றது. எனினும், சூழலைப் பொறுத்து திடீர் மாற்றமாக சூர்யாவோ ரிஷப் பந்தோ கூட ரோஹித்துடன் ஆச்சரியப்படுத் தும் விதமாக களமிறங்கவும் கூடும்.

வேறு எந்த வீரரை விடவும் விராட் கோலிக்கு இந்தத் தொடர் ரொம்பவே முக்கியமானதாக பார்க்கப்படுகிறது. கோலியின் சமீபத்திய தகுதி பற்றிச் சொல் லித் தெரிய வேண்டியதில்லை. இருபது -20யிலுமே மெச்சத்தகுந்த ஆட்டம் அவ ரிடம் வெளிப்படவில்லை. ரொம்பவே சுமாராகத்தான் ஆடியிருக்கிறார்.

கோலிக்கு ஓய்வளித்துவிட்டு மூன்றா மிடத்தில் இறக்கப்பட்ட மற்ற வீரர்கள் கோலியை விட அதிகமான தாக்கத் தையே ஏற்படுத்தியிருக்கின்றனர். ஆயி னும், விராட் கோலிக்கு இந்த ஆசியக் கிண்ணத்தில் இடம் கிடைத்திருக்கிறது. ஆசியக் கிண்ணத்திலும் இதே சொதப் பலை கோலி தொடரும் பட்சத்தில் இதே சௌகரியத்தோடு கோலி அணி யில் தொடர முடியுமா என்பது கேள்விக்குறியே. பாகிஸ்தானுக்கு எதிரான போட்டி கோலியின் 100ஆவது சர்வதேச இருபது -20 போட்டி. 100 ஆவது போட்டியில் ஒரு சதம் அல் லது ஒரு நல்ல தாக்கம் ஏற்படுத்தும் இனிங்ஸை கோலி ஆட வேண்டும் என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப் பாக இருக்கிறது. அணி யில் அவரின் இருப்பை உறுதி செய்து கொள்ளவும் கோலி இந்த ஆசியக் கிண்ணத்தில் சாதித்தே ஆக வேண்டும்.

தீபக் ஹூடா, ஹார்திக் பாண்ட்யா, ஜடேஜா, தினேஷ் கார்த்திக் என அணியில் துடுப் பாட்டத்துக்குப் பஞ்சமே இல்லை. புவனேஷ்வர் குமார், அர்ஷ்தீப் சிங், ஆவேஷ் கான் எனத் தேவைக்கு ஏற்ப சரியான வேகப் பந்து வீச்சு கூட்ட ணியும் அமைந்தி ருக்கிறது. அஷ்வின், சாஹல், ரவி பிஷ் னோய் என வலுவான சுழல் பந்துவீச்சாளர் களையும் இந்திய அணி வைத்திருக்கி றது.

பாகிஸ்தான் அணியை பொறுத்த வரைக்கும் இந்த ஆசியக் கிண்ணத் தொடரை இரண்டே இரண்டு முறை மட்டுமே வென்றிருக்கின்றனர். கடந்த இருபது -20 உலகக் கிண்ணத்துக்குப் பிறகு இப்போது வரை 7 இருபது -20 போட்டிகளில் மட்டுமே ஆடியிருக்கின் றனர். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு போட்டியைத் தவிர மற்ற போட்டிகள் அனைத்திலும் வென்றிருக்கின்றனர்.

இந்திய அணியை நிலைகுலைய வைத்த ஷாகீன்-ஷா-அப்ரிடி கடைசி நேரத்தில் காயம் காரணமாக அணியிலிருந்து விலகியது பாகிஸ்தானுக்குப் பெரிய பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது.

ஷாகீன் ஷாவை தவிர இடதுகை வேகப்பந்து வீச்சாளர்கள் வேறு யாரும் அணியில் இல்லாததும் அந்த அணிக்குப் பின்னடைவே. அணியின் பாரம் ஒட்டு மொத்தத்தையும் தோளில் தூக்கி சுமக் கப் போவது அணித் தலைவர் பாபர் அசா மும் முகமது ரிஸ்வானுமே. இவர்களுக்கு உறுதுணையாக மற்ற வீரர்களும் நிற்கும் பட்சத்தில் பாகிஸ்தான் இந்திய அணிக் குக் கடும் சவாலளிக்கவே செய்யும்.

வெற்றி - தோல்வியை கடந்து இந் தியா - பாகிஸ்தான் போட்டி என்பது கிரிக்கெட்டின் மாபெரும் கொண்டாட் டம். வெறுப்புகளை களைந்து இந்த ஆட் டத்தையும் இரு அணியின் வீரர்களையும் மகிழ்ச்சிப் பெருக்கோடு அரவணைப் பதே கொண்டாட்டத்தின் உச்சமாக இருக்கும். ரசிகர்களாக அனைவரும் கொண்டாடுவோம்.

புலம்பெயர் மடல்

# மகாஜனாக்கல்லூரி கனடா பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல் - 2022

குரு அரவிந்தன்










கனடாவில் இயங்கிவரும் மகாஜனாக்கல்லூரி பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களும், கல்லூரி நலன்விரும்பிகளும் சென்ற ஞாயிற்றுக் கிழமை ரொறன்ரோவின் மக்கோவான் - ஸ் ரீல் சந்திக்கு அருகே உள்ள பூங்காவில் ஒன்றுகூடிக் கொண்டாடினார்கள். கோவிட் - 19 காரணமாக இரண்டு வருடங்கள் தள்ளிப் போடப்பட்ட இந்த நிகழ்வு மிகவும் சிறப்பாக இம்முறை நடைபெற்றது.

கனடா தேசிய கீதம், தமிழ்வாழ்த்து, கல்லூரிக்கீதம், கொடிவணக்கம், மற்றும் எம்மைவிட்டுப் பிரிந்தோருக்கான அகவணக்கம் போன்றவற்றுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. அதைத் தொடர்ந்து காலை உணவு வழங்கப்பட்டது. அதன்பின் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று மதிய உணவு வழங்கப்பட்டது.

மதிய உணவைத் தொடர்ந்து, சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்குமான ஓட்டப்போட்டி, பந்தெறிதல், கயிறு இழுத்தல், வேகநடை போன்ற பலவிதமான விளையாட்டுகளும் இடம் பெற்றன. அங்கத்தவர்கள் ஒருவரை ஒருவர் சந்திப்பதன் மூலம் உளரீதியாகவும் ஒன்றுகூடி மகிழ்வதே இந்த நிகழ்வின் நோக்கமாக இருந்தது. நீண்ட நாட்களின்பின் ஒருவரை ஒருவர் சந்தித்து மகிழ்வோடு உரையாட முடிந்தது. இந்த நிகழ்வில் பிரான்ஸ், நோர்வே, அமெரிக்கா, சிறிலங்கா போன்ற நாடுகளில் இருந்தும் வந்திருந்த பழைய மாணவர்கள் சிலர் கலந்து கொண்டிருந்தனர். போட்டியில் பங்கு பற்றி வெற்றி பெற்றவர்களுக்கு மாலை 5:00 மணியளவில் நடைபெற்ற பரிச ளிப்பு நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன. மாலை 6:00 மணியளவில் நிகழ்வு நிறைவுபெற்றது.

மகாஜனக்கல்லூரி பழைய மாணவர்கள் உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் போன்ற குழுக்களை ஆரம்பித்து அவர்களைப் பயிற்றுவித்து கனடாவில் நடக்கும் போட்டிகளிலும் பங்கு பற்றி விளையாடுவது குறிப்பிடத்தக்கது. இதைவிட இளைய தலைமுறையினருக் கான பயிற்சிப் பட்டறைகள், கணித, பொது அறிவு, தமிழ் மொழி பரீட்சைகளும் கடந்த பல வருடங்களாக நடத்தி அவர்களை ஊக்குவித்து வருகின்றனர். மற்றும் 'மகாஜனன்' வருடாந்த மலரிலும் இளைய தலைமுறையினரின் ஆக்கங்களை வெளியிட்டு அவர்களை தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்து வருவதுடன், கோயிற் திருவிழாக்களும் செய்து வருகின்றார்கள்.

தாயகத்தில் உள்ள கல்லூரியின் வளர்ச்சியிலும் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றனர். யுத்தத்தால் பழுதடைந்த கட்டிடங்களையும் நூலகத்தையும் திருத்தி அமைக்கவும், கணனி பாவனையை அறிமுகம் செய்தும், விளையாட்டுப் போட்டிகள், நினைவுகூரும் நிகழ்வுகள் போன்றவற்றுக்கு உதவி செய்தும் கல்லூரியின் முன்னேற்றத்திற்கு இங்குள்ள பழைய மாணவர்கள் உதவிக் கொண்டிருக்கிறார்கள். மகாஜனக் கல்லூரியின் சர்வதேச நூற்றாண்டு நினைவு மலர் கனடா பழைய மாணவர் சங்கத்தால் கனடாவில் வெளியிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

---




## வியுக்தியார் பதில்கள்

**ஏ.கேதீஸ்வரன், வாழைச்சேனை, மட்டக்களப்பு**

**கேள்வி:**
அறகலய போராட்டக்காரர்களையும் இப்போது பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கின்றனரே. இதனை எந்த வகையில் பார்க்கின்றீர்கள்.?

**வியுக்தியார்:**
பயங்கரவாத தடைச் சட்டத்தையே முற்றாக நீக்கவேண்டும் என்ற கருத்தில் இருப்பவன் யான். ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தை தமது முகநூலில் பதிவிட்டதற்காகவே அந்தச் சட்டத்தின்கீழ் நம்மவர்கள் தடுத்து வைக்கப்படும்போது அதனை தட்டிக்கேட்க யாரும் வரவில்லை. கொஞ்சம் பொறுத்திருப்போம், சில வேளை இந்த அறகலய காரர்களும் புலம்பெயர் புலிகளுடன் தொடர்பிலிருந்தார்கள் என்று சொல்கிறார்களோ தெரியவில்லை. அப்படிச் சொல்லிவிட்டால் அதற்குப் பின்னரும் அவர்கள் மீது பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்துவதை கண்டிக்கின்றார்களா என்று பார்ப்போம்.

---

**கணபதி கணேசன், பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:**
யாழ்ப்பாணம் காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து இந்தியாவின் புதுச்சேரி - காரைக்காலுக்கு இடையே பயணிகள் மற்றும் சரக்கு படகு சேவை இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் என்று புதுச்சேரி சட்ட சபையின் வரவுசெலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அப்படியொரு படகுச் சேவை தொடங்கவிருப்பது பற்றி தனக்குத் தெரியாது என்று நமது போக்குவரத்து அமைச்சர் கூறுகிறார். என்னதான் நடக்கின்றது?

**வியுக்தியார்:**
இதில் என்ன ஆச்சரியப்படுவதற்கு இருக்கின்றது? இலங்கைக்கு எண்ணை வாங்குவதற்கும் இந்தியாவில் தானே பட்ஜெட்டில் நிதி ஒதுக்கவேண்டியிருக்கின்றது. இந்நிலையில் இந்தியாவிலிருந்து படகுச் சேவை வருவதற்கு நமது போக்குவரத்து அமைச்சருக்கு என்ன வேலை இருக்கப்போகின்றது.

---

**ம. பார்த்திபன், நெல்லியடி, கரவெட்டி.**

**கேள்வி:**
இரண்டு வருடங்களுக்கு எந்தத் தேர்தலையும் நடத்த முடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார் என்று உங்கள் பத்திரிகையில் செய்தி ஒன்றைப் பார்த்தேன். அப்படியெனில் எதிர்க்கட்சிகள் கேட்பது போல தேர்தல் நடைபெறாது என்றுதானே அவர் சொல்லியிருக்கிறார்.

**வியுக்தியார்:**
அவர் அப்படிச் சொல்வதிலிருந்து உங்களுக்கு ஒன்று புரியவேண்டுமே. இந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீண்டெழுவதற்கும் இரண்டு ஆண்டுகள் தேவை என்று தான் அவர் முதலில் இருந்து சொல்லிவருகிறார். தனது பதவி காலம் முடிகின்ற போதுதான் தேர்தலை நடாத்த விரும்புகின்றார் என்றால், தான் தேர்தல் ஒன்றில் வெற்றிபெறக்கூடிய சூழல் ஒன்று வரும்வரை தோல்தலை நடாத்த மாட்டேன் என்கின்றார் என்பது புரிந்திருக்க வேண்டுமே? எதிர்க்கட்சிகள் பிரச்சினை இருக்கும்போது தேர்தல் நடாத்தினால் தாங்கள் வெற்றிபெறலாம் என்று நினைக்கின்றன. ஆனால் அதனையெல்லாம் சரிசெய்துவிட்டு தேர்தல் நடாத்தினால் தான் வெற்றிபெறலாம் என்று ஜனாதிபதி நினைக்கின்றார் போலும் அவ்வளவுதான்.

---

**வை. தனராஜ், உவர்மலை, திருகோணமலை.**

**கேள்வி:**
நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கான அந்நிய செலாவணியை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக, உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளதே. பின்னர் எதற்காக நமது சுரேன் சுரேந்திரனிடம் கையேந்துவதை விட்டுவிட்டு சீனாவிடமும் இந்தியாவிடமும் நமது அரசாங்கம் கையேந்திக் கொண்டிருக்கின்றது.?

**வியுக்தியார்:**
நாட்டுக்கு தேவையான அந்நியச் செலாவணியை தரக்கூடிய நிலையில் பல புலம்பெயர் தமிழர்கள் இருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்கும் தெரிந்ததுதான், ஆனால் அவர்கள் இந்த சுரேன் சொன்னாலும் தரப் போவதில்லை என்பதும் அரசுக்குத் தெரியாததல்ல. சிலவேளை அரசாங்கமும் கேட்டுவிட்டாலும் என்றுதான், அதற்கு அவர் நிபந்தனையும் விதித்திருக்கிறார். அந்த நிபந்தனைகளை அரசாங்கம் செய்யாது என்பதை தெரியாதவர் அல்ல அவர். அதனால்தான் துணிந்து அப்படிக் கூறியிருக்கிறார் போலும்.

# பூவண்ணம்

கே.எஸ்.சுதாகர்



(சென்ற வாரத் தொடர்ச்சி...)

அதைத் தொட்டுக் காட்டி, வேண்டும் என்றான். உள்ளே நின்று எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டிருந்த பமீலா `C புறோகிறாமிங்' புத்தகம் ஒன்றை உள்ளிருந்து நீட்டினாள். அதை பமீலாவிடம் இருந்து வாங்கி, கைகளில் தூக்கிப் பிடித்து ஹஇது வேண்டுமா?' என்று சைகையால் கேட்டேன். அவன் அடக்கமுடியாமல் சிரித்தபடி வீட்டிற்குள் திரும்பவும் ஓடினான்.

மறுநாள் வேலை முடிந்து வரும்போது எங்கள் பின்னால் வந்து கொண்டிருந்தான்.

"சாகித்தியா" உனக்கு விருப்பம் எண்டாக் கதை. நான் தடையாக இருக்கவில்லை" சொல்லிவிட்டு மாரியம்மன் கோவிலுக்கு அருகினில் இருந்த கடைக்குள் புகுந்து கொண்டாள் பமீலா. அவள் சென்றதும், அவன் விரைவாக நடந்து வந்து என்னுடன் இணைந்து கொண்டான். இப்படித்தான் ரமணனும் நானும் ஒருவருக்குள் ஒருவராக உள்ளிளுக்கப்பட்டோம்.

முதல்நாள் பஸ்சில் கேட்ட கேள்விக்கு அப்போதுதான் நான் பதில் கூறினேன். பதிலுக்கு, "நான் draftsman ஆக யாழ்ப்பாணத்திலை வேலை செய்தனான். கனடா போக எண்டு வந்து நிக்கிறன்" என்றான்.

"நேற்று கிராண்ட்பாஸ் வீதியில் இறங்கிக் கொண்டீர்களே?" – நான். "அதுவா"? பழைய புத்தகங்கள் வாங்கப் போனனான். எனக்குக் கதைப்புத்தகங்கள் படிக்கப் பிடிக்கும்." – அவன்.

"உங்களுக்கு கொட்டகேன லைப்பிரரி தெரியாதா? அங்கே நிறையைத் தமிழ்ப் புத்தகங்கள் இருக்கின்றனவே!"

"தெரியும். போய் இருக்கிறன். எனக்கு நிரந்தர வதிவிட முகவரி இஞ்சை இல்லாததாலை புத்தகங்களை வீட்டுக்கு எடுத்து வரேலாது."

"என்னென்ன புத்தகங்கள் என்று எழுதித் தாங்கோ. நான் எடுத்துத் தாறன். என்னட்டை லைப்பிரரி மெம்பசிப் இருக்கு."

சனிக்கிழமை ஒரு பெரிய பட்டியல் தந்தான். அவனையும் கூட்டிக்கொண்டு நூலகத்திற்குச் சென்றேன். எங்கள் வீட்டிலிருந்து நூலகத்திற்குச் செல்ல ஒரு குறுக்கு வழி---ஒற்றையடிப் பாதை--- இருந்தது. ஐந்து நிமிடத்தில் போய் விடலாம். ரமணனுக்கு அந்த மனித சஞ்சாரமற்ற கள்ளப்பாதையைக் காட்டிக் குடுத்தேன். "இதில் போவதால் எனக்குப் பத்து நிமிடங்கள் மிச்சம். அதைவிட இந்த வழியில் ஒரு அழகியுடன் வருவது என்றால் இரட்டிப்புச் சந்தோசம்." நான் அவனுக்கு கள்ளப்பாதையைக் காட்டிக் குடுக்க, அவன் மனதில் கள்ள எண்ணங்கள் உதயமாயின.

திரும்பி வரும்போது, ஒழுங்கை வந்தவுடன் பிரிந்து கொண்டோம். நான் முன்பாகவும், ரமணன் சற்றுப் பின்பாகவும் வந்தான். எங்களின் இந்த நாடகம் இன்னமும் ஒழுங்கைக்குள் அரங்கேறும் அளவுக்கு முன்னேறவிலை. ரமணனின் அம்மாவுக்கு மகனை வெளிநாட்டுக்கு அனுப்பும் பரபரப்பு. எங்கள் கீழ் வீட்டில் இருக்கும் வீட்டின் உரிமையாளர், சூரியன் உதிக்க முன்னர் வேலைக்குச் சென்று மறைந்த பின்னர் தான் வீட்டிற்கு வருவார். வீட்டிற்கு வெளிப்புறமாக படிகள் இருப்பதால், அவருக்கு எங்களால் எதுவித தொல்லைகளும் இல்லை. மாதாமாதம் வாடகைப்பணம் போய்ச் சேர்ந்தால் சரி.

ஒருநாள் மாலை, வேலையால் வந்து முழுகிவிட்டு மாரியம்மன் கோவிலுக்குச் சென்றேன். பமீலா கிறிஸ்தவ மதம் என்பதால் கோவிலுக்கு வருவதில்லை. கோவிலின் அருகில் இருந்த கடையில் பால் பழம் தேங்காய் வாங்கும் போது, "அப்பா கனடா போய்ச் சேர்ந்துவிட்டாரா?" என்று கடைக்காரர் கேட்டார்.

"இல்லை" நைரோபியில் தங்கி நிற்கின்றார். இந்த முறையும் அவருக்கு பயணம் சரிப்பட்டு வரவில்லை," என்றேன்.

"பாவம் மனிசன்," என்றார் அவர்.

கற்பூரத்தைக் கொளுத்திவிட்டு, கோவிலின் முன்பிருந்த கல்லில் தேங்காயை ஓங்கி எறிந்தேன். உடைந்த தேங்காயின் பாகங்கள் மூலைக்கொன்றாகச் சிதறி, தமிழரின் வாழ்வு போலப் பறந்தன. கோவிலை வழிபட்ட பின்னர், எதிரே இருக்கும் சைவச் சாப்பாட்டுக்கடையில் எனக்கும் பமீலாவுக்குமாக இடியப்பம், பருப்பு, சொதி பார்சல் வாங்கினேன். வீட்டுக்கு வந்து கொண்டிருந்தபோது, ரமணன் வீட்டு முகப்பில் நின்று கொண்டிருந்தான்.

"எனக்கு வாற புதன்கிழமை ஃபிளைட். நாளைக்குப் பின்னேரம் ஹசென் லூசியாஸ் கதீட்ரல்' சேர்ச்சுக்கு முன்னாலை என்னைச் சந்திப்பாயா?" கேட்டுவிட்டு பதிலுக்குக் காத்திராமல் வீட்டிற்குள் ஓடி மறைந்தான் ரமணன்.

ரமணன் சீக்கிரம் என்னைவிட்டுப் பிரிந்துவிடப் போகின்றானே என்ற கலக்கத்தில் கண்ணீர் வந்துவிட்டது. கடந்த ஆறுமாதங்களில் எத்தனை தடவைகள் அருகருகே இருந்து கதைத்திருப்போம்? ஒரு கைவிரல் எண்ணிக்கைகள்? அனேகமாக அபிநயத்தினால் தானே பேசித் தீர்த்திருப்போம்!

மறுநாள் வேலை முடிந்த கையோடு, நேரே தேவாலயத்திற்குப் போனேன். ரமணன் தேவாலயத்தின் படிக்கட்டுகளில் அமர்ந்திருந்தான். பெருமரமொன்றின் நிழல் ஒன்று படிக்கட்டுகளில் குவிந்து பயம் காட்டிக் கொண்டிருந்தது. நான் சென்று அவனுக்குப் பக்கத்தில் போய் அமர்ந்தேன். அவன் மெதுவாக நகர்ந்து உடலும் உடலும் முட்ட நெருங்கி இருந்தான். சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, ஒரு மாதிரியாக என்னைப் பார்த்தான். என் தோள்மீது மெதுவாகச் சாய்ந்தபடி, என் கைகளைப் பற்றினான். கடின உழைப்பை அறியாத அவனது கைவிரல்கள் பசுந்தாக இருந்தன.

"என்னைத் திருமணம் செய்து கொள்வாய் தானே?" உணர்ச்சி மேலிட என்னை இறுக அணைத்தான்.

நெடுநேரம் கதைத்தபடி இருந்தோம். இருள் சூழ்வதற்குள் வீட்டிற்குக் புறப்பட்டோம். ஒற்றையடிப்பாதை வந்தவுடன், ரமணன் என்னுடைய கையைப் பிடித்து ஆட்டிக்கொண்டு நடந்தான். எங்கள் முன்னே அசைந்தாடிய நிழல், திடீரென்று ஒரு ஆக்டோபஸ் போன்று விரிந்து என்னை நெருக்கியது.

உடம்பு சிலிர்க்க முத்தமிட்டான். உதடும் உதடும் சந்தித்ததில் ஆன்மாக்கள் ஐக்கியமானது. நான் அவனது முதுகை வருடினேன். பள்ளமும் திட்டியுமாக ஆயிரம் கிழிசல்களுடன் அவன் அணிந்திருந்த பெனியன் என் வருடலைத் தடை செய்தது.

மறுநாள் வேலை முடிந்து வரும்போது, அவனுக்கு சில ஆடைகளும், சிறிது பணமும் குடுத்தேன்.

"சாகித்தியா" இதெல்லாம் எதற்கு?"

"பரவாயில்லை... வைத்திருங்கள்."

ரமணன் போவதற்கு முன்னர் மகிழ்ச்சியைத் தந்தான். வருங்கால நம்பிக்கையைத் தந்தான். நான்கு மாதங்கள் தாய்லாந்தில் தவித்துவிட்டு, கனடா போய் சேர்ந்தான். அப்பா புறப்பட்டுப் போய் ஒன்பது பௌர்ணமிகள் கடந்துவிட்டன. இன்னமும் கனடா போய்ச் சேரவில்லை.

ரமணன் கனடா போய்ச் சேர்ந்த மறுநாள், அவனது அம்மா எங்கள் வீட்டின் கதவைத் தட்டினார். எனக்கு தேகம் நடுங்கித் தலை சுற்றியது. சரியாகப் பயந்து விட்டேன்.

"உள்ளே வாருங்கோ... இதிலை இருங்கோ."

"ஒரு விசயம்... ரமணன் சொன்னவன் பிள்ளை. உமக்கு இருபத்தி நாலு வயசுதானே ஆகுது? இரண்டு தங்கைச்சிமார் வேறை இருக்கினம் என்ன? உங்கடை யாழ்ப்பாண முகவரியை ஒருக்காத் தாங்கோ. அம்மாவோடை ஒரு விஷயம் கதைக்க வேணும்."

நான் மாமிக்கு---ரமணனின் அம்மாவுக்கு---ரீ போட்டுக் குடுத்தேன். பின்னர் முகவரியையும் குடுத்தேன். அவர் என்னை வடிவாகப் பார்த்தார். கிட்ட நெருங்கி பாசத்துடன் அரவணைத்தார். நல்லகாலம் பமீலா வெளியில் போய்விட்டாள். இல்லாவிடில் என்னை அறுத்தே கொன்றிருப்பாள்.

ரமணன் கனடாவில் அகதிகள் வரிசையில் ஒன்றானான். மாமியார் ஊருக்குப் போவதற்கு முன் கோயிலுக்குச் சென்று, எனக்கும் பிரசாதம் கொண்டுவந்து தந்தார். ஊர் சென்றவுடன் எங்கள் வீட்டிற்கும் போயிருந்தார்.

அம்மா கடிதம் போட்டிருந்தார். "உன்னைப் பெண் கேட்டு ஒருவர் வந்திருந்தார். உங்கட வீட்டுக்கு முன்னாலை இருந்தவையாம். குடும்பத்தை பொறுப்பாகக் கவனிக்கக்கூடிய அருமையான பிள்ளை எண்டு உன்னைப் புழுகினார். எதுக்கும் அப்பா கனடா போய்ச் சேரட்டும் என்று சொல்லியிருக்கின்றேன். சீதனக் காசு வேண்டுமல்லவா?'

"விசா எடுத்திட்டன்", அகதி அந்தஸ்துக்கு விண்ணப்பித்துவிட்டன் ரமணனின் கடிதங்கள் மகிழ்ச்சியான செய்திகளைத் தாங்கியபடி இடைக்கிடை வருகின்றன.

"குளிர் வைப்பறையில் மைனஸ் 23 இல் வேலை செய்கிறேன். உறைபனி ஆடைகளும், தடித்த கிளவ்ஷ்ம் அணிகின்றேன். என்றாலும் அதற்குள்ளாலும் குளிர் குத்திக் குத்தி ஊடுருவுகின்றன."

"இப்ப இரண்டு வேலைகள் செய்கின்றேன். முதல் வேலை முடிய, பின்னேரம் ஐஞ்சு மணியிலிருந்து இரவு பதினொண்டு வரை றெஸ்ரோரண்டில் வேலை. ரெலிபோன் அடிக்கடி எடுக்க முடியாது."

படவரைஞராக வேலை செய்தவனின் கைகள், கடும் குளிர் பிழக்கும் தேசத்தில் போத்தல்கள் அடுக்குகின்றன, பாத்திரங்கள் கழுவுகின்றன. என் கண்களில் நீர் முட்டி மோதிக்கொண்டிருந்தது.

"இரண்டு பிள்ளைச் சீதனத்தை" விழுங்கிவிட்டு, அங்குமிங்குமாக இழுபறிப்பட்டு, கடைசியில் அப்பா கனடா போய்ச் சேர்ந்தார். அப்பா கனடா போகவென்று கொழும்பு வந்து ஒன்றரை வருடங்கள் உருண்டோடியிருந்தன. அவர் கொழும்பில் இருந்ததை விட, பிற இடங்களில் இருந்த காலம்தான் அதிகம். பாகிஸ்தான் சிறைச்சாலையில் ஆறுமாதங்களும், ஜப்பான் ஹோட்டல்களில் மூன்றுமாதங்களும் இருந்திருக்கின்றார். 'பூமராங்' போல புறப்பட்ட இடத்திற்கு வந்துவிடும் அவர், இந்தமுறை கனடா போய்ச் சேர்ந்தது எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது.

மகிழ்ச்சி நிலைத்திருக்கவில்லை. அப்பா கனடா போய் மூன்றாம் நாள், 'கார்ட் அற்றாக்'கினால் இறந்து போனார். உடல் உதற உள்ளம் உடைந்து போனோம். அப்பாவிற்கு இதற்கு முன்னால் ஒருபோதும் ஹகார்ட் அற்றாக்' வந்ததில்லை. உடல்நலம் சரியில்லை என்றுகூடப் படுத்தது கிடையாது. இப்படித் திடீரென்று இறந்து போவார் என்று நாங்கள் நினைக்கவில்லை. ரமணனே முன்னின்று செத்தவீட்டையும் நடத்த வேண்டியதாயிற்று.

அதற்குப் பிறகு மாமியார் இரண்டு தடவைகள் யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு வந்து போனார். மகன் அனுப்பும் காசைப் பெற்றுக் கொள்வதற்காக வரும் அவர் என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. நான் தான் வலிய அவரிடம் போய்க் கதைத்தேன்.

"நீயும் கொஞ்சம் யோசிச்சுப் பார் பிள்ளை. உனக்கும் சுய அறிவு இருக்கு. பணம் இல்லாட்டி இந்தக் காலத்திலை ஒண்டும் செய்யேலாது. ரமணன் வெளிநாடு போறதுக்குச் செலவழித்த காசை அடைக்க வேணும். அவனுடைய அக்காவையும் கரையேத்த வேணும். அதுக்குப் பிறகும் காத்திருப்பாய் எண்டா இரு. இல்லாட்டி ரமணனை மறந்துவிடு.." சூறாவளி அடித்தது போல பேசி முடித்தார் மாமி. என்ன சொல்லியும் அவர் சமாதானம் கொள்ளவில்லை. ருத்திரதாண்டவம் ஆடிவிட்டு ஊருக்குப் போய்விட்டார். அவர் மீது எனக்கு எந்தவித கோபமும் வரவில்லை. அவரின் நிலையில் அவரால் இதைத்தான் சொல்லமுடியும், செய்ய முடியும்.

'தகப்பன் செத்து இரண்டாம்நாளே பூசி மினுக்கிக் கொண்டு வேலைக்குப் போகிறாள் சாகித்தியா' என்று ரமணனுக்குச் சொல்லியிருக்கின்றார் மாமி. எத்தனை குரூரமான பேச்சு அது. 'சாகித்தியா நல்ல பிள்ளை... பொறுப்பான பிள்ளை' என்றெல்லாம் சொல்லித் திரிந்த அவர், இப்ப அப்பா இறந்துபோன பின்னர் இப்படிச் சொல்கின்றார்.

ரமணன் எனக்கு ரெலிபோன் செய்தான். பொறுமையாக இருக்கும்படி ஆறுதல் சொன்னான். குலுங்கி அழுவதைத் தவிர வேறென்ன செய்யமுடியும். வீட்டை ஈடு வைத்து, காணி நகை எல்லாவற்றையும் விற்று வெளிநாடு போய் இறந்த அப்பாவை நினைத்து அழுதேன். அப்பாவின் இழப்புதான் என்னை மிகவும் வாட்டியது. இடைவழிகளில் அப்பா தேங்கி நின்ற போதெல்லாம், என்னுடைய சேமிப்பும் கரைந்து போய் விட்டது. வாழ்க்கையை நினைத்து பணம் தேடி வேலைக்குப் போனால் பூசி மினுக்குகின்றேன் என்கின்றார்கள்.

கடைசியாக வந்தபோது ரமணனின் அம்மா, "தயவு செய்து இனிமேல்பட்டு என்ரை மகனுக்கு ரெலிபோன் எடுத்துப் போடாதையப்பா" என்று என்னைக் கையெடுத்துக் கும்பிட்டார். நான் அவரின் இந்தத் தாக்குதலை சற்றும் எதிர் பார்க்கவில்லை. அவரது நாக்கு இப்போது நீலம் சுவறி விட்டது.

அதன் பின்பு அவர் கொழும்பு வரும் வேளைகளில், இங்கு வந்து தங்குவதைத் தவிர்த்துக் கொண்டார்.

கடந்த எட்டு மாதங்களாக ஹபொறுமையாக இரு' என்று சொல்லிக்கொண்டிருந்த ரமணன், இப்போது ரெலிபோன் எடுப்பதைத் தவிர்த்து வருகின்றான். கடிதங்களின் வரவும் குறைந்துகொண்டு போனது. ரமணனும் மாறிவிட்டானா?

எல்லா நினைவுகளும் ஒரு பெரு வெள்ளத்தைப் போல பின்னால் துரத்துகின்றன. நானும் ரமணனும் இப்போது அவரவர் குடும்பங்களைக் காக்கும் அவதாரங்களை எடுத்துவிட்டோம். இயற்கையின் சீட்டாட்டம் இப்படி எங்கள் வாழ்வு மீது விளையாடுகின்றது.

கடைசியாக வந்த ரமணனின் கடிதம், அடிவானத்தில் ஒரு கீற்றாக இருந்த நம்பிக்கையையும் தகர்த்துவிட்டது. இவ்வளவு நாட்கள் காத்திருந்ததற்கு எனக்குக் கிடைத்தது இதுதானா?

'என்னை மறந்துவிடு சாகித்தியா'

மொட்டைமாடியில் இருந்த கதிரைக்குள், மனம் அந்தரப்பட்ட சீவன் போல ஊசலாட நினைவுகளுக்குள் மூழ்கிப் போயிருந்தேன். பமீலா வந்ததை நான் கவனிக்கவில்லை. திடுக்கிட்டுப் பார்த்தபோது, பமீலா சென்று இரண்டு மணி நேரம் கடந்திருப்பதை அறிந்தேன். திடீரென்று கதவைத் திறந்துகொண்டு அறைக்குள் நுழைந்தேன். நிலத்திலே குந்தியிருந்து, முகத்தை முழங்கால்களுக்கிடையே புதைத்தபடி இருந்தாள் பமீலா. என்னுடைய காலடிச்சத்தம் கேட்டதும் முகத்தை நிமிர்த்தி என்னைப் பார்த்தாள். எழுந்து, ஓடி வந்து என்னைக் கட்டிப் பிடித்தாள்.

"ரமணன்ரை கை விரல்கள் எல்லாம் குளிரில விறைச்சு அழுகிப் போச்சாம்" சொல்லிவிட்டு பெரும் குரலெடுத்து அழத் தொடங்கினாள் பமீலா.

அடுக்கடுக்காக வந்த துயரத்தில் நான் செயலற்றுப் போனேன். அதற்காகத்தான் ரமணன் ஹஎன்னை மறந்துவிடு' எனறானா? என் வாழ்க்கையின்மீது அவன் கொண்ட கரிசனம் என்னை அதிர்ச்சியடைய வைக்கின்றது. அவனின் தூய அன்பைத் தவறாக எடை போட்டேனே! துயரம் ஒருபுறம், சுமை மறுபுறம். குருவி தலையில் பனங்காய் போல, மனம் இரும்புக் குண்டாய்க் கனக்கிறது.

"சாகித்தியா.. நீ உன்ரை குடும்பத்தையும் பாக்க வேணும். ரமணனின்ரை குடும்பத்தையும் பொறுப்பெடுக்க வேணும். உன்னால முடியும் எண்டாச் சொல்லு, நான் எப்பாடு பட்டாவது என்னாலான முயற்சிகளைச் செய்வன்."

நான் பமீலாவை இறுக அணைத்துக் கொண்டேன். மௌனமாக அழுதேன். மௌனம் சம்மதம் என்பதை பமீலா அறிவாள். *

# ஜனநாயக வழிக்கு திரும்பும் 'பாஸ்க்' போராட்டமும் ஆயுதப் போராட்டத்தை நிறுத்தும் 'எட்டா' அமைப்பும்

## தேசிய சுயநிர்ணயத்தை இழக்கிறதா ஐரோப்பாவின் மூத்தகுடி?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

ஐரோப்பாவில், ஸ்பெயின் நாட்டில், தனித்துவமானவர்களும், ஐரோப்பாவின் மூத்த குடியான பாஸ்க் மொழி பேசும் மக்களுக்காக, தனிநாடு அமைக்க போராடும் 'எட்டா' அமைப்பு ஐரோப்பிய யூனியனால் பயங்கரவாத இயக்கமாக தடை செய்யப்பட்டாலும், அதன் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தாலும், ஒரு நூற்றாண்டு கால பாஸ்க் விடுதலைப்போராட்டம் இன்று வரை அரசியல்ரீதியாக தொடர்கின்றது.




ஸ்பெயினில் பாஸ்க் போராளிகள் அமைப்பான "எட்டா" தனிநாட்டுக்கான தமது போராட்டத்தில் "ஆயுத வழியை" இனிமேல் கையாளப் போவதில்லை என 2011 ஆண்டில் அறிவித்த போதிலும், பாஸ்க் இன மக்களின் பிராந்தியங்களில் அரசியல் பதற்றமான சூழ்நிலை இன்னமும் உள்ளது.

சர்வதேச, மற்றும் ஐரோப்பிய நாடுகளின் அழுத்தங்களினால் "ஜனநாயக வழிக்கு" தாம் திரும்புவதற்காக இந்த முடிவைத் மேற்கொண்டதாக அவர்கள் தெரிவித்தனர். தமது கோரிக்கைகளுக்கு ஜனநாயக முறையிலேயே தீர்வு காணலாம் என நம்புவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

**ஜனநாயக வழிக்கு திரும்புதல்:**

கடந்த 40 ஆண்டுகளாக எட்டா போராளிகளால் முன்னெடுக்கப்பட்டு வந்த ஆயுதப் போரில் பல நூறு மக்கள் கொல்லப்பட்டனர். 1959 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட எட்டா அமைப்பு வடக்கு ஸ்பெயினின் ஏழு பிரிவுகளிலும், பிரான்சின் தென்மேற்குப் பகுதியிலும் தனிநாடு கோரிப் போராடியது.

எட்டா 1989, 1996, 1998 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் போர்நிறுத்தங்களை அறிவித்தது. இறுதியாக 2010 செப்டம்பர் 5, அன்று, எட்டா புதியதாக போர்நிறுத்தத்தை அறிவித்தது, அது இன்னும் நடைமுறையில் உள்ளது, மேலும் 2011 அக்டோபர் 20 அன்று, எட்டா தன் "ஆயுத செயற்பாடுகளின் நிறுத்தத்தை உறுதிபடுத்தி" அறிவித்தது.

2012 நவம்பர் 24 இல், ஆயுதக் குழுவைக் கலைக்கவும் அதன் நடவடிக்கைகளை நிறுத்தவும் ஒரு "உறுதியான முடிவுக்குவர" பேச்சுவார்த்தைக்கு தயாராக உள்ளது என அறிவித்தது. 2017 ஏப்பிரல் 7 ஆம் திகதி இந்தக் குழுவானது தன் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் அனைத்தையும் ஒப்படைத்ததுடன், அதிகாரப்பூர்வமாக நிராயுதபாணியான அமைப்பாகவும் அறிவித்தது.

ஸ்பெயினில் எப்படி கட்டலோனியா மக்கள் ஒரு மாநிலம் என்றளவில் இருக்கிறார்களோ அதைவிட சற்று கூடுதலான அதிகாரத்தோடு பாஸ்க் இன மக்களும் இருக்கிறார்கள்.

**கட்டலோனியா - பாஸ்க் மக்களின் போராட்டம்:**

ஸ்பெயினில கட்டலோனியா மக்கள் தங்கள் விடுதலைக்கான போராட்டத்தை தொடக்கம் முதலே ஜனநாயக வழியில் மட்டுமே நடத்திக் கொண்டிருந்தனர். ஆனால் பாஸ்க் மக்களோ மிகப்பெரும் ஆயுதப் போராட்டத்தை நடத்திவிட்டு தற்காலிகமாக போர் நிறுத்தத்தை அறிவிப்பு செய்துவிட்டு ஜனநாயக வழியில் தங்கள் கோரிக்கைக்கு தற்போது குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

பாஸ்க் மொழி பேசும் மக்களின் ஸ்பெயினுக்கு எதிராக தனிநாடு கேட்டு போராடி வந்த இயக்கத்தின் பெயரே நுவுயு எட்டா (தாயகத்திற்கும் விடுதலைக்குமான இயக்கம்).

1938இல் சர்வதிகாரி பிரான்சிஸ் பிராஸ்கோ ஸ்பெயினின் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு கட்லோனியாவை எப்படி எல்லா விதத்திலும் ஆக்கிரமித்தனரோ, அப்படியே பாஸ்க் மொழியும் தடை செய்யப்பட்டது. எல்லா உரிமைகளும் காலில் போட்டு மிதிக்கப்பட்டது. எனவே இந்த ஒடுக்குமுறைக்கு எதிராக பிஎன்யு என்றழைக்கப்படுகிற பாஸ்க் தேசியக்கட்சி ஜனநாயக வழியில் முதலில் போராட்டத்தை முன்னெடுத்தது.

ஜனநாயக வழிப்போராட்டங்களில் எவ்வித நன்மையும் சர்வதிகாரி ஆட்சியில் கிடைக்கப் போவதில்லை என்று உணர்ந்த பிஎன்யு- வின் மாணவர் அமைப்பு போராளிகள் ஆயுதப் போராட்டத்தை நடத்துவது என்று தீர்மானித்து உருவாக்கிய அமைப்பு தான் எட்டா.

**ஐரோப்பாவின் மூத்தகுடி பாஸ்க் மொழி - 'எயுஸ்கரா'**

ஸ்பெயினில் கஸ்திலியன் (ஸ்பானிய மொழி), கத்தலான், கலேக்கோ, பாஸ்க், என்ற நான்கு வேறு மொழி பேசும் இனங்கள் வாழும் நாடாகும். இருப்பினும் ஸ்பானிய மொழி மட்டுமே உத்தியோக பூர்வ மொழியாக இருந்து வருகின்றது.

பாஸ்க் மொழியை அவர்கள் மொழியில் எயுஸ்கரா என அழைப்பர். இந்த மக்கள், மிக நீண்ட காலமாகவே தமது உரிமையயை விட்டுக்கொடாது, தனிநாடு கோரிப் போராடி வருகின்றனர். அதனை ஆயுதப் போராட்டமாக முன்னெடுத்தது 'எட்டா' அமைப்பாகும். பாஸ்க் மொழி பிற ஐரோப்பிய மொழிகளோடு தொடர்பில்லாத தனித்துவமான மொழியாகும். தற்கால ஐரோப்பியர்கள் வந்து குடியேறிய காலத்திற்கு முன்பே பாஸ்க் இன மக்கள் வாழ்ந்து வந்ததற்கான சான்றுகள் உள்ளன. இதனால் ஐரோப்பாவின் முத்த குடியென்றும் இவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

பாஸ்க் மக்களின் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் காக்க தனிநாடு வேண்டி ஸ்பெயின் ஆதிக்கத்தில் உள்ள தெற்கு பாஸ்க் நாட்டுப் பகுதியில் தொடர் தாக்குதலில் ஈடுபட்ட ஒரு ஆயுதக் குழுவாக எட்டா உருவானது. பாஸ்க் தேசிய விடுதலை இயக்கத்தின் பிரதான குழுவாக எட்டா உள்ளது. மேலும் பாஸ்க் போராட்டத்தின் மிக முக்கியமான செயற்பாட்டாளராகவும் உள்ளது.

**ஆயுதப் போராட்டமாக வளர்ச்சி :**

எட்டா விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக பரிணமித்த போது அது பலரது கவனத்தை ஈர்த்தது. ஸ்பெயினில் பாஸிஸ சர்வாதிகார ஆட்சி நடந்ததும், அதனை உள்நாட்டு மக்கள் மட்டுமல்ல பிற ஐரோப்பிய நாடுகளும் விரும்பாததும் பரந்த ஆதரவைப் பெற்றுக்கொடுத்தது.

1973 ம் ஆண்டு ஸ்பானியப் பிரதமர், மரணப்படுக்கையில் இருந்த சர்வாதிகாரி பிராங்கோவினால் தனது அரசியல் வாரிசாக முன்மொழியப்பட்டவர்தான் பிளாங்கோ. வருங்கால சர்வாதிகாரியை கொலை செய்யத் திட்டம் தீட்டியது எட்டா . பிளாங்கோ அடிக்கடி போகும் தேவாலயத்திற்கருகில் இருந்த வீட்டை எட்டா கொரில்லாக்கள் வாடகைக்கு எடுத்தனர். அங்கிருந்து பிளாங்கோவின் வாகனம் நிறுத்தும் வீதிவரை சுரங்கம் தோண்டினர். குறிப்பிட்ட நாளில் சுரங்கத்தினுள் வைத்த குண்டுகள் வெடித்து பிளாங்கோ ஸ்தலத்திலேயே மரணமுற்றார். இந்தப் பிரமிக்கத்தக்க தாக்குதற் சம்பவம் ஸ்பெயின் முழுவதும் எட்டாவின் புகழ் பரவக் காரணமாயிற்று. இதன் பின் ஸ்பெயினில் சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வரவும் பாராளுமன்ற ஜனநாயகம் ஸ்தாபிக்கப்படவும் இத்தாக்குதல் வழிகோலியது.

புதிதாகப் பதவியேற்ற அரசாங்கம் பாஸ்க் பிரதேசத்திற்கு சுயாட்சி வழங்குவதாக அறிவித்தது. எயுஸ்கரா மொழி பாடசாலைகளில் கற்பிக்க அனுமதி வழங்கப்பட்டது. ஆயினும் ஜனநாயக அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை தயங்கித் தயங்கி நடைமுறைக்குக் கொண்டு வந்தது. மாநில அரசுக்கான அதிகாரங்களை கைமாற்றுவதில் இழுபறி நிலையேற்பட்டது. எட்டாவிற்கும் அரசுக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையும் முடிவற்று இழுபட்டது. மாயையிலிருந்து விடுபட்ட எட்டா உறுப்பினர்கள் மீண்டும் போராட்டப் பாதையை நாடினர்.

எட்டாவின் மத்திய, தென் அமெரிக்க நாடுகளில் தலைமறைவாக இயங்கிய உறுப்பினர்கள் கண்டுபிடிக்கப்பட்டு நாடுகடத்தப்பட்டனர். அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் தமது பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் எட்டாவின் பெயரையும் சேர்த்துள்ளன. இராணுவ, அரசியல் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். கட்சி அரசியல் பிரதிநிதித்துவம் கூட தடைசெய்யப்பட்டது.

இருப்பினும் எட்டா பாஸ்க் விடுதலைப் போராட்டத்தை 21 ம் நூற்றாண்டிற்கு எடுத்து வந்து விட்டது என்பது உண்மையே.

**பயங்கரவாதக் குழு என முத்திரை :**

அமெரிக்காவில் 2001 செப்டம்பரில் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்ட பிறகு உலகின் போக்கு மாறத் துவங்கியது. ஆயுதந்தாங்கிய போராளி இயக்கங்களின் நியாயங்கள் எல்லாம் கணக்கில் கொள்ளாமல் அனைத்து இயக்கங்களும் பொதுவாக ஒட்டுமொத்தமாக தடை செய்யப்பட்டன. இதனால் எட்டாவின் ஆயுதப் போராட்டம் கடுமையான நெருக்கடியைச் சந்தித்தது. எட்டாவின் போராட்டத்திற்கு முதலில் ஆதரவாக இருந்த பிரான்சு பிறகு ஸ்பெயினுடன் இணைந்துகொண்டு பாஸ்க் விடுதலைப் போராட்டத்தை எதிர்த்தது. மேலும் எட்டாவின் 40 ஆண்டு கால தொடர் ஆயுதப் போராட்டம், அம்மக்களையே சோர்வடைய வைத்து விட்டது.

ஐரோப்பிய நாடுகளும் தங்களுக்குள் ஒப்பந்தம் செய்து கொண்டு அரசியல் கைதிகளை அந்நாட்டிடம் ஒப்படைக்கத் தொடங்கின. இதனால் எட்டாவின் அரசியல் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். அவர்களின் ஆயுதக் குவியல்கள் பறிமுதல் செய்யப்பட்டன. எனவே, அரசியல் ரீதியாக இயக்கம் பலவீனமடையத் தொடங்கியது.

இதனால் போராட்டத்தில் தோற்பதைவிட பின் வாங்குவதே சிறந்தது என்று எட்டா வேறு வழியின்றி தன் ஆயுத போராட்டத்தைக் கைவிட்டது. 2017 ஏப்பிரல் 7 ஆம் திகதி இந்தக் குழுவானது தன் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் அனைத்தையும் ஒப்படைத்ததுடன், அடுத்த நாளிளில் இருந்து அதிகாரப்பூர்வமாக நிராயுதபாணியான அமைப்பாகவும் அறிவித்தது.

**இரட்டைக் கோபுரத் தாக்குதல்:**

அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பிறகு அமெரிக்கா மட்டுமின்றி ஐரோப்பிய நாடுகளும் பயங்கரவாதத்திற்கெதிரான போர் என்ற போர்வையில் தத்தமது நாடுகளில் இயங்கிக் கொண்டிருந்த இயக்கங்கள் மீது தடை விதித்தன. பலர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்பட்டனர்.

அத்துடன் ஐரோப்பிய நாடுகள் தங்கள் நாடுகளில் நடக்கிற போராட்டங்களை ஒடுக்குவதற்காக "ஐரோப்பிய காவல் துறையையே " உருவாக்கிக் கொண்டன. குற்றங்களை விசாரிக்க ஐரோப்பிய நீதிமன்றத்தையும் அமைத்துக் கொண்டன. ஐரோப்பாவில் இருக்கக் கூடிய நாடுகளில் இனி ஒரு நாடு தனியாகப் பிரிந்து விடக்கூடாது என்பதில் இன்று வரை கவனமாக இருக்கின்றன.

எனவே,விடுதலைக்காகப் போராடுகிற இயக்கங்களை ஒடுக்குவதில் தங்களுக்குள் இணைப்பை வைத்துக் கொண்டன. " போராட்ட தளங்களை" தங்கள் நாடுகளுக்குள் அமைத்துக் கொள்ளாதவாறு பார்த்துக் கொண்டன. பண பரிவர்த்தனைகளையும் தடுத்து விட்டன. இவையெல்லாம் பாஸ்க் இன மக்களின் விடுதலைப் போராட்டத்தை நலிவடையவிட்டது.

அதிலும் மார்க்சியக் கண்ணோட்டத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பை உள்ளடக்கிய எட்டாவின் பாஸ்க் தனிநாடு ஆயதப் போராட்டத்தை கடுமையாக ஒடுக்கினர். ஸ்பெயின், பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய மாநிலங்கள்,ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றால் எட்டாவை பயங்கரவாதக் குழு என முத்திரைக் குத்தின.

இதனால் உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊடகங்கள் இந்தக் குழுவை "பயங்கரவாதிகள்" என்று குறித்தன. ஸ்பெயின், பிரான்ஸ் மற்றும் பிற நாடுகளில் 300 க்கும் மேற்பட்ட இதன் உறுப்பினர்கள் சிறைகளில் தற்போதும் உள்ளனர்.

**ஆயுதம் போராட்டம் கைவிடல்**

போராட்டத்தில் தோற்பதைவிட பின் வாங்குவதே சிறந்தது என்றடிப்படையில் எட்டா தன்னுடைய ஆயுதம் போராட்டத்தை கைவிட்டது. ஆனாலும் பாஸ்க மக்களின் விடுதலை உணர்வு வளர்ந்து கொண்டே தான் இருக்கிறது. உலகம் முழுவதும் விடுதலைக்காகப் போராடுகிற மக்களுக்கு இன்றும் ஆதரவை வழங்கிக் கொண்டு தான் இருக்கின்றனர்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


கல்வி tv CHANNEL

1) C 2) E 3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) 6 தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

கல்வி tv CHANNEL-1

**28.08.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**28.08.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# வடக்கு, கிழக்கு தனித்து இருப்பதே நிரந்தர தீர்வு!

## ஹரீஸ் எம்.பி. கூறுகின்றார்



மட்டக்களப்பு, ஓக. 28

"சம்பந்தன் ஐயா ஒரு காலத்தில் குறிப்பிடுவார் வடக்கு - கிழக்கை இணைத்து அதில் முஸ்லிம் முதலமைச்சரை நியமிப்போம் என்று. அது அவரது எண்ணம். அது நிரந்தர தீர்வு அல்ல. நிரந்தர தீர்வு வடக்கு, கிழக்கு இப்போது இருப்பது போன்று தனித்தனியாக இருப்பதே."

- இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இளைஞர்கள் சந்திப்பில் உரையாற்றிய எச்.எம்.எம். ஹரீஸ் எம்.பி., தொடர்ந்தும் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்-

காலம் எமக்குச் சாதகமாக அமைந்திருக்கும்போது விதண்டாவாதம் பேசிக்கொண்டு அமைதியாக இருக்க முடியாது என்பதனால் காலத்தை கவனத்தில் கொண்டு துரிதமாக இயங்க ஆரம்பித்துள்ளோம். விமர்சனங்களுக்கு அஞ்சி கோழைத்தனமாக ஒதுங்க முடியாது. வரலாற்றில் எப்போதும் இல்லாதவகையில் ஒரு நல்ல நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளது. ஏப்ரல் அரகலவின் பின்னர் பெரும்பான்மை மக்கள் மத்தியில் சிறுபான்மை மக்கள் தொடர்பில் நல்லபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது. எனவே, இந்தக் காலகட்டத்தில் தமிழ் - முஸ்லிம் சமூகம் இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப உதவ வேண்டிய தருண மிது. அதற்காக மத்தியிலும் அதிகார பரவலாக்க முறையை உருவாக்க வேண்டும். இப்போது அமைச்சர் பதவி என்பது கணக்கில்லா நிலைக்கு வந்து விட்டது. சமூகத்தின் அதிகாரம் ஓங்க முதல் மூன்று இடங்களுக்குள் ஒன்றில் நாம் அமர வேண்டும். அதுதான் தமிழ் - முஸ்லிம் ஆகிய இரு சமூகத்திலிருந்தும் இரு உப ஜனாதிபதி பதவிகள். இந்த நிலைப்பாட்டை தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் கடந்த 2000 ஆம் ஆண்டு அரசமைப்பு நகலாக பாராளுமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

ஜனாஸாக்கள் பற்றி எரிந்தபோது அந்தக் குடும்பங்கள் அடைந்த வலியை எமது பிரமுகர்கள் உள்ளார்ந்தமாக உணர்ந்திருக்கவில்லை. அதிலிருந்து சமூகத்தைக் காக்க நாங்கள் ரஷ்யாவின் புடினிடமோ அல்லது அமெரிக்கவின் ஜோ பைடனிடமோ தீர்வை கோர முடியாது. அன்று அதற்கான தீர்வைத் தரும் அதிகாரம் ஜனாதிபதியாக இருந்த கோட்டாவிடமே அன்று இருந்தது. அவர் பேயாக, பிசாசாக இருந்தாலும் கூட தீர்வு அவரிடம்தான் இருந்தது. அதனால் தான் சமூகத்தின் ஏச்சுக்களுக்குப் பயந்துகொண்டு கோழைத்தனமாக ஒதுங்கியிராமல் துணிந்து எங்களைப் பலிகொடுத்து அந்த நாட்களை வெற்றி கொண்டோம். கடந்த காலங்களில் சமூக நலனுக்காக நல்ல கருத்துக்களை முன்வைத்த தலைவர் அஷ்ரப் புக்கே முட்டை வீசிய சமூகத்திலிருந்து பாராளுமன்றம் சென்ற நாங்கள் பழிச்சொற்கள் வரும், அபாண்டங்கள் வரும், ஏச்சுப்பேச்சுக்கள் வரும் என்பதெல்லாம் தெரியாமல் அரசியல் செய்யவில்லை. சமூகத்தின் வலியைப் போக்க அவர்களுடன் சென்று பேசினோம்.

அதன் பலனாக ஜனாஸா எரிப்பை நிறுத்தினார்கள். மார்க்க சட்டங்களில் கை வைப்பதிலிருந்து பின்வாங்கினார்கள். காதி நீதிமன்ற விவகாரத்தில் அவர்கள் பின்வாங்கினார்கள். அவைகளெல்லாம் சமூகத்துக்குக் கிடைத்த நன்மைகளே. 20 இல் வலியுறுத்தப்பட்ட விடயம் தலைவர் அஷ்ரப் விரும்பிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையே.

மு.கா. தலைமைத்துவ கோட்பாட்டை நாங்கள் மீறி செயற்பட வில்லை. மஜ்மா நகரில் 4 ஆயிரத்துக்கு அதிகமான ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. இவைகளெல்லாம் நாங்கள் 20 இற்கு ஆதரவளித்ததன் மூலம் அந்தப் பிசாசுகளிடமிருந்து பெறப்பட்ட நன்மை கள்.

புதிய ஜனாதிபதியாக ரணில் தெரிவானவுடன் அவரிடம் எங்களின் சொந்தச் சலுகைகள் தொடர்பில் நாங்கள் பேசச் செல்லவில்லை. சமூகத்தின் முக்கிய பிரச்சினைகளுக்கான தீர்வையே முன்வைத்தோம். அதில் முக்கியமாக அமைந்த தடைசெய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புக்களை பற்றி எடுத்துரைத்தோம், மீனவர்கள், விவசாயிகளின் பிரச்னைகள், காணிப் பிரச்சினைகள், நிர்வாக எல்லைப் பிரச்னைகளை பற்றிப் பேசினோம். அதுபோல் பல நூற்றுக் கணக்கான பிரச்னைகளைப் பேசியுள்ளோம். நாங்கள் முன்வைத்த பிரச்னைகளைத் தீர்த்துக் கொடுக்குமாறு குறித்த இலாகாக்களுக்கான அமைச்சர்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். அதில் இப்போது தடைசெய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புக்களின் தடைநீக்க நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. மீனவர்கள் - விவசாயிகளின் எரிபொருள் பிரச்னைக்கான தீர்வு கிட்டவுள்ளது-என்றார். (அ)

# விற்பனைக்கு காத்திருக்கும் மிகப் பெரிய மாணிக்கக்கல்



கொழும்பு, ஓக. 28

ஆசியாவின் மிகப் பெரிய மாணிக்கக்கல் எனக் கூறப்படும் இரத்தினபுரியில் கண்டெடுக்கப்பட்ட அரனுல் இரத்தினக்கல் ஆறு மாதங்களுக்கு முன் சுவிற்சர்லாந்துக்கு கொண்டு செல்லப்பட்டபோதிலும் இதுவரை விற்பனை செய்யப்படவில்லை என இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை தெரிவித்துள்ளது.

விற்பனைக்காகவோ அல்லது பரிசோதனைக்காகவோ எடுத்துச் செல்லப்பட்ட இந்த மாணிக்கத்தின் பெறுமதி 2000 கோடி ரூபாவுக்கும் அதிகம் என அதிகார சபையின் தலைவர் திலக் வீரசிங்க ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இரத்தினம் மற்றும் நகைச் சட்டத்தின் கீழ் ஆய்வு அல்லது விற்பனைக்காக எடுக்கப்பட்ட இரத்தினம் மூன்று மாதங்களுக்குள் மீளக் கொண்டு வரப்பட வேண்டும். ஆனால் இந்த இரத்தினத்தை சுவிற்சர்லாந்தில் வைக்க கூட்டுத்தாபனம் கால அவகாசத்தை நீடித்துள்ளது. (அ)

# பாதாளக் குழுக்களை உடன் கட்டுப்படுத்துக!

## பொலிஸாருக்கு அமைச்சர் பணிப்பு

கொழும்பு, ஓக. 28

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் வர்த்தகத்தையும் பாதாள உலகக் குழுவினரையும் முற்றாகக் கட்டுப்படுத்துமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸாருக்கு விசேட அறிவிப்பொன்றை விடுத்துள்ளார்.

நேற்று முன் தினம் முற்பகல் அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், தென் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண உள்ளிட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் கோஷ்டியைக் கட்டுப்படுத்துவதற்கு முழுமையான அதிகாரத்துடன் செயற்படுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)



## ஜேர்மன்...

ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் கூட்ட ஏற்பாட்டாளரும் ரெலோ பேச்சாளருமான குருசாமி சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் ஸ்ரீதரன், கோவிந்தன் கருணாகரம் மற்றும் ஸ்ரீகாந்தா ஆகியோர் பிரத்தியேக காரணங்களால் பங்குபெற்ற முடியவில்லை.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னராக, ஐநா மனித உரிமைப் பேரவையில் முக்கிய நாடாகவும், ஐ.நா பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடாகவும் இருக்கும் உலக வல்லரசுகளில் ஒன்றான ஜேர்மனியுடன் நடத்தப்பட்ட இந்த பேச்சுவார்த்தை அரசியல் ரீதியாகவும் இராஜதந்திர ரீதியாகவும் மிகவும் முக்கியம் வாய்ந்தது தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கூறினர்.

தமிழ் மக்கள் சார்ந்த பல்வேறு விடயங்கள் இதில் ஆராயப்பட்டன. தற்பொழுது ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலையை தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது. ஐ.நா மனித உரிமைப் பேரவையில் பிரதான நாடாக அங்கம் வகிக்கும் ஜேர்மனி, தமிழ் மக்கள் சார்ந்து ஆதரவு நிலைப்பாட்டில் தொடர்ந்தும் செயல்பட்டு வருவதற்காக நன்றி தெரிவிக்கப்பட்டது.

மனித உரிமை ஆணையாளரின் 46/1 அறிக்கையில் பரிந்துரைக்கப் பட்ட பிரகாரம் இலங்கை விவகாரத்தை சர்வதேச நீதிமன்றத்திற்கு பாரப் படுத்துவதற்கான கோரிக்கையை ஐ.நா பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்க வேண்டும் என்ற வேண்டுகோள் தமிழ் கட்சித் தலைவர்களால் பிரதானமாக முன்வைக்கப்பட்டது.

ஐ.நாவில் பல்வேறு பிரேரணைகள் நிறைவேற்றப் பட்ட போதிலும், அவை இலங்கை அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் நிராகரிக்கப்பட்டாலும் விடயங்கள் இன்று வரை நடைமுறைப் படுத்தப் படாமல் இருப்பதை அவதானிக்க முடிகிறது என்று தமிழ் கட்சித் தலைவர்களால் சுட்டிக் காட்டப்பட்டது.

அரசியல் கைதிகள் விடுதலை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், காணி அபகரிப்பு, இன குடிப் பரம்பல் சிதைப்பு, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுகள் நடைபெறுகின்றமை, புனர் வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் எதிர்கொள்ளும் நிலை என்ற பல அவசரமான பிரச்னைகள் பற்றி பேசப்பட்டது.

நிரந்தர அரசியல் தீர்வுக்கான கோரிக்கைகள் சர்வதேச சமூகம் உட்பட தமிழர் தரப்பு வலியுறுத்தி வந்தாலும் இலங்கை அரசாங்கங்கள் அதை நிறைவேற்றும் நோக்கங்களில் அர்ப்பணிப்பு அற்ற நிலையே தொடர்ச்சியாகக் காணப்படுகிறது.

தற்பொழுது ஏற்பட்டிருக்கும் பொருளாதார சூழ்நிலையில் இருந்து நாடு மீள வேண்டிய தேவை உள்ளது. அதற்கான ஆதரவை தமிழ்த் தரப்புகள் நிபந்தனையின் அடிப்படையில் வழங்குவதற்கு தயாராக உள்ள போதிலும் அரசுதங்கள் உறுதிமொழிகளை நிறைவேற்றுமா என்ற சந்தேகம் காணப்படுவதாகவும், அதேநேரம் சர்வதேச சமூகம் இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் வேளையில் தமிழர்களுடைய அரசியல் தீர்வு பற்றிய கரிசனை கொள்வது நன்மை பயக்கும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

அதற்கு பதில் வழங்கிய திருமதி சபின் சிட்லர், நீதிப் பொறிமுறையை நடைமுறைப் படுத்துவதற்கான ஏற்பாடுகளில் பிரதான நாடுகளுடன் தாங்கள் தொடர்ந்து முயற்சிப்பதாகத் தெரிவித்தார்.

ஐ.நா பொறிமுறைக்கு வெளியிலும் குறிப்பாக ஜி.எஸ்.பி வரிச்சலுகை, இலங்கைக்கான நிதி வழங்கல் என்பவற்றினூடாக தாங்கள் இலங்கையை பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் ஆகியவற்றிற்கு வலியுறுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்

எதிர்வரும் செப்ரெம்பர் மாத ஜெனீவா மனித உரிமை பேரவைக் கூட்டத் தொடரில் தமிழ் மக்களின் சார்பாக கட்சித் தலைவர்களும் பிரதிநிதிகளும் தெரிவித்த பல்வேறு கருத்துக்களை ஜேர்மனி அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதோடு அவற்றை ஐ.நாவில் பிரதிபலிக்கும் வகையில் பிரதான மற்றும் அங்கத்துவ நாடுகளுக்கு தாங்கள் முன்னெடுத்துச் செல்வதாகவும் உறுதி அளித்தார். (அ)

## கோட்டாவை...

கவே போராட்டச் செயற்பாட்டாளர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்து அடக்கி வருகின்றார். ஆனால், இதன் விபரீதத்தை அவர் விரைவில் எதிர்கொள்வார்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: -

அரசுக்கு எதிரான போராட்டச் செயற்பாட்டாளர்களை அடக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லையேல் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நடந்த அவமானத்தைப் போல் இந்நாள் ஜனாதிபதியும் சந்திக்க வேண்டி வரும்.

69 இலட்சம் மக்கள் தனக்கு வாக்களித்தார்கள் என்று மார்தட்டி வீரவசனம் பேசிய கோட்டாபய இறுதியில் இலங்கையைவிட்டு விரட்டியடிக்கப்பட்டார். இன்று எந்த நாடும் அடைக்கலம் கொடுக்காத நிலையில் அவர் மீண்டும் இலங்கைக்கு வர எத்தனிக்கின்றார்-என்றார். (அ)

## செல்வச்சந்நிதி...

ஆரம்பமாகியது. பிரதமகுரு சிவஸ்ரீ உலக குருநாதன் ஐயர் தலைமையில் பூசைகள் இடம் பெற்று மாலை 4:30 மணியளவில் கொடி யேற்றப்பட்டு மஹோற்சவம் ஆரம்பமா னது.

செப்ரெம்பர் 5ஆம் திகதி காலை 9 மணிக்கு பூங்காவனமும், செப்ரெம்பர் 6ஆம் திகதி கைலாச வாகனமும், செப்ரெம்பர் 8ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், செப்ரெம்பர் 9ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

செப்ரெம்பர் 10ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 6 மணிக்கு மௌனத் திருவிழாவும் செப்ரெம்பர் 11ஆம் திகதி பூக்காரர் பூசையும் நடைபெறவுள்ளது. (அ-02)

## ரஞ்சனுக்கு...

நிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பூரண சுதந்திரம் வழங்கப்படவில்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எனினும், தேவைப்பட்டால் ரஞ்சன் ராமநாயக்கவை தேர்தலில் நிற்க அனுமதிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

"ரஞ்சன் தேர்தலில் போட்டியிடுவது தற்போது சாத்தியமில்லை. சட்டப்படி 7 ஆண்டுகளுக்கு அது சாத்தியமில்லை. எனினும், தேவைப்பட்டால் எதிர்காலத்தில் அதற்கான வாய்ப்பு வழங்கப்படலாம். இது போன்ற இரண்டு சந்தர்ப்பங்களில் பீல்ட் மார்ஷலுக்கும் வழங்கப்பட்டது. முதலில், தண்டனை ரத்து செய்யப்படுகிறது. அப்போது முழு சுதந்திரம் வழங்கப்படும். அது காலத்தை பொறுத்தே உள்ளது." என்றும் விஜயதாஸ குறிப்பிட்டார். (அ)

## ரோக்கியோவில்...

இதனை தெரிவித்துள்ளன.

எனினும் இலங்கைக்கான உதவிகள் குறித்து ஜப்பான், இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளை முன்னிலைப்படுத்தி மாநாடு ஒன்று ரணில் விக்கிரமசிங்க ஜப்பானிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே சீனாவின் ஆராய்ச்சி கப்பலின் அம்பாந்தோட்டை வருகை காரணமாக இந்திய- இலங்கை உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளன. (அ)

## மீண்டும்...

தாமதம் ஆகியவையே நீண்ட வரிசைக்கு காரணம் என அமைச்சர் கூறியுள்ளார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப் படாமை காரணமாக மீண்டும் வரிசைகள் உருவாக ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சீன உளவுக்...

நிலையில் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் இதுபோன்ற கடல்சார் பாதுகாப்புக் கவலைகளை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து ஆராய்ந்து முடிவுகளை எடுக்கும் வகையில் புதிய

## வெளிநாடு...

வெளிநாடு செல்ல உள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

ரஞ்சன் ராமநாயக்க நேற்று முன்தினம் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டார்.

அத்துடன் ஏழு ஆண்டுகள் அவர் அரசியலில் ஈடுபட முடியாத தடையேற்பட்டுள்ளது. அவர் அடுத்த ஏழு ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உயர் நீதிமன்றம் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நான்கு ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கியது.

தண்டனைக் காலம் ஒரு வருடமும் 7 மாதங்கள் நிறைவடைந்த நிலையில், ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

அதேவேளை, ரஞ்சன் ராமநாயக்க வெளிநாடுகளில் தொழில் புரியும் தொழிலாளர்கள் சம்பந்தமான நல்லெண்ணத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## கடன்...

பதில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பந்து இலங்கையிடமே என்று சீனா கூறியுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கைக்கு செல்லவேண்டும் எனில், சீனாவிடம் பெற்ற கடன்களை மறுசீரமைப்புக்கு உட்படுத்தவேண்டும் என்ற வலியுறுத்தல் ஏற்கனவே விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் இதனை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறது.

இதற்கு பதிலளித்திருந்த இலங்கை அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட பின்னர், சீனாவுடன் கடன் மறுசீரமைப்பு பேச்சுக்கள் நடத்தப்படும் என்று தெரிவித்திருந்தது.

அத்துடன் இலங்கை, சீனாவிடம் பெற்ற கடன் தொடர்பில் சீனா வியத்தகு முடிவை எடுக்கவேண்டும் என்று அண்மையில் இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

இந்தநிலையில் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்துரைத்துள்ள சீன தூதரக பேச்சாளர் ஒருவர், சீன வங்கிகளுடனான கடன் பிரச்னையை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து மூன்று மாதங்களுக்கு முன்னரே இலங்கை நிதியமைச்சிடம் சீனா தொடர்பு கொண்டதாக குறிப்பிட்டுள்ளார். இது குறித்து விவாதிக்க, தமது வங்கிகளை ஊக்குவித்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

சீனப் பிரதமர் லீ கெகியாங் மற்றும் அப்போதைய இலங்கைப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின்போதும் சீன நிலைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் நிதி அமைச்சுக்கும் பரிந்துரைகளை அனுப்பப்பட்டன.

எனினும் இலங்கையின் நிதியமைச்சிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை.

எனவே பந்து இலங்கையிடமே தற்போது உள்ளது என்று சீன தூதரகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் மொத்த இருதரப்புக் கடன் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 6.2 பில்லியன் டொலர்களாக சர்வதேச நாணய நிதியத்தால் மதிப்பிடப்பட்டுள்ளது.

ஜப்பான் மற்றும் சீனா ஆகியன இலங்கைக்கு அதிக கடன்களை வழங்கியுள்ளன.

இலங்கையின் பொருளாதாரத்தை நிலைநிறுத்துவதற்கு இந்தியா சுமார் 4 பில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

அத்துடன் இந்த ஆண்டு கடன் மற்றும் பரிமாற்றங்கள் மூலம். இலங்கையில் 14 பில்லியன் டொலர் சர்வதேச இறையாண்மை பத்திரக் கடனுக்கும் உள்ளாகியுள்ளது. (அ)

கட்டமைப்பை உருவாக்கவேண்டும் எனவும் மிலிந்த மொறகொட அழைப்பு விடுத்தார்.

சீன உளவுக் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ள நிலையில் தி இந்துவிடம் பேசிய தூதுவர் மிலிந்த மொறகொட, இந்தக் கப்பலுக்கான அனுமதி குறித்து மோடி அரசாங்கத்துக்கு கொழும்பு விளக்கமளித்துள்ளதாகக் கூறினார்.

இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வரும் நிலையில் சீனக் கப்பல் விவகாரத்தால் இலங்கைக்கு அதிக உதவிகளை வழங்கிய இந்தியா-இலங்கை இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்படுவதற்கான சாத்தியமான அறிகுறிகள் தோன்றியுள்ளன.

இலங்கைக்கு வருகை தரும் இந்திய சுற்றுலாப் பயணிகளை எச்சரிக்கும் வகையில் இந்திய வெளிவிவகார அமைச்சு கடந்த வியாழக்கிழமை அறிவித்தல் ஒன்றை விடுத்தது.

இலங்கையில் இருக்கும் இந்திய குடிமக்கள் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்குமாறு இந்திய வெளியுறவு அமைச்சு கேட்டுக்கொண்டது.

புதுடில்லியில் செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய வெளியுறவுத்துறையின் பேச்சாளர் அரிந்தம் பாக்சி இந்த அறிவுறுத்தலை விடுத்தார்.

இலங்கையில் இந்தியர்களின் பாதுகாப்பைப் பாதிக்கும் சம்பவங்கள் குறித்து இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் இலங்கையில் உள்ள உள்ளூர் அதிகாரிகளுடன் தொடர்பில் உள்ளது. இது தொடர்பாக இந்திய குடிமக்களுக்கு வழிகாட்டுதலை வழங்கியுள்ளதாக பாக்சி கூறினார்.

இந்திய குடிமக்கள் இலங்கையில் இருக்கும்போது கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் மிகப்பெரிய ஆதாரமாக இந்தியா இன்னும் உள்ளது. இந்த நிலையில் இலங்கையில் அனைத்து இந்தியர்களுக்கும் அல்லது அங்கு செல்ல நினைப்பவர்களுக்கும் பொதுவான வழிகாட்டுதலாகவே இந்த எச்சரிக்கை இருக்கும் என்று பாக்சி குறிப்பிட்டார். (அ)

## அரசாங்க...

அரசியல் நியமனங்கள், தவறான நிர்வாகம் மற்றும் திறமையின்மை என்பன வழிவகுப்பதாகவும் அவர் சுட்டிகாட்டியுள்ளார்.

தனது ருவிட்டர் தளத்தில் இதனை பதிவிட்டுள்ளார்.

இந்த பதிவில், இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், பெற்றோலிய சேமிப்பு முனையம் ஆகியவற்றில் திறமையான பணியாளர்கள் இருந்தாலும், பெரும்பான்மையானவர்கள் திறமையற்றவர்கள் என்று அவர் தெரிவித்துள்ளார். (அ)

## இலங்கையில்...

தெற்காசிய நாடுகளும் இதேபோன்ற பற்றாக்குறையை எதிர்நோக்கக்கூடும். உணவு, எரிபொருள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வற்கு வெளிநாட்டு நாணயம் இல்லாமல் போனதை அடுத்து, இலங்கை வரலாற்றில் மிக மோசமான வீழ்ச்சியை சந்தித்து வருகிறது. இந்த நிலையில் வழக்கமான உணவைத் தவிர்க்கும் குடும்பங்களால் இந்த நெருக்கடி கடுமையாக உணரப்படுகிறது என்று ஐக்கிய நாடுகள் சிறுவர் அமைப்பின் (யுனிசெவ்) தெற்காசிய இயக்குநர் ஜோர்ஜ் லாரியா-அட்ஜெய் தெரிவித்துள்ளார்.

சிறுவர்கள் பசியுடன் படுக்கைக்குச் செல்கிறார்கள், அவர்களுக்கு அடுத்த உணவு எங்கிருந்து வரும் என்று அவர்களுக்கே தெரியவில்லை என்று அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் இலங்கை தனது 51 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை. இதனையடுத்து தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் பிணை எடுப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது.

ஈழநாடு
Eelanadu

# பாசிசத்தை விதைப்போருக்கு புனர்வாழ்வு அளிக்கவேண்டும்

## வஜிர அபேவர்த்தன வலியுறுத்து



கொழும்பு, ஓக. 28

ஜனநாயகத்துக்கு எதிராக நாட்டில் பாசிசத்தை விதைப்பவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

காலிமுகத்திடல் போராட்டம் மிகவும் அழகான போராட்டம். அந்தப் போராட்டத்தின் நோக்கம் ஒரு பிரிவினருடையதல்ல. அதற்கு பல அரசியல் கட்சிகள்,வர்த்தகர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அனைத்து சக்திகளும் ஒரே நோக்கத்திற்காக ஒன்றிணைந்ததை காண முடிந்தது. அந்த நோக்கத்திற்காக செயல்பட்ட மக்கள் பிரிவினருக்கு பல தலைமைகள் காணப்பட்டன.

இறுதியில் தவறான இடத்திற்கு பயணித்தார்கள். இலங்கை சர்வதேசத்தின் பார்வைக்கு மோசமான நாடாகியது. ஒரு சிறு பிரிவினரே அதற்காக செயல்பட்டார்கள். ஜனாதிபதி மாளிகை தனியார் சொத்தல்ல. இலங்கை மக்களின் அடையாளம். வீடியோ காட்சிகளை காண்பித்து இரகசிய இடங்களை யும் உலகுக்கு பகிரங்கமாக்கி னார்கள்.

அரசு தலைவர்கள் ஒரு நாட்டுக்கு விஜயம் செய்யும் போது தங்களுடைய தலைவர்களுக்கு பாதுகாப்பு உள்ளதா என ஆராய்வார்கள். ஆனால் இலங்கை உலகின் முன்னால் சிறுமைப்படுத்தப்பட்டது. நாம் மக்களின் நியாயமான கோரிக்கைகளை எதிர்ப்பவர்கள் அல்ல. அதன் பின்னால் மறைந்து நாட்டின் அமைதிக்கு பாதிப்பு ஏற்படுத்தும் ஜனநாயகத்துக்கு எதிராக பாசிசவாதத்தை விதைப்பவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்க வேண்டும் - என்றார். (அ)

# அரசின் சலுகைகள் எதுவும் கோட்டாவுக்கு கிடைக்காது

## சரத் என்.சில்வா கூறுகிறார்

கொழும்பு, ஓக. 28

அரசியலமைப்பு ரீதியாக முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் எதுவும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கிடைக்காது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவிக் காலம் முடிந்து ஓய்வு பெற்ற ஜனாதிபதியல்ல. அவர் சேவையிலிருந்து விலகிய ஜனாதிபதி என முன்னாள் பிரதம நீதியரசர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு சேவையில் இருந்து விலகிய ஜனாதிபதி ஒருவருக்கு அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள சலுகைகள் எதுவும் கிடையாது எனவும் அவர் கூறினார்.

இதற்கமைய முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லங்கள் உள்ளிட்ட எந்தவொரு சிறப்புரிமையும் கோட்டாபயவுக்கு இல்லை எனவும் சரத் என். சில்வா குறிப்பிட்டார். (அ)

# நில்வள கங்கையில் காணாமல்போன நால்வரில் இருவரின் சடலங்கள் மீட்பு!

கொழும்பு, ஓக. 28

நில்வள கங்கையில் நேற்றுமுன்தினம் நீராடச் சென்ற நிலையில் காணாமல்போயிருந்த நால்வரில் இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம், மாத்தறை - பிட்டபெத்தர பகுதியில் நில்வள கங்கையில், 12 பேர் கொண்ட குழுவினர் நீராடச் சென்ற நிலையில் நால்வர் நீரில் இழுத்துச் செல்லப்பட்டு காணாமல்போயிருந்தனர்.

இதையடுத்து, காணாமல்போனவர்களை மீட்கும் பணிகளை, கடற்படையினர், பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் ஆகியோர் இணைந்து முன்னெடுத்தனர்.

நேற்று இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய இருவரையும் தேடும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# அரசுடன் இணைய பின்னடிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.!

கொழும்பு, ஓக. 28

அரசாங்கத்தில் இணைவதாக அண்மைக்காலமாக பரபரப்பாக பேசப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தற்போது அரசாங்கத்துடன் இணைவதற்கான முயற்சிகளில் இருந்து பின்வாங்கி வருவதாக அறியமுடிகிறது.

நிதியமைச்சர் பதவி கிடைக்காதமையே இதற்கான காரணமென அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

அவருக்கு கொள்கை திட்டமிடல்துறை அமைச்சுப் பதவி வழங்க அரசு முடிவு செய்துள்ளது. ஆனால் அதற்கு அவர் சம்மதிக்கவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அடுத்த வாரம் இடைக்கால வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், அரசாங்கத்தின் அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களை நியமிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# எரிபொருள் நிலையங்கள் சில மூடப்பட்ட நிலையில்

கொழும்பு, ஓக. 28

முன்பதிவு செய்யப்பட்ட எரிபொருள் விநியோகிக்கப்படாமையால் சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

அகில இலங்கை பெற்றோல் நிலைய உரிமையாளர்கள் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

எரிபொருள் பாவனை அதிகரிப்புடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகிலுள்ள வரிசைகள் மீண்டும் அதிகரித்துள்ளதாகவும் அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் தற்போது எரிபொருள் இருப்புக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பெற்றோலிய போக்குவரத்து தாங்கி உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் சாந்த சில்வா தெரிவித்தார். (அ)

# யாசகம் செய்து சேர்த்த பணத்தில் போதைப்பொருள் கடத்திய நபர்!

கொழும்பு, ஓக. 28

யாசகம் செய்து சம்பாதித்த பணத்தில் ஐஸ் போதைப்பொருள் கடத்திய சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் கிருலப்பனை பிரதேசத்தில் நபர் ஒருவர் ஐஸ் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

அங்கு சோதனை நடத்திய பொலிஸ் குழு, சம்பந்தப்பட்ட நபரிடம் ஐஸ் போதைப்பொருளையும் கண்டு பிடித்தனர்.

பின்னர், சந்தேக நபரின் சகோதரி ஒருவரிடம் வீட்டில் உள்ள பணம் குறித்து கேட்டபோது, யாசகம் செய்து சம்பாதித்த பணம் என குறிப்பிட்டுள்ளார். (அ)

# அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதி இடைநிறுத்தம் நல்லது

## கூறுகிறார் மத்திய வங்கி ஆளுநர்



கொழும்பு, ஓக. 28

அத்தியாவசியமற்ற 305 பொருட்களின் இறக்குமதியை தற்காலிகமாக இடைநிறுத்துவது சிறந்த முடிவு என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

நாடு எதிர்கொண்டுள்ள இந்த இக்கட்டான சூழ்நிலையில் இந்த கட்டுப்பாடு அத்தியாவசியமான நடவடிக்கை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வரையறுக்கப்பட்ட அந்நிய செலாவணியையே நாம் பயன்படுத்தவேண்டும் என்றும் குறிப்பாக எரிபொருள், மருந்து, எரிவாயுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அத்தியாவசிய பொருட்களுக்குப் பணத்தை பயன்படுத்தப்பட்டால், இது போன்ற சூழ்நிலையில் மக்களுக்கு பெரும் வசதியாக இருக்கும் என ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

தற்போது நிலவும் சூழ்நிலைக்கு தீர்வு கிடைத்தவுடன், கட்டுப்பாடுகள் கட்டம் கட்டமாக நீக்கப்படும் என மத்திய வங்கியின் ஆளுநர் சுட்டிக்காட்டினார். (அ)

# அரசியல் தீர்வை வலியுறுத்தி வெருகலில் நேற்று போராட்டம்




திருமலை, ஓக. 28

வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வை பெற்றுத் தருமாறு வலியுறுத்தி திருகோணமலை - வெருகல் பகுதியில் நேற்று சனிக்கிழமை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

"100 நாள் செயல்முனைவு " எனும் திட்டத்தின்கீழ் இம்மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த போராட்டம் 27ஆவது நாளாக வெருகல் பகுதியில் இடம்பெற்றது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு இதனை ஏற்பாடு செய்திருந்தது. இதில் மீனவர்கள், விவசாயிகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பெண்கள் அமைப்பினர், இளைஞர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

அத்தோடு வடக்கு-கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்கப்பெற வேண்டுமென தீபமேற்றப்பட்டு பிரார்த்தனையும் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டவர்கள், எங்கள் நிலம் எமக்கு வேண்டும், கருத்துச் சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, அரசியல் உரிமை எமக்கு வேண்டும் உள்ளிட்ட கோசங்களை எழுப்பியிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த மக்கள்-

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி கிடைக்கப்பெறவேண்டும். விவசாயிகள், மீனவர்களின் பிரச்னைகளுக்கு அரசாங்கம் தீர்வு வழங்க வேண்டும். வடக்கு - கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்கப்பெற வேண்டுமென வலியுறுத்தினர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.